2013, February 16 - 28

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under [illegible]/News/72/2013



சரித்திரம் முக்கியத்துவம் வாய்ந்த முடிவு

ஜெனீவாவிலிருந்து அம்பாந்தோட்டை வரை

இடதுசாரி இயக்கங்கள் எதிர் நோக்கும் சவால்கள்


பணிய மறுக்கும் இளந்தலைவர்

குற்றவாளிக்கூண்டில் பிளேட் ரன்னர்

## தேயிலை தொழிற்துறையின் எதிர்காலம்

| | | |
|---|---|---|
| INDIA...............IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA..........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |


யாழ் மண்
Yarl Mann
Connect with Jaffna
வளமான
மண்ணும்
செழிப்பான
வாழ்வும்...
www.yarlmann.lk



- நேற்றைய தினத்திலிருந்து பாடத்தைப் படித்துக்கொள், இன்றைய தினத்துக்காக வாழ், நாளைய தினத்திற்காக நம்பிக்கை கொள். ஆனால், கேள்வி கேட்பதை நிறுத்திவிடக் கூடாது. இதுமிகவும் முக்கியமானது என்பதை மனதில் வைத்திருங்கள்.
- ஒருபோதுமே தவறு செய்யாதவர் ஒருபோதுமே புதிதாக எதையும் செய்ய முயற்சிக்காதவராகவே இருப்பார்.

அல்பேர்ட் அயன்ஸ்ரீன்

# உள்ளடக்கம்

ஜெனீவாவிலிருந்து
அம்பாந்தோட்டை வரை... 09
என்.சத்தியமூர்த்தி

சிங்கள - தமிழ் ஐக்கியத்திற்கு
யார் பயப்படுகிறார்கள்? 13
குமார் டேவிட்

தேயிலை தொழிற்துறையின்
போக்குகளும்
தொழிலாளர்கள் நிலையும் 17
இரா.ரமேஷ்

சமகால இடதுசாரி இயக்கங்கள்
எதிர்நோக்கும் சவால்கள்
பேராசிரியர்
அ.மார்க்ஸுடன் நேர்காணல் 22

இலங்கைப் பொருளாதாரம் 29
முத்துக்கிருஷ்ணன் சர்வானந்தா

சரித்திரம் முக்கியத்துவம்
வாய்ந்த பாப்பரசரின் முடிவு 32

அரசியல் துறவறம்
போவாரா குஷ்பு? 36
எம்.காசிநாதன்

டில்லி டயறி 42
எம்.பி.வித்தியாதரன்

நெருக்குதல்களுக்கு பணிய
மறுக்கும் வட கொரியாவில்
இளம் தலைவர் 48


கமலினால் இந்தியாவிலிருந்து
வெளியேற முடியுமா? 51
ரி.ஜே.எஸ்.ஜோர்ஜ்

குற்றவாளிக்கூண்டில்
பிளேட் ரன்னர் 54
ரி.எஸ்.கணேசன்

அறிவியல் களரி 58
டாக்டர் எம்.கே.முருகானந்தன்

கடைசி பக்கம் 64
க.சட்டநாதன்





22



36



42




*Samakalam focuses on issues that affect the lives of people o*

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

சமகாலம்

2013, பெப்ரவரி 16-28


17


09


32


48


54


58


64

*Sri Lanka, the neighbourhood and the world*

## ஆசிரியரிடமிருந்து...

# பொதுபலசேனா பற்றி...

திடீரென்று பொதுபலசேனா என்றதொரு அமைப்பு இலங்கையில் சிறுபான்மையினத்தவர்கள் கொண்டிருக்கக்கூடிய உரிமைகளின் எல்லைவரையறைகள் குறித்துப் பேச ஆரம்பித்திருக்கிறது. அதன் கோரிக்கைகளுக்கும் கருத்துகளுக்கும் ஒரு கனதி இருப்பது போன்று ஆட்சியதிகாரபீடமும் கவனத்தை திருப்புவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

சிறுபான்மை இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை மூட்டிவிடும் வகையில் அணுகுமுறையை வகுத்துச் செயற்படுவதிலும் இந்தப் பொதுபலசேனா அக்கறை காட்டி அறிக்கைகளை வெளியிடுகிறது. சிங்கள பௌத்தர்களுக்கும் முஸ்லிம் சமூகத்துக்கும் இடையே குரோதத்தை வளர்க்கக் கூடியதாக இந்த சேனா செய்கின்ற காரியங்கள் தொடர்பில் அரசியல் தலைமைத்துவங்கள் உரிய கரிசனை செலுத்தாமல் இருப்பதால் இன்று நிலைவரம் விபரீதமாகப் போய்க்கொண்டிருக்கிறது.


பொதுபலசேனாவின் வலியுறுத்தல்களுக்கு ஒரு கனதியிருப்பது போன்று சிங்கள மக்கள் உணரக் கூடியதாகவே ஆட்சியதிகார பீடத்தில் உள்ளவர்கள் தங்கள் பிரதிபலிப்பை வெளிக்காட்டிவருவதையும் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. அரசாங்கத்துக்கு காலக்கெடு விதிக்கிற அளவுக்கு பொதுபலசேனா இன்று உசார் பெற்றிருக்கிறது. ஒவ்வொரு சிங்களப் பிரசையும் உத்தியோகபூர்வமற்ற பொலிஸ்காரர் போன்று செயற்பட்டு தங்களது இனத்துவ அடையாளத்தை பேணிப்பாதுகாக்க வேண்டும் என்று கூட இந்த சேனா அறைகூவல் விடுத்திருக்கிறது.

பொதுபலசேனா இலங்கையின் தலிபான் இயக்கம் போன்று செயற்படுவதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியிருக்கிறது. பாதுகாப்பு அமைச்சினாலும் அமெரிக்காவில் உள்ள சில குழுக்களினாலும் பேணப்படுகின்ற இரகசிய வங்கிக் கணக்குகளின் ஊடாகவே பொதுபலசேனாவுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது என்று ஐ.தே.க.வின் தொடர்பாடல் பிரிவின் தலைவரான மங்கள சமரவீர வெளிப்படையாகவே தெரிவித்திருக்கிறார்.

ஐ.தே.க.வின் குற்றச்சாட்டுகளை அப்பட்டமான பொய் என்று கூறும் பொதுபலசேனா பாதுகாப்பு அமைச்சினாலோ அல்லது அமெரிக்காவில் உள்ள குழுக்களினாலோ பேணப்படுகின்ற வங்கிக் கணக்குகளில் இருந்து நிதியைத் தாங்கள் பெறுவதாக நிரூபிக்கப்பட்டால், தங்கள் அமைப்பைக் கலைத்துவிடுவதற்குத்

***(7ஆம் பக்கம் பார்க்க...)***

## கடிதங்கள்













### தவறவிட்ட விடயங்கள்

'ஜனநாயக மயமாக்கல் நல்லிணக்கத்திற்கான முன்நிபந்தனை' என்ற பெயரில் சமகாலத்தில் வெளியாகியிருந்த கலாநிதி தீபிகா உடுகமவின் கட்டுரையில் யுத்தத்துக்குப் பின்னரான நிலைமையில் இலங்கையில் நல்லிணக்கத்தின் பொருட்டு கடைப்பிடிக்கத் தவறப்பட்ட விடயங்கள் பற்றி ஆழமாக ஆராயப்பட்டிருக்கிறது.

தென்னாபிரிக்காவில் 'புரட்சி' மீது அறிவார்ந்த ரீதியிலும், உணர்வு ரீதியிலும் கவரப்பட்ட விதம் இருந்தபோதிலும் தென்னாபிரிக்காவில் ஏற்பட்டதைப் போன்றதொரு அரசியல் நிலைமாற்றம் இலங்கையில் யுத்த நிறைவின் பின்னர் ஏற்பட்டிருக்காமை போன்ற விடயங்கள் இந்த கட்டுரையில் யதார்த்த பூர்வமாக ஒப்பிடப்பட்டுள்ளன.

கே.பிரதீப், மட்டுநகர்

### தேசியவாதிகளின் குணாம்சம்

சமகாலம் ஜனவரி 16-30 இதழைத் திறந்ததும் முதல் பக்கத்திற்கு அப்பால் நகரமுடியாது அதிலேயே மூழ்கி நிற்க நேர்ந்தது. தேசியவாதி பற்றிய ஜோர்ஜ் ஓர்வெலின் மேற்கோள்தான் அதற்குக் காரணம். சிங்கள, தமிழ், இஸ்லாமிய தேசியவாதிகளால் பொங்கிவழியும் 'புனித பூமி' இது. நாம் ஒவ்வொருவரும் எமது தரப்பினால் இழைக்கப்படும் அட்டூழியங்களை ஏற்றுக்கொள்ளாமலும், அவை பற்றிக் கேள்விப்படாமலும், அதி உத்தமர்களாக வாழ்வதான பாசாங்குடன் மற்றவர்கள் மீது குற்றக் கணைகளை அள்ளிவீசிப் பெருமை கொள்கிறோம். நாசூக்காக அவர் சொன்னதை உணர்ந்து உள்வாங்கி வெட்கப்படவே என்னால் முடிந்தது.

பிற சமூகங்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள மறுக்கும் மரத்துப்போன சமூகங்களுக்கு, ஆழத் துளைக்கும் வண்ணம் முதல் பக்கத்திலேயே அழகாகவும் சுருங்கமாகவும் போட்டிருக்கிறீர்கள். உறைக்கிறதா பார்ப்போம். பல சிறப்பான விடயங்களைத் தனித்துவமான முறையில் சமகாலம் தருகிறது. அரசியலுக்கு அப்பால் சினிமா, கடைசிப் பக்கம், விசேட அதிதி போன்றவை வித்தியாசமான பார்வையில் பேசுவது நன்றாக இருக்கிறது. தேடிப் பகிர்ந்தளிக்கும் சமகால ஆசிரிய குழுவிற்கு எனது பாராட்டுகள்.

எம்.கே.முருகானந்தன், கொழும்பு- 6.

### குசல்பெரேராவின் பார்வை

இலங்கை இனப் பிரச்சினையில் கொழும்பு, புதுடில்லியின் நிலைப்பாடுகளை சரியான வகையில் படம்பிடித்துக் காட்டியுள்ள கட்டுரையாளர் குசல்பெரேரா, தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விட்ட தவறுகளையும் சுட்டிக் காட்டியுள்ளதுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனி செய்யவேண்டியது என்ன என்பதையும் மிகச் சரியாக விளக்கியுள்ளார்.

ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் வாக்காளர்கள் உள்ள தலைநகரில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஏன் எந்தவொரு தேர்தலிலும் தமது வேட்பாளர்களை நிறுத்தவில்லை

### விஸ்வரூபம்

எம்.காசிநாதன் எழுதிய விஸ்வரூப வில்லங்கம் கட்டுரை அருமை. விஸ்வரூபத்தில் விளையாடிய இந்திய அரசியலை அவர் அற்புதமாக விளக்கியுள்ளார். கவலையையே உயிராக நினைக்கும் கமலஹாசனின் விஸ்வரூபத்தை ஒவ்வொருவரும் தமக்கு சாதகமாகப் பயன்படுத்த நினைக்க இறுதியில் எதுவுமே நினைக்காத கமலுக்கு எல்லாமுமே நினைக்க முடியாதளவுக்கு சாதகமாக முடிந்ததை கட்டுரை சிறப்பாக விளக்கியுள்ளது. காசிநாதனுக்கு பாராட்டுகள்.

வெற்றிவேலு மயூரன், களுவாஞ்சிக்குடி

விளம்பரங்களுக்கு : தொலைபேசி; 011-7767702, 011-7767703, 011-7322736

யென்ற ஆதங்கம் தமிழ் ஆர்வலர்களுக்கு இருந்தது. அதனைத்தான் குசல்பெரேராவும் தலைநகரில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பிரசாரத்தில் இறங்க வேண்டுமென்கிறார். சிங்களவர்கள் மத்தியிலும் தமிழர் பிரச்சினைக்கு சரியான ஆலோசனைகளை வழங்கக் கூடியவர்கள் இருக்கிறார்கள் என்பதை நிரூபித்த குசல்பெரேராவுக்கு நன்றிகள்.

பி.தீபன், பருத்தித்துறை

## விஸ்வரூப வில்லங்கம்

சமகாலத்தின் பெப்ரவரி 01-15 இதழின் அட்டை வடிவமைப்பு சிறப்பாக இருந்தது. ஆக்கங்களும் அப்படியே. விஸ்வரூப வில்லங்கம் பற்றி ஆரம்பப் பிரச்சினைகளில் இருந்து முடிவுவரை அலசப்பட்டிருப்பது சிறப்பு. விஸ்வரூபம் சிறப்பாக ஓடினாலும் சில காட்சிகளுக்கிடையே தொடர்புகள் அற்றிருப்பதாக படம் பார்த்தவர்கள் சொல்கிறார்கள். எத்தனையோ காட்சிகளை வெட்டிக் கொத்தும்போது அவை தவிர்க்க முடியாதவையே!

ஒரு கலைஞனின் ஆரோக்கியமான படைப்பினை அவர்களுக்காக சில காட்சிகள், இவர்களுக்காக சில காட்சிகள் என ஆளாளுக்கு காரணத்தைக் காட்டி காட்சிகளை நீக்கிக் கொண்டே போனால் மிஞ்சுவது என்ன? அப்படைப்பின் நிலை தான் என்னாகும். விஸ்வரூபத்தைத் தொடர்ந்து வெளிவரக் காத்திருக்கும் சில படங்களும் சர்ச்சையில் சிக்கியுள்ளன. இனி அவற்றின் காட்சிகளிலும் கைவைப்பு நடக்கும். இப்படியே போனால் தமிழ் சினிமாவின் நிலை தலைகீழ் தான் போங்கள்.

சமகாலம் 15 ஆவது இதழில் வெளிவந்த அத்தனை விடயங்களும் சமகால அரசியல் சமூக நிலைமைகளை வெளிப்படுத்தியிருந்தன. பேராசிரியர் சுமணசிறி லியனகேயின் கட்டுரை நீதித்துறையின் தற்போதைய நிலையைத் தெளிவாகச் சொல்லி நிற்கின்றது. உள்ளுக்குள் புகைந்து கொண்டிருப்பது எப்போது எப்படி பற்றி எரியும் என்பது தான் தெரியாத விடயம். இம்முறை அறிவியல் களரியைக் காணாதது சற்று ஏமாற்றம், மற்றும் படி விடயங்கள் அத்தனையும் சிறப்பு.

என்.நந்தினி, மொறட்டுவ

## புதுக்கடை அமைதி

பிரதம நீதியரசர் விடயத்தில் அரசுக்கும் நீதித்துறைக்குமிடையில் வெடித்த போராட்டத்தில் இறுதிக் கட்டத்தில் சட்டத்தரணிகள் சமூகம் தமது போராட்டத்தைத் தொடரத் தவறியது ஏன்? நடைமுறைக்கு முரணான புதிய பிரதம நீதியரசர் நியமனத்தை ஏற்றுக்கொண்டது ஏன் என்று மக்கள் மனதில் எழுந்த கேள்விகளுக்கு பேராசிரியர் சுமணசிறி லியனகேயின் கட்டுரை சிறந்த பதில்களைத் தந்துள்ளது.

பா.வசீகரன், கல்கிஸை.




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 01 இதழ் 16
2013, பெப்ரவரி 16 - 28

A Fortnigtly Tamil News Magazine

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
தொலைபேசி : +94 11 7322700
ஈ-மெயில்: samakalam@expressnewspapers.lk

ஆசிரியர்
வீரகத்தி தனபாலசிங்கம்

உதவி ஆசிரியர்
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

ஒப்பு நோக்கல்
என்.லெப்ரின் ராஜ்



ஒருவர் தனியனாகவே நின்று பாடுபடுவதாக இருந்தால், உன்னதமான இலட்சியங்களுக்காக வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணிப்பதற்கு விருப்பம் கொள்வதில் அர்த்தமேதுமில்லை.

-சேகுவேரா

வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
சமகாலம்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

# வரக்குழலம்....

ஒரு பொருளாதார அடியாளினால் நாடு நிர்மூலம் செய்யப்படுவதற்கா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து எம்மையெல்லாம் விடுவித்தார்? நிதியமைச்சின் செயலாளர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை நினைத்துப் பாருங்கள். இலங்கையில் இன்று சிறந்த அரசாங்க ஊழியராகக் கருதப்படுகின்ற கோதாபய ராஜபக்ஷவை கலாநிதி பி.பி. ஜெயசுந்தர பின்பற்ற வேண்டும்.



வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச

அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை 13 ஆகக் குறைத்தால், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உயிருடன் இருக்கும்வரை ஆட்சியதிகாரத்தில் இருப்பதில் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கொலை செய்வதற்கு, முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவைச் சிறைக்கு அனுப்புவதற்கு, முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்காவை பதவியில் இருந்து அகற்றுவதற்கு துணிச்சலுடன் செயற்பட்டதைப் போன்று அமைச்சர்களின் எண்ணிக்கையையும் 13 ஆகக் குறைப்பதற்கு துணிச்சலை ஜனாதிபதி வெளிக்காட்ட வேண்டும். சுதந்திர இலங்கையின் முதலாவது அமைச்சரவை 13 பேரையே கொண்டிருந்தது.

ஐக்கிய தேசிய பிக்கு சங்கத்தின்
பிரதம செயலாளர்
தின்யாவெல பாலித தேரர்

நிதியமைச்சின் செயலாளர் பி.பி. ஜெயசுந்தரவை ஒரு பொருளாதாரக் கொலையாளி என்று அமைச்சர் விமல்வீரவன்ச கூறுவதை பாரதூரமானதாக எடுக்க வேண்டும். நாட்டில் தோன்றியுள்ள பொருளாதார நெருக்கடிக்கு கலாநிதி ஜெயசுந்தரவை குற்றஞ்சாட்டுவதன் மூலமாக அவரை பதவியில் இருந்து வெளியேற்றும் கைங்கரியங்களை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது என்றுதான் கூற வேண்டும். வீரவன்ச ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஊது குழல் என்பதை முழு நாடுமே அறியும்.



ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க

எனது சுயசரிதையை எழுதுவதற்கு உத்தேசித்திருக்கிறேன். நாடு போரில் வெற்றி கண்டிருந்தாலும் சமாதானத்தில் தோற்றுப் போய்விட்டது என்பதை கூறுவதற்கு நான் பயப்படவில்லை. கடந்த 7 வருடங்களாக நான் பெரும் அவலங்களைச் சந்தித்து வந்திருக்கிறேன்.



முன்னாள் ஜனாதிபதி
திருமதி குமாரதுங்க

வடமேல் மாகாண சபையின் அல்லது மத்திய மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளராக எனது மனைவி போட்டியிடக்கூடிய சாத்தியம் பற்றி பத்திரிகைகளை வாசித்துத்தான் நான் அறிந்து கொண்டேன். பத்திரிகைகளைப் பார்க்கும் வரை எவருமே என்னிடம் இதைப்பற்றிக் கூறவில்லை. மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுமாறு யாரும் மனைவியைக் கேட்கவுமில்லை.



முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா

ஐக்கிய தேசியக் கட்சி அதிகாரத்துக்கு வரும்போது கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவேன்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் யோசனை தெரிவித்ததைப் போன்று பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்கு கடல் பகுதியை நிரவுவது பொருத்தமான செயலாக இருக்கும். அவ்வாறு செய்தால் மக்கள் தங்களின் நிலங்களை இழக்க வேண்டிவராது.



எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க

செய்திச்சரம்

# ஊடகவியலாளர் மீது தொடரும் தாக்குதல்கள்

இலங்கையில் மீண்டும் ஒரு ஊடகவியலாளரைக் கொலை செய்வதற்கு முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. ஆனால் தெய்வாதீன மாக அவர் உயிர் தப்பிவிட்டார்.

சண்டே லீடர் பத்திரிகையின் ஃபாராஸ் ஷௌகத்தலி மீது பெப் ரவரி 15ஆம் திகதி கொழும்புக்கு வெளியே கல்கிசையில் மேற்கொள் ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் ஊடகத்துறை அமைப்புகளினால் கடு மையாகக் கண்டனம் செய்யப்பட் டது. பாரபட்சமற்ற விசாரணைகள் நடத்தப்பட்டு ஷௌகத்தலியை கொலைசெய்ய முயற்சித்த பேர்வழி கள் நீதியின் முன்நிறுத்தப்பட வேண்டுமென்றும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டன.

ஜனாதிபதியும்கூட, விசாரணைக்கு உத்தரவிட்டிருக்கிறார். கடந்த காலத் தில் ஊடகவியலாளர் மீது மேற் கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர் பிலான இதுகாலவரையான விசார ணைகளுக்கு நேர்ந்த கதியை அடிப்ப டையாகக் கொண்டு நோக்கும்போது, பொலிஸ் விசாரணைகளில் நம்பி க்கை வைப்பதில் அர்த்தமில்லை. இதுவே ஊடகவியலாளர் சமூகத்தின் பொதுவான நிலைப்பாடாக இருக்கி றது. ஷௌகத்தலி பூரணமாகக் குண மடைந்த பிறகு அவர் வெளியிடக் கூடிய தகவல்கள் அவர் மீதான கொலை முயற்சி குறித்து நிலைவரங் களை வெளிச்சம் போட்டுக்காட்டக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் கடந்த ஒரு தசாப்தத் தில் 17 ஊடகவியலாளர்கள் கொல் லப்பட்டிருக்கிறார்கள். அக்கொலை கள் தொடர்பில் இதுவரை ஒருவர் கூட கைதுசெய்யப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்படவில்லை.

என்றாலும், முழுமையான விசார ணைகளை நடத்தி சண்டேலீடர் பத்தி ரிகையாளர் மீதான கொலை முயற்சி யில் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்வது அரசாங்கத்தின் முழுப் பொறுப்பேயாகும். நொண்டிச் சாட்டு களைத் தொடர்ந்தும் சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது.

படுமோசமான குற்றச் செயல் களிலும் மனித உரிமை மீறல்களிலும் ஈடுபடுபவர்கள் சட்டத்திலிருந்து விடுபாட்டு உரிமை பெற்றவர்கள் போன்று சுதந்திரமாக நடமாடக்கூடி யதாக இருக்கின்ற நிலைவரம் அதி காரத்தில் இருப்பவர்களையும் அவர் களின் பரிவாரங்களையும் தவிர,



ஏனைய சகல பிரஜைகளுக்கும் பெரும் அச்சுறுத்தலாக இருக்கிறது.

பத்திரிகையாளர்களுக்கு எழுதுவ தற்குச் சுதந்திரம் இருப்பதைப் போன்று அவர்கள் எழுதியவற்றுக் காக அவர்களைக் கொலை செய்வதற்கும் எவருக்கும் உரிமை இருக்கிறது என்பதாக இலங்கையின் இன்றைய நிலைவரங்கள் மாறியிருப் பதாக கொழும்பு ஆங்கிலப்பத்திரி கையொன்று ஆசிரியர் தலையங்கம் தீட்டியிருக்கிறது.

---

*(3ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

தயாராயிருப்பதாக சவால் விட்டிருக் கிறது. எது எவ்வாறிருந்தாலும், 1983 ஜூலையில் தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட தைப் போன்ற ஒரு காட்டுமிராண்டித் தனமான இனவாத வன்முறை தங்க ளுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப் படக்கூடிய அபாயம் இருப்பதாக முஸ்லிம் மக்கள் அஞ்சுகிறார்கள். அரசாங்கத்துடன் அண்டிப்பி ழைக்கும் முஸ்லிம் தலைவர்களின் ே காழைத்தனமான அபிப்பிராயங் களையும் சமாளிப்புகளையும் அந்த மக்கள் கேட்கத் தயாரில்லை. பொது பலசேனாவுக்கு கிடைத்திருக்கக் கூடிய முக்கியத்துவம் கிளப்புகிற ே கள்விகள் சிறுபான்மை இனங்களின் எதிர்காலத்துடன் சம்பந்தப்பட்டவை. அபத்தங்களில் நம்பிக்கை வைத்தால் அட்டூழியங்களே மிஞ்சும்.

செய்திச்சரம்

# மாலே இந்திய தூதரகத்திற்குள் நஷீட் அரங்கேற்றிய தஞ்ச நாடகம்

மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி முஹமட் நஷீட் தலைநகர் மாலேயில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகத்திற்குள் தஞ்சமடைந்து பல நாட்கள் கடந்துவிட்டன. இதுதொடர்பாக மூண்டிருக்கும் சர்ச்சையை இந்தியாவும் மாலைதீவும் எவ்வாறு முடிவுக்குக் கொண்டு வரப்போகின்றன என்பதை முழு உலகமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதியாக இருந்தபோது நஷீட் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவரைக் கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. கைது செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காக அவர் இந்திய உயர்ஸ்தானிகரகத்திற்குள் புகுந்தார். நீதிமன்றத்தின் உத்தரவு அரசியல் நோக்கம் கொண்டது என்பதே நஷீட் தரப்பினரின் நிலைப்பாடாகும்.

நஷீட் கைது செய்யப்பட்டு குற்றவாளியாகக் காணப்பட்டால் எதிர்வரும் செப்டெம்பரில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் அவரால் போட்டியிட முடியாமற் போகும். நஷீட் மீண்டும் அதிகாரத்துக்கு வராதிருப்பதை உறுதிசெய்வதற்கான முயற்சிகளில் அதிகார நலக்கும்பல்கள் இறங்கியிருக்கின்றன என்பது வெளிப்படையானது.

மாலைதீவில் ஜனநாயக ரீதியாக முதன்முதலாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியான நஷீட் கடந்த வருடம் ஒரு 'மென்மையான சதிப்புரட்சியில்' துப்பாக்கி முனையில் பதவியில் இறங்க நிர்ப்பந்திக்கப்பட்டார். அதற்குப்பிறகு பல மாதங்களாக நஷீட்டின் மாலைதீவு ஜனநாயகக்கட்சி விரைவாகத் தேர்தல்களை நடத்தக்கோரி போராட்டங்களில் ஈடுபட்டுவருகிறது. அந்தக் கட்சியின் தலைவர்களுக்கும் தொண்டர்களுக்கும் எதிராக ஜனாதிபதி முஹமட் வாஹிட் திட்டமிட்டமுறையில் செயற்பட்டு வருகிறார் என்று கூறப்படுகிறது.

மாலைதீவின் துளிர்விடும் ஜனநாயகம் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறது. அநேகமாக ஒவ்வொரு ஜனநாயக நிறுவனமும் குறிப்பாக நீதித்துறை, மாலைதீவு ஜனநாயகக்கட்சிக்கு விரோதமானவர்களினால் நிரப்பப்பட்டுக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

நஷீட்டுக்குத் தஞ்சமளித்திருக்கும் இந்தியா, சகல தரப்பினரையும் உள்ளடக்கியதாக, சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களை நடத்துமாறு மாலைதீவு அரசாங்கத்தை வலியுறுத்திக் கேட்டிருக்கிறது. கடந்த வருடம் வாஹிட்டின் அரசாங்கத்தை அங்கீகரித்த இந்தியா இப்போது இவ்வாறு நடந்துகொண்டிருக்கிறது. கடந்த வருடம் இழைத்த தவறை இந்திய அரசாங்கம் இப்போது திருத்திக்



கொள்ள முயற்சிப்பதாக இந்தியாவின் சில முன்னணிப் பத்திரிகைகள் ஆசிரியத்தலையங்கம் தீட்டியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

கடந்த வருடம் நஷீட் பதவியில் இருந்து இறங்க நிர்ப்பந்திக்கப்பட்டபோது அதை இந்திய அரசாங்கம் கண்டிக்கவில்லை. மாறாக இந்த ஆட்சி மாற்றத்தை 'சமாதானரீதியிலான அரசியலமைப்பு அதிகார மாறுதல்' என்றே அது வர்ணித்தது.

மாலைதீவு தொடர்பிலான இந்தியாவின் கொள்கை பெரும் பின்னடைவுக்குள்ளாகியிருக்கிறது. இதற்கு தெளிவான திசைமார்க்கமோ, நோக்கமோ, கோட்பாட்டு ரீதியான அணுகுமுறையும் இல்லாதமையே காரணமாகும் என்று அவதானிகள் விமர்சனம் செய்திருக்கிறார்கள்.

மாலைதீவு ஜனநாயகக்கட்சி தலைமையில் சக்திமிகு ஜனநாயக இயக்கம் வளர ஆரம்பித்திருந்த போதிலும் கூட, இந்தியா பல வருடங்களாக எதேச்சாதிகாரி மௌமூன் அப்துல் கையூமையே தொடர்ந்து ஆதரித்துவந்தது. மாலைதீவின் ஜனநாயக இயக்கத்தை ஆதரிப்பதற்கு இந்தியா தயக்கம் காட்டியது.

தற்போதைய வாஹிட் அரசாங்கம் அந்நாட்டின் நீண்டகால இந்தியா ஆதரவு வெளியுறவுக் கொள்கையை மலினப்படுத்தும் வகையில் செயற்படுவதை புதுடில்லி இப்போது உணர்ந்திருப்பதாக அவதானிகள் சுட்டிக்காட்டுகிறார்கள். அண்மைய மாதங்களில் சீனா நோக்கு மாலைதீவு சரிய ஆரம்பித்திருப்பதற்கான தெளிவான அறிகுறிகளைக் காணக்கூடியதாக இருந்தது.

# ஜெனீவாவில் இருந்து அம்பாந்தோட்டை வரை



என்.சத்தியமூர்த்தி

**மழை ஓய்ந்து வானம் தெளிந்து தெளிவு பிறந்ததும் சர்வதேச சமூகமும் தமிழ்த் தலைமையும் "உன்னால் நான் கெட்டேன் என்னால் நீ கெட்டாய்" என்றபடி பழைய பல்லவியைப் பாடும் நிலையே தொடரும்**

ஒரு 'கரடிக் கதை' சொல்வார்கள். காட்டு வெள்ளத்தில் கண்டெடுத்த பெரிய 'கம்பளி மூடையை' கரை சேர்த்து தனதாக்கிக் கொள்ளும் பேராசையில், ஒரு மனிதன் ஆற்றில் குதித்தானாம். நட்டாற்றில் அவன் ஒரு புறம் பொதியை இழுக்க, அந்தக் கம்பளி மறுபுறம் அவனை இழுக்க என்று போராடினார்களாம். இடையில் கண்ட அவனது நண்பன், 'கம்பளி போனால் போகிறது. வெள்ளம் உன்னை அடித்துச் சென்றுவிடும். அதனை விட்டுவிட்டு கரைக்குத் திரும்பி விடு' என்று அறிவுறுத்தினானாம். அதற்கு அந்த மனிதன் என்ன சொன்னான் தெரியுமா? 'நான் அதனை விட்டுவிட்டேன். ஆனால் அது தான் என்னை விடவில்லை காரணம், நான் பிடித்தது கம்பளி அல்ல கரடி,' என்றானாம்.

ஜெனீவா நகரில் ஐ.நா. மனித உரிமை கவுன்சிலின் பார்வையில் இருந்து தப்புவதற்காக இலங்கை அரசு, நல்லிணக்க ஆணைக்குழுவை அமைத்தது. அடுத்த கட்டத்தில் அந்த குழுவின் பரிந்துரைகளை நடப்பாக்க ஓர் அரசு அதிகாரிகள் குழுவையும் அமைத்தது. என்றாலும், வருடத்திற்கு இருமுறை என்று, மார்ச் மற்றும் செப்டெம்பர் மாதங்களில் ஐ.நா கவுன்சிலின் பார்வையில் இருந்து தப்ப முடியவில்லை. இன்னும் சொல்லப் போனால், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்துவது குறித்தே ஜெனீவாக் கூட்டத்தில் தொடர்ந்து, தமது கவலைகளை சர்வதேச சமூகம் தெரிவித்து வருகிறது.

அந்த விதத்தில், அடுத்த மாதம் ஜெனீவாவில் இலங்கைப் பிரச்சினை குறித்து, அமெரிக்கா முன்வைக்கப் போவதாக கூறிவரும் புதிய தீர்மானமும், இலங்கை அரசின் கடந்த காலச்செயல்பாடுகள் குறித்தும், நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து மட்டுமே விவாதிக்கும் என்று கூறப்படுகிறது. அதன் அடிப்படையில் இலங்கை அரசு செய்தது என்ன, செய்யாதுவிட்டது என்ன, என்பன குறித்து மனித உரிமை கவுன்சில் விவாதித்து, அமெரிக்க தீர்மானத்தின் மீது வாக்களிக்கும். விவாதத்தின் அடிப்படையில் அமெரிக்க தீர்மானமும் மாற்றப்பட்டு, சர்வதேச சமூகம் இலங்கை அரசிடம் இருந்து அடுத்தடுத்து எத்தகைய முன்னேற்றங்களை எதிர்பார்க்கிறது என்பதை குறியிட்டுக் கூறும்.



உள்நாட்டு அரசியல்



கடந்த மார்ச் மாதம் மனித உரிமை கவுன்சிலின் முன்னால் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா ஒரு முக்கிய தீர்மானத்தை முன்வைத்தது. அதனை வைத்து நோக்கும் போது தற்போது அந்த நாடு கருத்தில் கொண்டுள்ள தீர்மான வரைவு, ஒப்புக்காக, நடைமுறை சார்ந்த விடயம் மட்டுமே என்று கூறப்படுகிறது. என்றாலும், அந்தத் தீர்மான வரைவும் கடந்த வருடத்திய தீர்மானத்தில் கூறப்பட்ட விடயங்களில், இலங்கை அரசின் செயல்பாடு குறித்த ஆய்வறிக்கைகளைச் சார்ந்தே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஏன், கடந்த வருட தீர்மானத்தின் பிடியில் இருந்து இலங்கை தப்ப முடியாது என்பதையும், தப்பி விடக்கூடாது என்பதையும் பறைசாற்றும் வகையிலேயே இந்த வருடத்திய தீர்மான வரைவும் உள்ளது.

கடந்த மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்குப் பிறகு, செப்டெம்பர் மாதம் நடைபெற்ற மனித உரிமை கவுன்சிலின் ஆறு மாதத்திய கூட்டத் தொடரிலும் இலங்கை விவகாரம் விவாதிக்கப்பட்டது. இந்த கூட்டத்தொடர் வழக்கமானது போன்ற ஒன்றல்ல. மாறாக, நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை, அனைத்து ஐ.நா.

உறுப்பு நாடுகளின் மனித உரிமை விவகாரம் குறித்தும் இந்தத் தொடரில் விவாதம் நடைபெற்றது. மற்ற ஆண்டுகளில் செப்டெம்பர் மாத தொடர், மார்ச் மாதம் முன் வைக்கப் பட்ட பிரேரணைகள் குறித்து அடுத்த கட்ட விவாதத்தையும் வாக்கெடுப் பையும் மேற்கொள்ளும்.

இலங்கை விடயத்தில், செப்டெம் பர் மாத கூட்டத்தொடர், மார்ச் மாத விவாதத்தின் தொடர்ச்சியாகவே அமைந்தது. என்றாலும் நான்கு ஆண் டுகளில் உறுப்பு நாடுகளில் மனித உரிமை குறித்த விவாதத்தைத் தொட ர்ந்து வாக்கெடுப்பு நடத்துவது மரபு அல்ல. இதன் காரணமாக, இலங்கை விவகாரமும் விவாதத்துடன் முடிந் தது. அன்று விடுபட்ட வாக்கெடுப்பே இந்தமுறை நடைபெற உள்ளது என் றும் கூறலாம். இலங்கை விவகாரத் தில், சர்வதேசத்தின் கருத்தும் கவலை யும் சிறிதும் குறையவில்லை என் பதை இந்த வாக்கெடுப்பு குறிக்கும்.

## இந்தியா என்ன செய்யும்?

கடந்த மார்ச் மாதம் நடந்த வாக்க ளிப்பின் முடிவு எந்த விதத்தில் அமையும் என்பது குறித்து கிட்டத் தட்ட கடைசி வரை அறுதியிட்டுக் கூற முடியவில்லை. காரணம், வாக் கெடுப்பிற்கு ஒரு சில நாட்களுக்கு முன் வரை அண்டை நாடான இந்தி யாவின் நிலை குறித்து இலங்கையும் அதன் எதிர் அணியில் நின்ற அமெ ரிக்கா உட்பட்ட மேலை நாடுகளும் கணிக்க முடியவில்லை. இந்திய அரசு தலைமையிலும் இது குறித்து குழப்பமான சூழ்நிலையே நிலவி யது எனலாம்.

இலங்கையில் இனப்போர் மீண் டும் துவங்கிய 2006-ஆம் ஆண்டு தொடக்கம், இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்து, அரசு தலைமை இந்தியாவிற்கு தொடர்ந்து வாக்குறுதிகளை வாரி வழங்கி வந் தது. இதன் அடிப்படையிலேயே, இந் திய அரசும் இலங்கைக்குச் சாதகமாக சர்வதேச சமூகத்துடன் பேச்சுவார்த் தையில் ஈடுபட்டு வந்தது என்று கூறு வோர் இரண்டு நாடுகளிலும் உள்ள னர். ஆனால், இனப்போர் முடிந்து ஆண்டுகள் உருண்டோடியும், இலங்கை அரசு, அரசியல் தீர்வு குறித்து, கொடுத்த வாக்கை காப்பாற் றுவதாகத் தெரியவில்லை.

இந்தப் பின்னணியில் மட்டுமே இந்தியா அமெரிக்கா முன் வைத்த தீர்மானத்தை ஆதரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதாவது, முன்னர் இந்தியா சொன்னதைக் கேட்டு செயல்பட்ட சர்வதேச சமூகத் தின் முன்னர் இந்திய அரசிற்கு தான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றி விட் டோம் என்ற மரியாதை இல்லாமல் போய்விடும் சூழ்நிலைக்கு தள்ளப் பட்டது. அதேசமயம், இலங்கை அர சும், 'வைத்தால் குடுமி, இல்லை யென்றால் மொட்டை' என்ற நிலைப்பாட்டை எடுத்தது.

அதாவது, அமெரிக்காவின் தீர் மானம் குறித்த விடயத்தில், இந்தியா உட்பட வாக்குரிமை பெற்ற நாடுகள் ஒன்றில் தனக்கு ஆதரவாக வாக்க ளிக்க வேண்டும், அல்லது எதிரணி யில் நின்று கொள்ள வேண்டும். அவ் வாறு இல்லாமல், இரு தரப்பும் ஏற்றுக் கொள்ளும் விதத்திலான தீர் மான வரைவு ஒன்றின் அடிப்படை யில் செயல்படும் மனநிலையில் இலங்கை அரசு இருக்கவில்லை. தற் போதும் அந்த நிலைமையே தொடர் கிறது என்றே நினைக்க இடமிருக்கி றது.



## எதிர்ப்பும், எதிர்பார்ப்பும்

இது இப்படியிருக்க, அமெரிக்கா தற்போது கூறிவரும் புதிய தீர்மானம் கடந்த ஆண்டு தீர்மானத்தை செயல் படுத்தும் விதமாக இலங்கை அரசு எடுத்த நடவடிக்கைகள், எடுக்கத்தவ றிய நடவடிக்கைகள், மேலும் எடுக் கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த அட்டவணை போன்றதாகும் என்று கூறலாம். முந்தைய தீர்மானத் தின் கீழ், இலங்கை அரசின் அழைப்பு மற்றும் அனுமதி பெற்று நவநீதம் பிள்ளை தலைமையிலான ஐ.நா. மனித உரிமை ஆணையகம் கடந்த வருடம் இலங்கை அரசிற்கு வழங் கிய அறிவுரைகள் மற்றும் செயல் திட் டங்கள் குறித்த குறிப்பின் அடிப்ப டையிலேயே இந்த வருடத்திய தீர்மானம் உருப்பெறும் என எதிர் பார்க்கலாம்.

இலங்கை அரசைப் பொறுத்த வரை, இதில் வரவேற்கப்பட வேண் டிய பகுதிகள் உள்ளன. எதிர்க்கும் என்று எதிர்பார்க்கப்படும் பகுதிக ளும் உள்ளன. தமிழர் பகுதிகளில் மீள் குடியேற்றம் போன்ற விடயங்க ளில் வெகுவாக முன்னேற்றம் உள்ளது என்று உலக நாடுகள் இப் போது ஏற்றுக் கொண்டுள்ளன. இத னைத்தான், இலங்கை அரசு முதல் நாள் தொட்டே கூறி வருகிறது. இன் றும் கேட்டால், தமிழ்த் தேசியக் கூட்

டமைப்பும் சில தமிழ்ச் சமூகத் தலைமைகளும் அதனை ஏற்றுக் கொள்வதாக இல்லை.

அதேசமயம், 'போர்க் குற்றங்கள்' மற்றும் அரசியல் தீர்வு ஆகிய இரண்டு முக்கிய விடயங்களில் இலங்கை அரசு மனப்பூர்வமாகச் செயல்படவில்லை என்றும் அதன் செயல்பாடுகள் வெளிப்படையாக இருக்கவில்லை என்றும் சர்வதேச சமூகம் குற்றம்சாட்டி வந்துள்ளது. இதில், 'போர்க் குற்றங்கள்' குறித்து குறிப்பிட்ட சம்பவங்களில் இலங்கை அரசு இராணுவ ரீதியாக விசாரணைகளை மேற்கொள்ளுவதாகத் தெரிவித்தது. இந்த விசாரணைகள் நான்கு ஆண்டுகளுக்குள் முடிவடையும் என்றும் அரசு முன்னரே தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, துறை ரீதியான விசாரணைகளுக்குப் பின்னர், இனப்போரின் கடைசிக் கட்டங்களில் அப்பாவித் தமிழ் மக்களை இராணுவம் கொன்று குவிக்கவில்லை என்று அரசு அறிவித்துள்ளது. மாறாக, விடுதலைப் புலிகள் இயக்கத்தினரே அவ்வாறான செயல்களில் வேண்டுமென்றே ஈடுபட்டார்கள் என்றும் இராணுவ விசாரணையின் முடிவில் அரசு தரப்பு தற்போது அறிவித்துள்ளது. இதுபோன்ற கருத்துகளை அரசு போர் முடிவுறும் காலகட்டத்திலும் கூறி வந்தது. அதனை சர்வதேச சமூகம் பெருவாரியாக அங்கீகரித்தது என்று எண்ணுவதற்கும் அப்போது இடம் இருந்தது.

'அரசியல் தீர்வு' விடயத்தில் எப்போது சர்வதேச சமூகம் அண்மைக் காலங்களில் 'அக்கறை' எடுத்துக் கொண்டு, 'ஆர்வம்' காட்டத் தொடங்கியதோ, அப்போதே, அரசு அந்த விடயத்தில் சுணக்கம் காட்டத் தொடங்கிவிட்டது. கூட்டமைப்புடன் தான் நடத்தி வந்த பேச்சுவார்த்தைகளை அரசு திடீரென்று நிறுத்திக் கொண்டதற்கு, இதுவும் ஒரு காரணம் என்று கருதலாம். தனது பங்கிற்கு, கூட்டமைப்பும், தமிழ் மக்களுக்கு சர்வதேச சமூகம் 'நீதி' பெற்றுத் தரும் என்ற வகையில் பேசத் தொடங்கியது. அந்த நிலைமையே தற்போதும் தொடருகிறது.

## அம்பாந்தோட்டை மகாநாடு

ஜெனீவாவில் உள்ள பிரச்சினைகள் போதாது என்று, தற்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சொந்த மாவட்டமான அம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் உச்சி மகாநாடும் இலங்கை அரசுக்கு பிரச்சினையாக உருவெடுத்து வருகிறது. பொதுநலவாய உறுப்பு நாடுகளைப் பொறுத்தவரையில், இது போன்ற உச்சி மகாநாடுகள் இயக்க ரீதியாக அதிகமாக எதுவும் சாதிப்பதாக வெளிப்படையாகத் தெரியாது. ஆனால், உறுப்பு நாடு ஒன்றில் பிரச்சினை என்று வந்துவிட்டால், தனது சட்டதிட்டங்களை சுட்டிக்காட்டி அந்த அமைப்பு நியாய ரீதியாக பேசத் தொடங்கிவிடும்.

என்றாலும், இலங்கை போன்ற மூன்றாம் உலக உறுப்பு நாடுகள், பொதுநலவாய உச்சி மகாநாட்டை நடத்த கிடைக்கும் வாய்ப்பையே பெருமையாகக் கருதி வந்துள்ளன. அந்த நாடுகளின் அரசியல் தலைமைகளும் இது போன்ற வாய்ப்புகளை தங்களுக்கு உள்நாட்டு அரசியலில் கிடைத்த வரப்பிரசாதமாகக் கருதியே செயல்பட்டு வந்துள்ளன. ஏதோ, தங்களது அரசியல் தலைமைகளுக்கு கிடைத்த 'தேர்தல் வரப்பிரசாதமாகவே' இது போன்ற வாய்ப்புகளைக் கருதி, அந்த 'பெருமையை' பெற தவம் இருந்து வருகின்றன.

ஆட்சியில் இருந்தது யாராக இருந்தாலும், இலங்கையும் இது போன்றே செயல்பட்டு வந்துள்ளது. இனப்போர் முடிந்த காலம் தொட்டு ஜனாதிபதி மகிந்த தலைமையிலான அரசும் 2013ஆம் ஆண்டின் பொதுநலவாய உச்சி மகாநாட்டை, போர் முடிந்த காலகட்டத்தில், மீள்குடியமர்வு மற்றும் அரசியல் தீர்வு போன்ற விடயங்களில் தனது செயல்பாட்டை வெளியிட்டுக் காட்டுவதற்கான வாய்ப்பாகவும் கருதியிருக்கலாம். ஆனால். தற்போது, பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கான கதையாக மாறியுள்ளது.

அண்மையில் இலங்கை வந்து சென்ற பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா, தமிழர் பகுதிகளுக்கு விஜயம் செய்துவிட்டு மீள்குடியமர்வு குறித்து அரசுக்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்துள்ளார். அதேசமயம், தலைமை நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்காவின் பதவி நீக்கம், பத்திரிகைச் சுதந்திரம் மற்றும் தனிநபர் சுதந்திரம் குறித்து கவலை தெரிவித்தார். இது போன்ற கருத்துகளையே இங்கிலாந்து, அவுஸ்திரேலியா மற்றும் கனடா போன்ற பொதுநலவாய உறுப்பு நாடுகளும் தெரிவித்துள்ளன.

## 'சர்வதேச சதி?'

இனப்பிரச்சினை மற்றும் 'போர்க் குற்றங்கள்' குறித்து ஐ.நா. மனித உரிமை கவுன்சில் இலங்கை அரசைக் குறிவைக்கும் அதேநேரத்தில், பத்திரிகைச் சுதந்திரம் மற்றும் நீதித் துறைச் சுதந்திரம் போன்ற விடயங்களில் பொதுநலவாய அமைப்பு தற்போது அதீத அக்கறை காட்டத் தொடங்கியுள்ளது. இது இலங்கை அரசை கிடுக்கி பிடிக்குள் தள்ளியுள்ளது. இதனையே, அரசு தரப்பு இலங்கைக்கு எதிரான 'சர்வதேச சதி' என்று கூறி வருகிறது. ஒரு கட்டத்திற்குப் பின் அத்தகைய குற்றச்சாட்டை அரசு தரப்பு நம்பத் தொடங்கி விடுகிறது. சர்வதேச சமூகமும் அது போன்றே நடந்து கொள்ள தன்னை பழக்கிக் கொண்டுவிட்டது என்பதும் அப்பட்டமான உண்மை.

எதிர்வரும் மனித உரிமைக் கவுன்சில் வாக்கெடுப்பில், கடந்த முறை போல் இல்லாமல் இந்த முறை, தொடக்கம் தொட்டே அமெரிக்காவின் கை ஓங்கி உள்ளது. இது இந்தியாவின் முடிவைப் பொறுத்தவிடயம் மட்டுமல்ல, கடந்த முறை இலங்கைக்கு ஆதரவாக முதலில் இருந்தே ஆதரவு கோரி வந்த சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் இந்த முறை வாக்களிக்கும் 49 உறுப்பு நாடுகளில் அடங்கவில்லை. சுழற்சி முறையில் புதிதாக இடம்பெற்றுள்ள உறுப்பு நாடுக

ளுக்கு இலங்கையை எதிர்க்க வேண்டும் என்பதற்கு காரணம் இல்லை என்றாலும், அதற்கு ஆதரவுக் கரம் நீட்ட வேண்டும் என்பதற்கும் காரணம் இல்லை.

ஆனால், அமெரிக்கா குறித்த அவர்களது போக்கு இவ்வாறாக இல்லை. அந்த நாடுகளில் பலவும் ஏதோ ஒரு காரணத்திற்காக அமெரிக்காவை எதிர்க்கும் திறனற்றவர்களாகவே இருக்கிறார்கள். இதற்கு மாற்றாகக் கருதப்படும் சீனா, முழு அளவில் தனது அரசியல், பொருளாதாரம் மற்றும் இராஜதந்திரீய முயற்சிகளை இலங்கைக்காகச் செலவிடுமா என்பது தெளிவாகவில்லை. கடந்தமுறை, தனது வாக்கின் மேன்மையைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவாவது, சீனா இலங்கைக்கு ஆதரவு திரட்டியது என்று இலங்கை அரசு தரப்பு பின்னர் தெரிவித்திருந்தது. ஆனால், அந்த முயற்சி முழு அளவில் பலன் அளிக்கவில்லை என்பது வாக்களிப்பு முடிவில் தெரிந்தது.


இது சமயத்தில், பொதுநலவாய உச்சி மகாநாட்டில் பங்கு பெறுவது குறித்தும் தங்களது பங்களிப்பு எந்த அளவில் இருக்க வேண்டும் என்றும் சில உறுப்பு நாடுகள் கருத்துத் தெரிவிக்கத் தொடங்கியுள்ளன. பொதுநலவாய அமைப்பின் நிறுவனர், தலைவர் மற்றும் சூத்திரதாரி என்ற விதத்தில், இங்கிலாந்து அரசு தனது பங்களிப்பு குறித்து இன்னமும் முடிவு செய்யவில்லை என்று கூறியுள்ளது. அதாவது, அந்த அமைப்பின் தலைவர் என்ற முறையில் இங்கிலாந்து அரசி எலிசபெத் மகாராணி உச்சி மகாநாட்டைத் தொடக்கி வைத்தாலும், அந்த நாட்டு அரசின் பிரதிநிதி குழுவிற்கு பிரதமர் டேவிட் கமரூன் தலைமை வகித்து இலங்கை வருவாரா என்பது தெரியவில்லை. ஏன், உச்சி மகாநாட்டை இலங்கைக்கு வெளியே நடத்த வேண்டும் என்பன போன்ற முணுமுணுப்புகளும் கேட்கத் தொடங்கியுள்ளன.

இவையெல்லாம் இப்படி இருந்தாலும், கடைசியில் 'போர்க் குற்றங்கள்' குறித்து முழு அளவிலான, வெளிப்படையான விசாரணைக்கு இலங்கையில் தற்போது உள்ள அரசியல் தலைமையோ, அல்லது வேறு ஏதாவது தலைமையோ வழி வகுக்கும் என்று சர்வதேச தலைமை நினைக்குமேயானால், அது தங்களைத் தாமே ஏமாற்றிக் கொள்வதற்குச் சமமாகும். அல்லது, எதிர்வரும் முடிவை தெரிந்து கொண்டே, தங்களது விருப்பு-வெறுப்பு, தமிழ் மக்களது வாக்குகள் அல்லது சர்வதேச சூழ்நிலைகள் காரணமாக இலங்கையில் உள்ள அப்பாவித் தமிழ் மக்களையும் அவர்களது அரசியல் மற்றும் சமுதாயத் தலைமைகளையும் சர்வதேச சமூகம் ஏமாற்றுகிறது.

இது, பேரினவாத அரசியலின் ஒரு பகுதி அல்ல. சர்வதேச சமூகம் எதிர்பார்க்கும் விதத்திலான 'போர்க் குற்றங்கள்' குறித்த விசாரணை, இலங்கையில் உள்நாட்டு குழப்பங்களுக்கும் போருக்கும் கூட வித்திடவல்லது. ஆனால், அரசியல் தீர்வு குறித்த எந்த ஒரு அரசின் எந்தவிதமான முடிவும் சமூக-அரசியல் நிலைமைகளையே ஒத்திருக்கும். அதனையும் 'பேரினவாதம்' என்று ஒதுக்கித் தள்ளுவது, இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு இடைப்பட்ட காலகட்டத்திலோ, எதிர்காலத்திலோ எந்த விதத்திலும் பயன்தரப் போவதில்லை.

இந்த உண்மைகளை உணர்ந்து சர்வதேச சமூகமும் தமிழ்

(47ஆம் பக்கம் பார்க்க...)





குமார் டேவிட்

உள்நாட்டு அரசியல்

# சிங்கள - தமிழ் ஐக்கியத்திற்கு யார் பயப்படுகிறார்கள்?

சிங்கள - தமிழ் ஐக்கியத்தை விரும்புகிறவர்களும் அதை எதிர்ப்பவர்களும் தங்களின் இடங்களை மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். ராஜபக்ஷவின் தந்திரம் வெற்றிபெறுமேயானால் அது சிறுபான்மை இனங்களுக்கு பெரும் அழிவாகப்போய் முடியும்

இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்து மேற்குலகில் வாழும் தமிழர்கள் மத்தியில் செயற்படுகின்ற ஒரு அமைப்பே உலக தமிழர் பேரவை (The Global Tamil Forum-GTF). இலங்கையில் பெரிதும் அறியப்படாததாகயிருக்கும் இந்தப் பேரவை இம்மாத இறுதியில் லண்டனில் ஹவுஸ் ஒஃப் கொமன்சில் அதன் வருடாந்த மகாநாட்டை நடத்துகிறது. அந்த மகாநாட்டின் தொனிப்பொருள் இலங்கையில் ஜனநாயகத்திற்கான சவால்கள் என்பதாகும். இந்தத் தொனிப்பொருள் தமிழ்ச்சமூகத்தின் எதிர்காலத்துடன் பெரிதும் சம்பந்தப்பட்டதாகும் என்பதில் சந்தேகம் இல்லை. உலகத் தமிழர் பேரவை விடுதலைப் புலிகளின் எஞ்சியிருக்கக்கூடிய பிரிவினருடன் தொடர்புடையதல்ல. மகாநாட்டிற்கு பல சிங்கள சட்டத்தரணிகள், அரசியல் பிரமுகர்கள், தொழிற்சங்கவாதிகள் மற்றும் பத்திரிகையாளர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். இவர்களில் லங்கா சமசமாஜக் கட்சியின் இரு பிரிவுகளையும் சேர்ந்த முன்னணிப் பிரமுகர்களும் அடங்குகிறார்கள். இவர்களில் சிலர் ஆரம்பத்தில் உலகத் தமிழர் பேரவையின் அழை ப்பை ஏற்றுக்கொண்டபோதிலும் பின்னர் கலந்துகொள்வதில்லை என்று தீர்மானித்திருக்கிறார்கள். மகாநாட்டில் கலந்துகொள்ளக்கூடாதென்று கட்சி தடைவிதித்ததே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. பேரவைக்கு இவர்களினால் தனித்தனியாக அனுப்பப்பட்ட கடிதத்தில் ‘‘உலகத் தமிழர் பேரவை மகாநாட்டில் கலந்துகொள்ளுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்றுக்கொள்ள இயலாமைக்காக நான் கவலையடைகிறேன். எனது பங்கேற்பை கட்சி அங்கீகரிக்கவில்லை. அதையும் மீறி நான் கலந்துகொண்டால் அது கட்சிக்குள் எனது போராட்டத்தைப் பாதிக்கும். தயவு செய்து என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். உங்களை ஏமாற்றியதற்காக மனம் வருந்துகிறேன்’’ என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நிகழ்வுகள் சமசமாஜக்கட்சி தமிழ் மக்களுடனான அதன் உறவுகளையும் விட மகிந்த ராஜபக்ஷவிற்கு சேவகம் செய்து அண்டிப்பிழைப்பதற்கு முன்னுரிமை கொடுத்திருப்பதை அம்பலப்படுத்துகின்றது.

ஒரு எழுத்தாளர் என்ற வகையிலும் மார்க்சியவாதி என்ற வகையிலும் நிலைவரங்களை உன்னிப்பாக அவதானித்து வருபவன் நான். சிங்கள - தமிழ் ஐக்கியம் என்பது

ஏதேச்சதிகாரத்தை எதிர்த்துப் போராடுவதற்கு அவசியமானது. இது விடயத்தில் நான் பங்கும் ஈடுபாடும் கொண்டவன். பல தசாப்தங்களாக சமசமாஜக்கட்சியின் ஒரு உறுப்பினராக இருப்பவன் என்ற வகையில் தீர்க்கமான உட்கட்சிப் போராட்டங்களில் ஈடுபடுவதே நோக்கமாக இருந்தால் கட்சியின் கட்டுப்பாடுகளுக்கு தலைவணங்க வேண்டும் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். வெறுமனே ஒரு சம்பிரதாயத்துக்கு அதுவும் நம்பகமான அரசியல் இலக்குகள் இல்லாமல் கட்சிக் கட்டுப்பாட்டுக்கு மதிப்பளிப்பதில் அர்த்தம் ஏதும் இல்லை. எனவே சமசமாஜக்கட்சியின் தலைமைத்துவத்தை தோற்கடிப்பதற்காக அதன் இடதுசாரிப்பிரிவின் முயற்சிகள் பயனுறுதியுடையவையாக இல்லை என்பதே எனது அபிப்பிராயமாகும். இன்று அந்தக் கட்சியின் தலைமைத்துவம் முற்றுமுழுதாக ராஜபக்ஷவை அண்டிப்பிழைப்பவர்களைக் கொண்டதாகவே விளங்குகிறது. அவர்கள் எல்லோரினதும் ஒரே நோக்கம் தனிப்பட்ட சந்தர்ப்பவாதமேயாகும். இந்தத் தலைமைத்துவத்தை தோற்கடிப்பது ஓர் எளிதான காரியமல்ல. ஏனென்றால் கட்சி உறுப்பினர்களின் தரம் பழைய நாட்களை விட மிகவும் கவலைக்குரிய வகையில் மோசமாக தாழ்ந்து போயிருக்கிறது. அரசாங்கத்தின் சீரழிவுத்தனம் சகலரதும் பார்க்கக்கூடியதாக அம்பலப்படுத்தப்பட்டிருக்கும் இந்த நேரத்தில் சமசமாஜக்கட்சியின் இடதுசாரிப்பிரிவினர் குறிப்பிடத்தக்களவிற்கு தங்களது உட்கட்சிப் போராட்டத்தில் முன்னேற்றத்தை காணவில்லையானால் அவர்கள் தங்களது அடிப்படைத் தந்திரோபாயத்தை மாற்றவேண்டிய நேரம் வந்துவிட்டதென்பதே எனது அபிப்பிராயமாகும்.

இடதுசாரி இயக்கம் தான் சிங்கள-தமிழ் ஐக்கியத்தின் தேவையை பல தசாப்தங்களாக வலியுறுத்திப் போதனைகளைச் செய்து வந்தது. குறுகிய தேசியவாத ஒற்றுமையின்மையை எதிர்த்துவந்ததும் இடதுசாரி இயக்கமே. வி.காராளசிங்கம் உன்னதமான மார்க்சியவாதியாக இருந்த போது "தமிழ் பேசும் மக்களுக்கான பாதை'' என்ற தலைப்பில் ஒரு சிற்றேட்டை வெளியிட்டார். அதில் அவர் சீரழிவுத்தனமான சிங்கள அரசாங்கங்களுடன் தமிழ் மக்கள் தங்களை இணைத்துக்கொள்ளக்கூடாது. பொதுவான போராட்டத்தில் இடதுசாரிகளுடனேயே தமிழர்கள் தங்களை இணைக்கவேண்டும் என்று எழுதியிருந்தார்.

தமிழ்ச்சமூகம் (விடுதலைப்புலிகள் உள்நாட்டில் இல்லை. அத்துடன் புலம்பெயர் மத்தியிலும் அவர்கள் ஒரு சிறுபான்மையினரே) இப்போது ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக ஐக்கியத்திற்கு அழைப்பு விடுக்கிறது. ஆனால் பட்டுப்போன இடதுசாரிகளோ "தமிழர்களிடம் இருந்து எங்களைக் காப்பாற்றுங்கள்'' என்று ராஜபக்ஷ போடுகின்ற கூச்சலுக்கு எடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். பாவம் காராளசிங்கம் இன்று உயிரோடு இருந்திருந்தால் பெரிதும் வேதனைப்பட்டிருப்பார். திஸ்ஸ விதாரணவும் அவரின் பரிவாரங்களும் சகலவற்றையும் தலைகீழாக்கிவிட்டார்கள். தமிழர்களில் பெரும்பான்மையானவர்கள் அல்ல, பட்டுப்போன இடதுசாரிகளே இப்பொழுது பிற்போக்குவாதிகளின் அடிமைகளாக இருக்கிறார்கள்.

### தேசிய ஐக்கியத்திற்கு பயப்படுகிறவர்கள் யார்?

நம்ப முடியாதளவிற்கு நிலைவரங்கள் மாறிப்போயிருக்கிறது. சிங்கள-தமிழ் ஐக்கியத்தை விரும்புகிறவர்களும் அதை எதிர்ப்பவர்களும் தங்களின் இடங்களை மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். ராஜபக்ஷ அரசாங்கம் விடுதலைப்புலிகளை தோற்கடிப்பதற்கு பெரும் செலவில் கடுமையாகப் போரிடவேண்டியிருந்தது. அதற்குக் காரணம் விடுதலைப்புலிகள் நாட்டைப் பிரிக்க விரும்பியதே. சில தமிழர்கள் விடுதலைப்புலிகளை ஆதரித்தார்கள். சிலர் எதிர்த்தார்கள். ஆனால், பெரும்பாலானோர் நடுநிலையாகவே இருந்தார்கள். ஜனநாயகத்தைக் கைவிடுவதென்பது தங்களுக்கு பாரதூரமான அச்சுறுத்தலாக அமையும் என்பதை பெரும்பாலான தமிழர்கள் இப்போது புரிந்துகொண்டிருக்கிறார்கள். ஏதேச்சதிகாரம் வலுவடைந்து மக்களை இராணுவ அதிகாரம் அதன் காலடியில் வைத்திருக்கும் ஒவ்வொரு தடவையும் என்ன நடக்கிறதென்று ஒரு தேசிய சிறுபான்மை என்ற வகையில் தமிழர்கள் நேரடியாகக் கண்டிருக்கிறார்கள். சிறுபான்மையினங்கள் தான் எளிதான இலக்குகளாகி பெருமளவு அவலங்களைச் சந்திக்க வேண்டி இருக்கிறது. இந்த நாட்டை தனது குடும்பத்தின் ஏதேச்சதிகார கொத்தளமாக மாற்றுவதற்கான ராஜபக்ஷவின் தந்திரோபாயம் வெற்றிபெறுமேயானால் அது சிறுபான்மையினங்களுக்கு பெரும் அழிவாகப் போய் முடியும். இந்த யதார்த்தத்தை பார்க்காமல் முஸ்லிம்கள் இன்னமும் கண்களை மூடிக்கொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் ரவூப் ஹக்கீமின் துரோகத்தனமாகும். ஆனால், தமிழர்கள் அரசாங்கத்தின் பாதுகாப்பு எல்லைக்கு வெளியே இருப்பதால்

லண்டன் உலகத்தமிழர் பேரவை மகாநாடு கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறைகள் பற்றிய ஒரு நோக்கு

ஆபத்தை நன்கு அறிந்திருக்கிறார்கள். ஆம் தமிழர்கள் ஜனநாயக சிங்களவர்களுடன் ஐக்கியத்தை நாடுகிறார்கள். அதற்குக் காரணம் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும் என்ற உணர்வே என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதில் என்ன தவறு இருக்கிறது.

இனங்கள் மத்தியில் ஐக்கியம் ஏற்படுவதை ஏன் இந்த அரசாங்கம் எதிர்க்கிறது? உலகத் தமிழர் பேரவையின் மகாநாடு ஈழம்வாதிகளின் ஒரு ஒன்று கூடல் என்ற அவதூறு எங்கு இருந்து வருகிறது? அரசாங்கத்திலிருந்து சுயாதீனமாக இருக்கிற ஒவ்வொரு தமிழரும் பசுத்தோல் போர்த்திய புலி என்று ஏன் வர்ணிக்கப்படுகிறார்? அரசாங்கத்தின் ஏதேச்சதிகார அபிலாஷைகளுக்கு ( 18ஆவது அரசியலமைப்புத் திருத்தம், பிரதம நீதியரசருக்கெதிரான குற்றப்பிரேரணை, திவிநெகும, எதிர்காலத்தில் கொண்டுவரப்படக்கூடிய 19 ஆவது திருத்தம்) குறுக்கே நிற்கும் ஒவ்வொருவரும் சிங்களவர் என்றால் வெளிநாட்டு ஏஜென்ட் என்றும் தமிழர் என்றால் ஒரு பயங்கரவாதி என்றும் ஏன் நாமகரணம் சூட்டப்படுகிறார்? ஏனென்றால் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்களின் ஐக்கியம், ஜனநாயகம் மீதான அத்துமீறல்களுக்கெதிரான ஒரு கூட்டணியாக தவிர்க்க முடியாத வகையில் அமையும். இதனால்தான் ராஜபக்ஷாக்கள் இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தை எதிர்க்கிறார்கள். ஆனால், அதே ஐக்கியத்தில் தான் தங்களின் பாதுகாப்பு தங்கியிருக்கிறது என்று தமிழர்கள் கருதுகிறார்கள். ஒரு மார்க்சியவாதி என்ற வகையில் இந்த இடத்தில் தான் நான் உலகத் தமிழர் பேரவையின் மகாநாட்டின் முக்கியத்துவத்தை (உகந்த முறையில் நடத்தப்படும் பட்சத்தில்) காண்கிறேன்.

"உகந்த முறையில்" என்பதன் அர்த்தம் என்ன? தமிழ்ச் சமூகத்திற்கு நீதியும் நியாயமும் கிடைக்கவேண்டுமென்று அக்கறைப்படுகின்ற ஒரு தமிழமைப்பு என்பதை உலகத் தமிழர் பேரவை மறைக்கவேண்டிய தேவையில்லை. ஜனநாயக உரிமைகளுக்காக சிங்களவர்களுடனும் முஸ்லிம்களுடனும் இணைந்து ஒரு அணியாகச் செயற்படுவதில் நாட்டம் கொண்டிருப்பதையும் உலகத் தமிழர் பேரவை மறைக்கவேண்டியதில்லை. தமிழர்களின் மனக்குறைகளை ஜனநாயக ரீதியாகத் தீர்த்துவைப்பதற்கு இந்தப் பேரவை மனதில் கொண்டிருக்கும் செயல்திட்டத்தை பகிரங்கப்படுத்துவதற்கும் தயங்கவேண்டியதில்லை. விடுதலைப்புலிகளின் எச்ச சொச்சங்களாக அல்லது விடுதலைப்புலிகளின் கொள்கைகளுக்காக குரல் கொடுக்கும் அமைப்பாகவோ இந்தப் பேரவை இல்லை என்பது ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தை நாடுவதாக இருந்தால் இந்த விடயங்கள் முக்கியமானவை. (பிரிவினைவாதமே விடுதலைப்புலிகளின் கோட்பாடு. அதனால் அது இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தை நிராகரித்தது) எவ்வாறெனினும் இந்த உண்மைகளை இருட்டடிப்புச் செய்வதற்கு பேரினவாதிகள் முயற்சிக்கின்றமையால் உலகத்தமிழர் பேரவை இலங்கை மக்களை நெருங்கி அணுகக்கூடியதாக அதன் அடையாளத்தைப் பகிரங்கப்படுத்த வேண்டும். எல்லாவற்றிற்கும்மேலாக லண்டன் மகாநாடு சர்வதேச பங்குபற்றலுடன் கூடிய உண்மையான பல்லின ஒன்று கூடலாக அமைய வேண்டும். மகாநாடு அதன் நோக்கங்களை பிரகடனப்படுத்தி தீர்மானங்களையும் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். இவ்வாறு செய்து பேரினவாத அரசின் வாயை அடைக்கவேண்டும்.

நான் உலகத் தமிழர் பேரவையின் ஒரு உறுப்பினர் அல்ல. வெளியாள். என்றாலும் தமிழ்ச் சமூகத்தின் மத்தியிலான இந்த நிகழ்வுப் போக்குகளை முக்கியமானவை என்று கருதுகிறேன். முற்போக்குச் சிங்களவர்களிடமிருந்து வருகின்ற சாதகமான பிரதிபலிப்புகளை நான் வரவேற்கிறேன். துரதிர்ஷ்டவசமாக பல சிங்களவர்கள் உலகத் தமிழர் பேரவையின் மகாநாட்டிற்கு அழைக்கப்பட்ட போதிலும் கலந்துகொள்ளாதிருக்க தீர்மானித்திருக்கிறார்கள். அரசாங்கமும் பேரினவாதிகளும் இனவாத ரீதியில் அவதூறு செய்வார்கள் என்ற அச்சமே இதற்குக் காரணம். பழி வாங்கலுக்கு ஆளாகவேண்டிவரும் என்ற பயமும் இவர்களுக்கு இருக்கிறது. முதலாவது தான் கூடுதல் முக்கியமானது. தமிழர்களுடன் ஐக்கியப்பட்டுச் செயற்படுவதில் சிங்களவர் ஒருவர் நாட்டம் காட்டினால் அவர் தமிழர்களை நேசிப்பவர் என்று வகைப்படுத்தப்படுவார். குறுகிய மனப்போக்குகளும் தப்பபிப்பிராயங்களும் குட்டி முதலாளி வர்க்கத்தின் பிரிவுகள் மத்தியில் பொதுவானவையாகும். முற்போக்குவாதிகளும் மார்க்சியவாதிகளும் தாராளவாதிகளும் இடையறாது கோட்பாட்டு ரீதியான தாக்குதல்களுக்குள்ளாகிறார்கள். ராஜபக்ஷாக்களுக்கு எதிரான ஆனால், அதேவேளை புலிகளின் கோட்பாடுகளுக்கும் எதிரான ஜனநாயகத் தமிழர்களுடன் கூட்டணியை ஏற்படுத்திக்கொள்வதற்கு துணிச்சல் கொள்ளாத பல முற்போக்குச் சிங்களவர்கள் இருக்கிறார்கள் என்பது ஒன்றும் ஆச்சரியமானதல்ல.

இதற்கான குற்றப்பொறுப்பு ஓரளவிற்கு உலகத்தமிழர் பேரவைக்குமுரியது. இலங்கையில் வாழும் மக்கள் மத்தியில் குறிப்பாக, சிங்களவர் மத்தியில் இந்தப் பேரவை அதன் சொந்த செயல்திட்டங்களை பகிரங்கப்படு த்தி தனது அடையாளத்தை வெளிப்படுத்த போதுமான செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை. ஜனநாயக தமிழ் குழுக்களுக்கும் விடுதலைப் புலிகளின் எச்சசொச்சங்களுக்கும் இடையேயான வித்தியாசத்தை எத்தனை பேர் அறிவார்கள். உண்மையிலேயே உலகத்தமிழர் பேரவையின் செயற்திட்டத்தின் மைய அங்கமாக சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையே ஜனநாயகத்திற்கான கூட்டணியொன்று மனதில் இருக்குமாயிருந்தால் அது தனது அடையாளத்தை முனைப்புறுத்துவதில் துணிச்சலை வெளிக்காட்ட வேண்டும்.

## தாராள ஜனநாயகம்

என்னைப்போன்ற இடதுசாரி சிந்தனை கொண்டவர்கள், தாராளவாதிகளை மட்டுப்படுத்தப்பட்ட துணிச்சலும் அரைகுறையானஇலக்குகளும் கொண்ட பேர்வழிகளாகவே நோக்குகிறோம். பட்டுப்போன இடதுசாரிகளுக்கு நடக்கின்றவற்றையும் சிங்கள குட்டி முதலாளித்துவ பேரினவாத உணர்வுடன் ஒத்துவராத மார்க்சிய நிலைப்பாட்டை எடுப்பதில் ஜே.வி.பி.யும் முன்னரங்க சோசலிசக் கட்சியும் எதிர்நோக்குகின்ற சிக்கல்களையும் கருத்தில் கொண்டு நோக்கும் பொழுது தாராளவாதிகளின் போக்குகளை விமர்சிப்பதில் அர்த்தமில்லை. கதைப்பதற்கு அப்பால், எழுதுவதற்கு அப்பால் (அதுவும் ஆங்கிலத்தில்) தாராளவாதிகள் செயற்பாடு எதிலும் இறங்குவதை தவிர்க்கிறார்கள். தாங்கள் இருப்பதை கோதாபய அவதானித்து விடக்கூடும் என்ற பயம் இவர்களுக்கு.

எவ்வாறெனினும் ஏதேச்சதிகாரத்தை நோக்கிய அரசாங்கத்தின் பயணத்திற்கெதிரான பிரசாரங்களை அவதானித்து வந்திருக்கக்கூடிய எவரும் தாராளவாதப் போக்குடைய சிவில் சமூகத்தின் குறிப்பிட்ட சில பிரிவினரின் மனஉறுதிப்பாட்டினாலும் துணிச்சலினாலும் கவரப்படாமல் இருந்திருக்கமுடியாது. பல சிவில் சமூக இயக்கங்களும் வர்த்தக சபைகளும் இந்தப் போராட்டத்திற்கு தங்களது பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களது செயற்பாடுகளை மூடிமறைக்கவில்லை. வாசுதேவவின் பெயரைக் கேட்டாலே அசௌகரியத்தில் சுருங்கி குறுகாமல் எந்தவொரு இடதுசாரியினாலும் இருக்கமுடியுமா? சர்வாதிகாரியாக வரவிருப்பவரை குறிப்பிட்ட சில தாராளவாதக் குழுக்களும் புத்திஜீவிகளும் வெளிப்படையாக எதிர்ப்பதை எவரால் மறுக்கமுடியும்? நான் பெயர்களைக் குறிப்பிடவிரும்பவில்லை. ஏனென்றால் சமாந்தரமான தடத்தில் பல குழுக்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

## சர்வதேச உதவி

ஜனநாயகத்திற்கு கணிசமான ஆபத்து எங்கே ஏற்படுகிறதோ அங்கே சர்வதேச சமூகம் தட்டிக்கேட்க வேண்டிய தேவை எழுகிறது. சர்வதேச சமூகத்தின் நெருக்குதல் வரவேற்கப்படுகிறது. பர்மா, சிரியா, இலங்கை இதற்கு சொற்ப உதாரணம். சிரியாவில் தீர்க்கமான முறையில் தலையிடவில்லை என்றும் அசாத்தை ஒழித்துக்கட்டவில்லை என்றும் ஒபாமா மீது ஒரு குற்றச்சாட்டு. ஒபாமா இவ்வாறு செய்தால் சிரிய மக்களின் நலன்களுக்கு சிறந்ததாக இருக்கும். ஆனால் அமெரிக்கர்களின் நலன்களுக்கு அது பெரிதும் உதவும் என்று இல்லை. அதனால் ஒபாமாவின் அக்கறை அமெரிக்கர்களின் நலன்களிலேயே இருக்கிறது. அதேபோன்றே சர்வதேச சமூகம் எமக்கு அளிக்கக்கூடிய உதவி எங்களது நலன்களுக்கு உதவியாக இருக்கும். ஆனால் பல சந்தர்ப்பங்களில் பல தரப்பினர்களின் நலன்கள் ஓரிடத்தில் சங்கமிக்கின்றன. இது மிகவும் முக்கியமானது. வளர்ந்து வருகின்ற சர்வாதிகாரத்தை தோற்கடிப்பது இலங்கையர்களுக்கு முக்கியமானது. இலங்கை சர்வாதிகாரியின் காலின் கீழ் போகுமாகயிருந்தால் நீண்ட காலநோக்கில் அது சர்வதேச சமூகத்திற்கும் கூட ஆபத்தானது. அதனால் பெரும்பொருட் செலவும் ஏற்படும். இதில் சர்வதேச சமூகம் என்று குறிப்பிடுவதில் சீனாவும் அடங்கும். பர்மாவிலும், லிபியாவிலும், சூடானிலும் கொடூரமான சர்வாதிகாரிகளை ஆதரித்ததில் உள்ள தவறில் இருந்து சீனா பாடங்களைப் படித்திருக்கிறது. கூடுதலானளவிற்கு நுட்பமான வெளியுறவுக்கொள்கை அணுகுமுறையை பெய்ஜிங்கில் புதிய தலைமைத்துவத்திடமிருந்து எதிர்பார்க்கலாம். மேலும் இலங்கையின் ஜனநாயக இயக்கத்தில் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களையும் ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையையும் ஈடுபடுத்துவது பயனுள்ளதாக அமையும். இலங்கை மக்களின் அமைப்புகளினால் வகுக்கப்படுகின்ற நிபந்தனைகளின் பிரகாரம் அரசாங்கங்களிடம் இருந்தும் உரிமைக் குழுக்களிடமிருந்தும் ஐ.நா. அமைப்புகளிடமிருந்தும் உதவிகளைப் பெறுவது விரும்பத்தக்கது. ராஜபக்ஷாக்களின் நிபந்தனைகளின் அடிப்படைகளில் இதைச்செய்யலாகாது.

சர்வதேச உதவிபற்றி நான் இந்தக் கட்டுரையில் குறிப்பிடுவதற்கு காரணம் இருக்கிறது. மனித உரிமைகள் அமைப்புகளும் பிரிட்டிஷ் கூட்டரசாங்கத்தின் தலைவர்களும் பிரிட்டிஷ் எதிர்க்கட்சி முக்கியஸ்தர்களும் உலகத்தமிழர் பேரவையின் மகாநாட்டில் உரையாற்றவிருப்பதாக நான் அறிகிறேன். இது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆனால், நிகழ்வு முடிந்தபின் மாத்திரமே இறுதி மதிப்பீடு ஒன்றைச் செய்யக்கூடியதாக இருக்கும். ஜனநாயகத்திற்கு ஆதரவாக சிங்கள - தமிழ் ஐக்கியத்தை இந்த மகாநாடு கட்டியெழுப்புமா? தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு சிங்கள மக்களின் ஆதரவை அணிதிரட்ட மகாநாடு பங்களிப்புச் செய்யுமா? இலங்கை மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்குமிடையே ஆரோக்கியமான உறவுமுறையொன்றை ஏற்படுத்த மகாநாடு பங்களிப்புச் செய்யுமா? இந்தக் கேள்விகளுக்கான விடை அமிலப் பரீட்சையாக அமையும். அவைக்கு உதவாத பேரினவாத அவதூறுகள் ஒருபோதும் பதிலாக முடியாது.

## தேயிலைத் தொழில்துறை

# அண்மைக்கால போக்குகளும் தொழிலாளர்களின் நிலையும்

அட்டைப்பட கட்டுரை



### தேயிலைத் தொழிற்துறையினையும் தொழிலாளர்களின் எதிர் காலத்தையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பினை உணர்ந்து தோட்டக்கம்பனிகள் செயலாற்ற வேண்டும்



இரா.ரமேஷ்

நீடித்த போராட்டங்கள், பணிப் பகிஷ்கரிப்பு ஆகியன இல்லாத நிலையில் தொழிலாளர்களின் வேதனம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் கைச்சாத்திடப்படவுள்ள கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் அதிகரிக்கப் பட வேண் டும் என்பது அனைவரினதும் எதிர்பார்ப்பாகும். இவ்வதிகரிப்பு தொழிலாளர்களின் எதிர்பார்ப்புகளை பூரணமாக திருப்திப்படுத்துவதாக அமைய வேண்டும். குறிப்பாக நாளாந்தம் அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவினை ஈடுசெய்வதாக அமைய வேண்டும். உண்மையில், மத்திய வங்கியின் குடிமனைச் செலவு குறிகாட்டிகளுடன் (Household expenditure) ஒப்பிடுகின்றபோது தற்போதைய 380ரூபா அடிப்படைச் சம்பளமானது அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவுகளை ஈடுசெய்வதற்கு போதுமானதல்ல. இவ்யதார்த்

தத்தினைப் புரிந்துகொண்டு பெருந்தோட்டக் கம்பனிகளும், தோட்ட நிர்வாகமும் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பினை ஏற்றுக் கொள்ள வேண்டும். மறுபுறமாக சம்பள நிலுவை, பணிக்கொடை ஆகியவற்றை வழங்கவும் ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

கௌரவமான வேதனத்தை வழங்காது தொழிலாளர்கள் மீது தோட்ட நிர்வாகமும் கம்பனிகளும் அதிக அழுத்தங்களையும், நெருக்கடிகளையும் கொடுத்து வருவதானது தேயிலை உற்பத்தி, தேயிலைத்துறையின் எதிர்காலம், நிலைத்தற்தன்மை (Sustainability) மனிதவள அபிவிருத்தி ஆகியனவற்றின் மீது எதிர் மறையான தாக்கத்தை (Negative im-pact) ஏற்படுத்தியுள்ளது என்பதனை கம்பனிகளும், தோட்ட நிர்வாகமும் மனங்கொள்ளத் தவறியுள்ளமை வருந்தத்தக்க விடயமாகும். உண்மையில், தொடர்ச்சியாக தொழிலாளர்கள் மீது இலாப வேட்டையை நோக்காகக் கொண்டு அழுத்தம் கொடுக்கப் படுமாயின், இயல்பாகவே அவர்கள் மத்தியில் தோட்டத் தொழில் மீது விரக்தி, விருப்பமின்மை, தரக்குறைவு, பிடிப்பின்மை ஆகியவற்றை ஏற்படுத்திவிடும். இது தவிர்க்க முடியாத ஒன்றாகும். இந்நிலை வெறுமனே தோட்டத்தொழில் துறையில் மாத்திரமன்றி தனியார் துறைகளிலும் காணப்படும் ஓர் பொதுவான பண்பாகும். இதன் விளைவாக குறித்த தொழில்துறை, போதியதிறமைமிக்க, அனுபவமுள்ள ஆளணியின்றி அல்லது மன தவளமின்றி பாரிய நஷ்டத்துக்குள் தள்ளப்படுகின்றன. இந்நிலை தேயிலைத்துறையில் பல ஆண்டுகளுக்கு முன்னரேயே ஆரம்பித்துவிட்டமை குறிப்பிடத்தக்கதாகும். அந்தவகையில் இக்கட்டுரையானது தேயிலைத் தொழில் துறையில் அதிகரித்து வரும் தொழிலாளர் பற்றாக்குறை, அதற்கான காரணங்கள் மற்றும் தொழிலாளர் நிலை தொடர்பாக ஆராய முற்படுகின்றது.

இன்று மொத்த தொழிலாளர் எண்ணிக்கை 2,29,100 ஆகும். இவ்வாறு தொழிலாளர் எண்ணிக்கை பாரியளவில் வீழ்ச்சியடைவதற்கு பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. தோட்ட நிர்வாகத்தின் தொழிலாளர் மீதான கட்டுப்பாடு, தொழிலாளர்களை நடத்தும் விதம், சம்பளம், தொழிலாளர் மீதான அழுத்தம், போதிய சேமநல வசதிகளின்மை, அடிப்படை வசதிகளில் மாற்றங்காணாமைபோன்றபலகாரணிகளைக் குறிப்பிடலாம். இதனால் தொழிலாளர் எண்ணிக்கை ஆண்டுதோறும் வீழ்ச்சியடைந்து வருகின்றது. குறிப்பாக இன்றைய இளைஞர், யுவதிகள் தோட்டத் தொழிலை கௌரவமற்ற தொழிலாகப் பார்க்கின்றார்கள். இதன் காரணமாக இன்றைய இளைஞர் சமுதாயம் தோட்டத்தொழில் துறையில் இருந்து விடுபட்டுச் செல்லும் நிலையினை வெளிப்படையாகவே அவதானிக்க முடிகின்றது. இதற்கு மனிதவள அபிவிருத்தி சரியான முறையில் இடம்பெறாமை, தொழிலாளர் நலன்கள் பேணப்படாமை, அவை அலட்சியம் செய்யப்படுகின்றமை ஆகியன காரணமாகும். ஆகவே தோட்ட நிர்வாகமும், கம்பனிகளும் மனித வளத்தை தக்க வைப்பதற்கான, அபிவிருத்தி செய்வதற்கான உபாயங்களை வகுக்க வேண்டும். ஒரு சில கம்பனிகள் இது விடயத்தில் ஆர்வம் செலுத்தி வருகின்றபோதும், அது பூரண திருப்தி தருவதாக இல்லை என்பது தொழிலாளர்களின் கருத்தாகும்.

மனிதவளத்தை முகாமை செய்வது, அபிவிருத்தி செய்வது, தொழிலாளர்களின் பொது நலன்களை நிறைவேற்றும் நோக்கில் முதலீடு செய்வது, முகாமைத்துவச் செயற்பாடுகளில் தொழிலாளர் பங்கேற்புக்கான சட்டகத்தை (framework) உருவாக்குதல் ஆகியன பெருந்தோட்டக் கம்பனிகளின் நிறைவேற்று அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டிய கடமைகளாகும். குறிப்பாக, தோட்ட உத்தியோகத்தர்களை (Estate management and staff) இது விடயத்தில் இயன்றளவு பயிற்றுவிக்க வேண்டும். கம்பனிகள் பயிற்சி மற்றும் அபிவிருத்திக்காக அதிக பணத்தை முதலிட வேண்டும். தொழிலாளர்களுக்கு பயிற்சி வழங்குவதன் மூலம், தொழில்சார் அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் கிடைக்கும் இருதரப்பு நன்மைகள் குறித்து சிந்திக்க வேண்டும்.

> தோட்டத்தொழிலாளர்களின் எண்ணிக்கை ஆண்டு தோறும் வீழ்ச்சியடைந்து வருகிறது. இளைஞர், யுவதிகள் தோட்டத்தொழிலை கௌரவமற்ற தொழிலாகப்பார்க்கிறார்கள். இதன் காரணமாக இன்றைய இளைஞர் சமுதாயம் தோட்டத்தொழில் துறையில் இருந்து விடுபட்டுச் செல்லும் நிலையினை வெளிப்படையாகவே அவதானிக்க முடிகிறது

அண்மைக்காலங்களில், தொழிலாளர் பயிற்சி, திறன்விருத்தி என்பவற்றில் அதிகரித்த இடைவெளி ஏற்பட்டுவருவதாகவும், அது தொழிற்துறையில் சாதனைகளை அடைவதற்கு தடையாக இருப்பதாகவும் அறிய முடிகின்றது. குறிப்பாக சரியான தலைமைத்துவமின்மை, தலைமைத்துவ அபிவிருத்தியின்மை, உயர் சாதனைகளை மற்றும் சிறந்த தொழிற்படையினை உருவாக்க முடியாமை, திறமைமிக்க முகாமைத்துவமின்மை, உற்பத்தித் திறன் முன்னேற்றப்படாமை, தொழில்நுட்பங்களைச் சரியாகப் பயன்படுத்தாமை ஆகியன உற்பத்தித்திறன் வீழ்ச்சி, மனிதவளப் பற்றாக்குறை என்பவற்றுக்கு பெரிதும் காரணமாக உள்ளதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. மேற்கூறிய காரணிகளை சரியாக அடையாளம் கண்டு அவற்றுக்கான மாற்று உபாயங்களை வகுப்ப

தன் மூலம் உற்பத்தி, மனிதவள அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்கலாம்.

மனிதவள அபிவிருத்திக்காக தற்போது மிகக்குறைந்த பணத்தினையே கம்பனிகள் முதலீடு செய்து வருகின்றன. இந்நிலை மாறி தொழிலாளர் சேமநலன் மற்றும் சமூக அபிவிருத்திக்காக அதிக பணத்தினை முதலிட வேண்டும். இது ஆரம்பத்தில் ஒரு மேலதிக பொருளாதாரச் சுமையாக அமையலாம். ஆயினும் இதன் மூலம் நீடித்த பயனை, வருவாயை ஈட்ட முடியும் என்பதனை உணர்தல் வேண்டும். உண்மையில், தொழிலாளர்களின் சமூகத் தேவைகள் நிறைவேற்றப்பட்டு, அவர்களுக்கு கௌரவமான சம்பளம் வழங்கப்படுமாயின், அது உற்பத்தி, தோட்ட மற்றும் கம்பனி இலாபம், தொழிலாளர் அர்ப்பணிப்பு, கடின உழைப்பு, தொழில் ஒழுக்கம் மற்றும் தொழில் பற்று என்பவற்றில் சாதகமான (positive impact) ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. தொழிலாளர்கள் மாத்திரமன்றி இன்று கம்பனிகளும் பல உள்வாரியான (நாட்டின் அரசியல் சூழ்நிலை, வெளிநாட்டுக் கொள்கை மாற்றம்)மற்றும் வெளிவாரியான (சர்வதேச நிதி மற்றும் பொருளாதார நெருக்கடி, மேற்கத்தேய நாடுகளின் இலங்கை மீதான எதிர்மறையான பார்வை) சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றன என்பது மறுப்பதற்கில்லை.

இருந்தபோதிலும், இந்நிலையினை சரிசெய்வதற்கு அவசியமான தந்திரோபாயங்களை வகுப்பதே புத்திசாலித்தனமாகும். இதுவே காலத்தின் தேவையாகும். நீண்ட கால அடிப்படையில் தேயிலை தொழிற்துறையை தக்கவைப்பதற்கு தலைமைத்துவ கலாசாரம் (Leadership culture) ஒன்றினை உருவாக்க வேண்டும். மனிதவள அபிவிருத்தி தொடர்பான தொடர் பயிற்சிகளையும் கல்வியையும் வழங்க வேண்டும். தேயிலை தொழிற்துறையின் அடிப்படைப் பிரச்சினைகளை கம்பனிகளின் நிறைவேற்று அதிகாரிகளும், கம்பனி உடைமையாளர்களும் அடையாளம் காண வேண்டும். இந்தியா, கென்யா மற்றும் மலாவி போன்ற நாடுகளில் மனிதவள அபிவிருத்தி, உற்பத்தி உயர்வு ஆகியவற்றை இலக்காகக் கொண்டு பல பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அவற்றினை இலங்கை தேயிலைத் தோட்டங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்கென தனியான பயிற்சிப் பிரிவொன்றினை தாபிக்க வேண்டும். காரணம், சர்வதேச சந்தையில் இலங்கைத் தேயிலை ஆதிக்கம் செலுத்தும் நிலை வீழ்ச்சியடைந்து செல்வதுடன், (உள்நாட்டு அரசியல் சூழமைவு, சர்வதேச உறவுகளில் ஏற்பட்டுள்ள மாற்றம், மனித உரிமைப் பிரச்சினைகள், போர்க் குற்றங்கள் காரணமாக) சர்வதேச ரீதியாக போட்டியாளர்களும் அதிகரித்துள்ளனர் (சீனா, இந்தோனேசியா, வியட்னாம், தன்சானியா, இந்தியா, கென்யா, உகண்டா). இன்று சர்வதேச தேயிலைச் சந்தையை இந்தியா, கென்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் தக்கவைத்துள்ளன. மறுபுறமாக அதிகளவில் தேயிலையை இறக்குமதி செய்யும் பிரித்தானியா மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகியன வேறு நாடுகளிடமிருந்து தேயிலையைக் கொள்வனவு செய்ய ஆரம்பித்துள்ளன. இதற்கு இலங்கையின் அரசியல் காரணிகள் ஏதுவாக அமைந்துள்ளன. சர்வதேச சந்தையில் தேயிலை ஏற்றுமதியில் ஆதிக்கம் செலுத்திவரும் நாடுகளின் உற்பத்தி மற்றும் விளைச்சல் தொடர்பான சில தரவுகளைக் கீழுள்ள அட்டவணை காட்டுகின்றது.

இன்று தொழிலாளர் மைய ஆய்வுகளை மேற்கொள்வதற்கான தேவையொன்றும் காணப்படுகின்றது. சமூகவியல் கண்ணோட்டத்தில் இத்தகைய ஆய்வுகளை மேற்கொள்வதன் மூலம் தொழிலாளர்கள் தேயிலைத் தொழிற்துறை மீது கொண்டிருக்கும் எண்ணப்பாங்குகளை அடையாளம் காணமுடியும். இத்தகைய ஆய்வுகள் மனிதவள அபிவிருத்தி தொடர்பான பல பிரச்சினைகளை அடையாளம் காணவும் அவற்றுக்கான மாற்று உபாயங்களை வடிவமைப்பதற்கும் பெரிதும் துணை புரியும். அதேபோல் தோட்டக் கம்பனிகள் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான விடயங்களில் கரிசனை காட்ட வேண்டும். ஒரு சில கம்பனிகள் இத்தகைய விடயங்களில் ஈடுபாடு காட்டி வருகின்றன. தொழிலாளர்களின் வேலைத்தள சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக்கு அவசியமான உபகரணங்களை வழங்க வேண்டும். அதுகுறித்த பயிற்சிகளையும் வழங்க வேண்டும் (முதலுதவி, அனர்த்த முகாமைத்துவம், அனர்த்தங்களை முன்கூட்டியே அறிவித்தல் போன்ற பயிற்சிகள்). வேலைத்தள சுகாதாரம்

**தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடுகள், உற்பத்தி மற்றும் விளைச்சல்**

| நாடுகள் | தேயிலை உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் நிலம் (ஹெக்ரயரில்) | ஒரு ஹெக்ரயருக்கான தேயிலை விளைச்சல் (கிலோ கிராமில்) |
|---|---|---|
| சீனா | 8,44000 | 856 |
| பங்களாதேஷ் | 49,000 | 1041 |
| இந்தோனேசியா | 110,000 | 1386 |
| இந்தியா | 470,000 | 1595 |
| இலங்கை | 187,000 (இதில் 93000 ஹெக்ரயர் சிறு உடைமையாளர்களிடம்) | 1470 |
| கென்யா | 114,000 | 1930 |

மூலம்: **The Tea Market: A Background Study, 2006/07**

மற்றும் பாதுகாப்பு தொடர்பான பயிற்சிகள் தோட்ட முகாமையாளர், தோட்ட உத்தியோகத்தர்கள் உட்பட சகலருக்கும் வழங்கப்பட வேண்டும். தோட்ட நிர்வாகம் தொழிலாளர்க ளின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு குறித்து அக்கறை செலுத்தும் போது, அது தொழிலாளர்களின் மனங்களில் தோட்ட நிர்வாகம் பற்றிய நேர்மறை யான சிந்தனைகளைத் தூண்டும்.

இன்று தோட்டத்துறைகளில் அதிக மாக முரண்பாடுகள் ஏற்படுகின்றன. முரண்பாடுகள் தொழில் தளங்களில் ஏற்படுவது இயல்பாகும். ஆயினும், இத்தகைய முரண்பாடுகளை தோட்ட நிர்வாகம் தீர்த்து வைக்கும் வழி முறையானது தொழிலாளர்களின் மனங்களை பெரிதும் புண்படுத்தி விடுகின்றது. ஆகவே தொழிலாளர் கள், தோட்ட உத்தியோகத்தர்கள் மற் றும் இத்துறை சார்ந்த அனைவ ருக்கும் முரண்பாடு, முரண்பாட்டு முகாமைத்துவம், முரண்பாட்டுத் தீர்வு குறித்து பயிற்சியளிக்க வேண் டும். முரண்பாடுகள் தோட்ட நிர்வா கத்துக்கும் தொழிலாளர்களுக்குமி டையே அதிகம் ஏற்படுகின்றன. இவ ற்றினை ஒருபக்கச் சார்பாக தீர்த்து வைப்பதனால் தோட்ட நிர்வாகத்தின் மீது தொழிலாளர்கள் மத்தியில் அவ நம்பிக்கை, வெறுப்பு, மனக்குரோதம், ஓரங்கட்டப்படல் போன்ற எண்ணங் கள் ஏற்படுகின்றன.

மிக முக்கியமாக, இன்று இலங் கைத் தேயிலையை வெளிநாடுகளில் கொள்வனவு செய்யும் முகவர் நிறுவ னங்கள் தொழிலாளர்களின் சேம நலன், அடிப்படை வசதிகள், சமூகத் தேவைகள், தொழிலாளர் உரிமை, கௌரவமான சம்பளம், வேலை நேரம், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகிய விடயங்களில் அதிக அக் கறை செலுத்தி வருகின்றன. இன்று தேயிலையை கொள்வனவு செய்யும் முகவர் நிறுவனங்கள் தொழிலாளர் நிலைகளையும், அவர்களின் சமூக, பொருளாதார பிரச்சினைகளையும் நன்கு உணர்ந்துள்ளனர். ஆகையால், தேயிலையை ஏற்றுமதி செய்யும் பெருந்தோட்டக் கம்பனிகள் மீது பல

**இன்று தோட்டத் தொழிலாளர்கள் தோட்ட நிர்வாக விடயங்களில் பங்கெடுக்க விரும்புகிறார்கள். தோட்டத்தின் உற்பத்தி, இலாபம் பற்றிய விடயங்களை அறிய விரும்புகிறார்கள். இதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்**

கட்டுப்பாடுகளை விதிப்பதுடன், இலங்கைத் தேயிலையை கொள்வ னவு செய்வதற்கு அடிப்படைத் தகை மையாக கொண்டிருக்கவேண்டிய சில சான்றிதழ்களையும் அறிமுகம் செய்துள்ளனர் (ISO, FLO, ETP). இத்தகைய சான்றிழ்களைப் பெற் றுள்ள தோட்டங்களின் தேயிலைக்கு சர்வதேச சந்தையில் முன்னுரிமை வழங்கப்படுகின்றன. இச்சான்றிதழ் களை தோட்ட நிர்வாகம் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின், அதற்கு பல நிபந்தனைகளையும் விதிக்கின் றார்கள். அத்தகைய நிபந்தனைகளில் அதிகம் பேசப்படுவது தொழிலாளர் களின் சேமநலன், அடிப்படை வசதி கள், வேலைத்தள சுகாதாரம், பாது காப்பு, சம்பளம், வேலை நேரம், தொழிலாளர் உரிமை ஆகிய விட யங்களாகும்.

மேற்கூறிய விடயங்களைச் சரி யான முறையில் தோட்ட நிர்வாகம் நிறைவேற்றியிருந்தால் மாத்திரமே இத்தகைய சான்றிதழ்கள் வழங்கப் படுகின்றன. வேறுவகையில் கூறின், சர்வதேச தொழிலாளர் நியமங்களை அடிப்படையாகக் கொண்டே இத்த கைய சான்றிதழ்கள் வழங்கப்படுகின் றன. ஆகவே, தோட்ட நிர்வாகம் மற் றும் கம்பனிகள் தொழிலாளர் நலன் களுக்கு முன்னுரிமையளித்து அவர் களின் பிரச்சினைகளையும் தேவைக ளையும் நிறைவேற்றி, தொழிலாளர் களை திருப்திப்படுத்துவதன் மூலம் இலகுவாக இதனைப் பெறமுடியும்.

உண்மையில், இத்தகைய சான்றி தழ்களை பெற்றுக்கொள்ள வேண்டு மாயின், தொழிலாளர் வாழ்க்கைத்தர உயர்விற்காக மேலதிக முதலீ டொன்றை தோட்ட நிர்வாகமும், கம் பனிகளும் மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் உயர் விலையில், நிலை யான விலைக்கு, தொடர்ந்து கேள் வியை தக்கவைத்துக்கொண்டு சர்வ தேச சந்தையில் தேயிலையை விற்க முடியும். இத்தகைய சான்றிதழ்கள் உயர் தரத்தையும், அதிக கிராக்கியி னையும், உயர் விலையையும் பெற் றுத்தரும் என்பதில் ஐயமில்லை. இதன் மூலம் தோட்டக் கம்பனிகள் பெரும் இலாபத்தை ஈட்ட முடியும். தோட்டத் தொழில் துறையை முன்னேற்ற முடியும், தொழிலாளர் நலனில் அக்கறைகாட்ட முடியும்.

மேலும், விஞ்ஞான தொழில்நுட் பங்களைப் பயன்படுத்துவதன் முக்கி யத்துவம், அதனைப் பயன்படுத்தும் வழிமுறைகள், அறிவினை இற்றைப் படுத்தல் (updating knowledge), தொடர்ச்சியான தகவல் பரிமாற்றம் ஆகியன தேயிலைத் தொழிற்துறை க்கு அவசியமாகும். காரணம் பல் வேறு உள்ளகக் காரணிகளும் வெளிக்காரணிகளும் (காலநிலை, விலை வீழ்ச்சி, விலை தளம்பல், கேள்வி தளம்பல், அரசியல் சூழ் நிலை) இத்துறையில் நேரடியாகவும் மறைமுகமாகவும் செல்வாக்குச் செலுத்துகின்றன. இத்தகைய செயற் பாடுகளை மேற்கொள்வதில் மனித வள முகாமையாளர் ஓர் வசதியளிப் பாளராக (facilitator) இருக்க வேண் டும். உண்மையில் நெருக்கடி நிறை ந்த இன்றைய தேயிலைத்துறையை பாதுகாப்பதில் மனிதவள முகாமை யாளர்களுக்கு பாரிய பொறுப்புண்டு.

குறிப்பாக பல தோட்ட முகாமை யாளர்கள் மற்றும் தோட்ட உத்தியோ கத்தர்கள் மனித வளத்தின் முக்கியத் துவம் பற்றியும், அதனை அபிவிரு த்தி செய்வதற்கான நடைமுறைகள்

குறித்தும் போதிய அறிவற்றவர்களா கவே காணப்படுகின்றனர். உண்மை யில் மனிதவள அபிவிருத்தியில் பெரிதும் கரிசனைகாட்ட வேண்டி யது தொழிலாளர் நலன், அடிப்ப டைத்தேவைகள், தொழிலாளர் உரி மைகள் தொடர்பான விடயங்களா கும். இவை சரியாக நிறைவேற்றப் பட்டால் இயல்பாகவே 'தமது தோட் டம்' 'எனது தோட்டம்' என்ற உரித்து (sense of ownership) தொழிலாளர் கள் மத்தியில் கட்டியெழுப்ப முடி யும்.

அதேவேளை, இன்று பொதுவா கவே தோட்டங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமை யாளர்கள் மனிதவளப்பற்றாக்குறை, தேயிலைத் தொழில் துறையில் அதிக ரித்துவரும் சவால்கள் காரணமாக இத்துறையினை கைவிட்டுச் செல் லும் நிலை அதிகரித்துள்ளது. அவர்க ளில் பலர் இத்துறையில் நீண்டகால அனுபவமும், சிறப்புத் தேர்ச்சியும் பெற்றவர்களாகும். இத்தகையோரை தேயிலைத் தொழிற்துறையை விட் டுச் செல்லவிடாது தக்கவைக்க பொருத்தமான நடவடிக்கைகளை கம்பனிகள் மேற்கொள்ள வேண்டும். இது தேயிலைத் துறையில் ஏற்பட்டு வரும் பிரிதொரு சவாலாகும். இத ற்கு மனிதவள பிரச்சினையும் ஒரு முக்கியகாரணமாக உள்ளது.

தொழிற்சங்க அரசியல் பெருந் தோட்டங்களில் அதிகரித்து வருவது டன், அதனால் தோட்டத் துறையின் செயற்பாடு, உற்பத்தி, இலாபம் ஆகி யன பாதிக்கப்படுவதாக கம்பனிகள் குறிப்பிடுகின்றன. உண்மையில், தொழிலாளர் நலன், உரிமைகள் பாதிக்கப்படும் போது அல்லது மீறப் படும் போது தொழிற்சங்கச் செயற் பாடுகள் எழுச்சி பெறுவது தவிர்க்க முடியாத விடயமாகும. இத்தகைய எதிர்ப்புகளை, தொழிலாளர் நலன் மற்றும் உரிமைகளை மதிப்பதன் மூலம் பாதுகாப்பதன் மூலம் எளிமை யாகத் தவிர்க்கலாம். அதன் மூலம் சகல தொழிற்சங்கங்களையும் தோட் டத்துறை முன்னேற்றம் மற்றும் உற் பத்தி உயர்வுக்காக உழைக்க வழி செய்யலாம்.

தோட்டத்துறையில் மனிதவள அபிவிருத்தி மற்றும் பற்றாக்குறை க்கு பிறிதொரு காரணி கூட்டு ஒப்பந் தமாகும். இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை தொழிலாளர்களின் தலை விதியை தீர்மானிப்பதாக இவ்வொப் பந்தம் காணப்படுவதுடன், இதனால் தொழிலாளர்கள் பல அடக்குமுறைக ளுக்கும் உரிமை மீறல்களுக்கும் உள்ளாவதாக ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளன. அதேவே ளை, கூட்டு ஒப்பந்தத்தில் வெறு மனே சம்பள விடயம் மாத்திரம் பேசப்படுவதுடன், ஏனைய தொழி லாளர் நலன், உரிமை சார்ந்த விட யங்கள், தொழில் நியமங்கள், சேம நலன்கள் பற்றி பேசப்படுவதில்லை என தொழிலாளர்கள் தமது மனக் குறைகளை வெளிப்படுத்தி வருகின் றார்கள். இதனால் ஒப்பந்தம் கைச் சாத்தானதன் பின்னர் சில வகையான அடக்குமுறைகளுக்கு எதிராக நியா யம் தேடிச் செல்ல முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இக்காரணியும் தேயிலைத் தொழில் துறையின் மீது தொழிலாளர்கள் விரக்தி கொள்வதற் கும், விலகிச்செல்வதற்கும் காரண மாக உள்ளது. இதன் விளைவாக அண்மைக்காலமாக அதிகம் மனி தவள பிரச்சினை பெருந்தோட்டங்க ளில் ஏற்பட்டுவருகின்றது. இவ்விட யம் குறித்து கம்பனியின் உயர்மட்ட அதிகாரிகள் கம்பனி உடைமை யாளர்கள் மற்றும் மலையக அரசியல் தலைமைகள் ஆகியன அதிக அக் கறைக்காட்ட வேண்டும். கூட்டு ஒப் பந்தத்தில் காணப்படும் ஏனைய விட யங்கள் குறித்தும் அக்கறைக்காட்டப் பட வேண்டும். அன்றில் இது தேயிலை தொழிற் துறையின் அழிவு க்கு வழிவகுத்துவிடும்.

எல்லாவற்றுக்கும் அப்பால் இன்று தோட்டத் தொழிலாளர்கள் தோட்ட நிர்வாக விடயங்களில் பங்கெடுக்க விரும்புகின்றார்கள். தோட்டத்தின் உற்பத்தி இலாபம் பற்றிய விடயங் களை அறிய விரும்புகின்றார்கள். இதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் (தோட்டத் தின் மற்றும் கம்பனியின் மாதாந்த, மொத்த உற்பத்தி, வருடாந்த மொத்த உற்பத்தி, இலாபம், நட்டம் ஆகிய வற்றை பொது அறிவித்தல் பலகைக ளில் காட்சிப்படுத்தல்). முகாமைத் துவ செயற்பாடுகள் மற்றும் தீர்மான ங்களில் தொழிலாளர்களுக்கு வாய் ப்பு வழங்கப்பட வேண்டும். இதன் மூலம் தொழிலாளர்- முகாமைத்து வத்திற்குமிடையில் பரஸ்பர நம்பிக் கையினை, புரிந்துணர்வினைக் கட்டி யெழுப்ப முடியும். வேறு வார்த்தை யில் கூறுவதாயின், தொழிலாளர்கள் இன்று தோட்ட நிர்வாகம் மற்றும் கம் பனியிடமிருந்து வெளிப்படைத் தன்மை (Transparency) மற்றும் பொறுப்புக்கூறுதல் (Accountability) ஆகியவற்றை எதிர்பார்க்கின் றார்கள்.

இத்தகைய விடயங்களை மனங் கொண்டு கம்பனிகள் மற்றும் தோட்ட நிர்வாகம் செயற்படுமாயின் மனித வளத்தை நிர்ணயிக்கப்பட்ட இலக் கினை அடையும் வகையில் அபிவி ருத்தி செய்ய முடியும். பயன்படுத்த முடியும். இது ஒரு சவாலான காரிய மாகும். இதனைச் சரியான திட்டமிட லுடன் மேற்கொள்ள வேண்டும். சுருங்கக் கூறின் மனிதவள அபிவி ருத்தியில் பெருந்தோட்டக் கம்பனி கள் அதிக அர்ப்பணிப்பினைக் காட்ட வேண்டும். அதற்காக அதிகப் பணத்தை முதலிட வேண்டும். தொழி லாளர்களின் சமூக மற்றும் அடிப்ப டைத் தேவைகள், சம்பளம் தொடர் பான பிரச்சினைகளைத் தீர்க்க வேண் டும். தொழிலாளர் மீதான அழுத்தத் தைக் குறைக்க வேண்டும். அன்றில் தோட்டத் தொழில் துறை பெரிய ஆபத்துக்குள் தள்ளப்படும். அதன் நிலைத்தல் தன்மை கேள்விக்குறியா கிவிடும். இது ஒட்டு மொத்த தொழி லாளர் சமூகத்தை மாத்திரமன்றி கம்ப னிகளையும், அதில் தங்கி பணி புரியும் ஆயிரக்கணக்கானோரையும் வெகுவாகவே பாதித்துவிடும். அவ் வாறு அன்றி, தொழிலாளர்கள் மீது அழுத்தம் பிரயோகிப்பதன் மூலமோ, அவர்களின் நலன்களையும்,


(57ஆம் பக்கம் பார்க்க...)

நேர்காணல்

# 'இடதுசாரி இயக்கங்களுக்கு புதிய நூற்றாண்டுக்கான புதிய கோட்பாட்டு உருவாக்கங்கள் தேவை'

வீ.தனபாலசிங்கம்

உலகளவில் இன்று மிகப்பெரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. முதலாளியத்துக்கு இத்தகைய நெருக்கடிகள் தவிர்க்க இயலாது என முன்னூகித்துச் சொல்லிய மார்க்சியத்தின் பால் இந்த நெருக்கடி கவனத்தை ஈர்த்துள்ளது. எனினும் இத்தகைய கவன ஈர்ப்பை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள உலகளவில் உள்ள இடதுசாரி இயக்கங்கள் எந்தளவிற்குத் தயாராகவுள்ளன? இதுகுறித்து மார்க்சியச் சிந்தனையாளரும் சோசலிசக் கட்டுமானங்களின் வீழ்ச்சி குறித்து விரிவான ஆய்வுகளைச் செய்தவரும் மார்க்சியத்தில் வளர்ச்சிகள் தேவை என்று தொடர்ந்து வற்புறுத்தி வருபவருமான தமிழகத்தைச்சேர்ந்த **பேராசிரியர் அ.மார்க்ஸிடம்** கருத்தறிய சமகாலத்தின் சார்பில் சந்தித்து உரையாடியபோது...



**உலகளாவிய ரீதியில் சமகால இடதுசாரி இயக்கங்களின் செயற்பாடுகள் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?**

சென்ற நூற்றாண்டில் இடதுசாரி இயக்கங்கள் மிகப்பெரிய வெற்றிகளையும் கடும் தோல்விகளையும் சந்தித்துள்ளன. இந்தத் தோல்விகள் உலகளவில் இடதுசாரி இயக்கங்களுக்கு பாரியளவிலான பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளன. சோசலிசக் கட்டுமான முயற்சிகளை மேற்கொண்டிருந்த சோவியத் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் உள்ள அரசுகள் கவிழ்ந்தது மட்டுமல்லாமல், அங்குள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் இன்று முற்றிலும் அழிந்துள்ளன அல்லது மிகவும் பலவீனமடைந்துள்ளன.

இன்னொரு பக்கம் சீனா போன்ற நாடுகள் கடும் அடக்குமுறையால் எதிர்ப்புகளைச் சமாளித்துக் கொண்டு உலக முதலாளிய வலைப்பின்னலுடன் சமரசமாகி தங்களின் சோசலிசக் குறிக்கோளில் இருந்து குறிப்பிடத்தக்க அளவில் விலகியுள்ளன. இன்னொரு நிலையில் பல நாடுகளில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் மரபு வழிப்பட்ட புரட்சிகரத்திட்டங்களை

**பழைய அணுகுமுறைகள் பின்னடைவுக்குள்ளாகியிருப்பது குறித்து பிரக்ஞை கொள்வது ஒரு அவசிய நிபந்தனையாகும்**

சற்றே ஒதுக்கிவைத்துவிட்டு பிற முதலாளிய அரசியல் கட்சிகளுடன் தேர்தல் களத்தில் போட்டியிடும் நிலைக்கு வந்துள்ளன. இவை முதலாளிய ஜனநாயகப்புரட்சி, சோசலிசப் புரட்சி, நீண்டகால மக்கள் யுத்தம், மக்கள் ஜனநாயகப் புரட்சி, முதலான கருத்தாடல்களுக்கு தங்களின் சொல்லாடலில் இடமளிப்பதில்லை. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பதை வெளிப்படையாகவே மறுக்கின்றன.

ஆயுதப் போராட்டம், மாவோயிசப் பாதை முதலியவற்றை இன்னும் சொல்லிக் கொண்டிருக்கக்கூடிய இயக்கங்கள், குறிப்பாக, லத்தீன் அமெரிக்காவில் இருக்கக்கூடிய பெருவின் "ஷைனிங் பாத்", கொலம்பியாவின் "பார்க்" (FARC) முதலியன மிகவும் பலவீனப்பட்டுள்ளன. இந்தியாவில் அரசைக் கடுமையாக எதிர்த்து ஆயுதப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கக்கூடிய இந்திய மாவோயிசக் கட்சி கடுமையான அடக்கு முறையின் காரணமாக பெரும் பின்னடைவுகளைச் சமீபகாலத்தில் சந்தித்துள்ளது.

சோசலிசக் கட்டுமானங்களின் வீழ்ச்சியையொட்டி அதன் காரணங்கள் குறித்த விரிவான, திறந்த மனதுடன் கூடிய விவாதங்கள் இல்லாமையும் 1990களுக்குப் பின்னர் உலகளவில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து தீவிரமான ஆய்வில்லாமையும் பொதுவில் இன்றைய இடதுசாரி இயக்கங்களில் ஒரு தேக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்றே சொல்ல வேண்டும். இந்த நிலையில் இருந்து மீள்வதற்கு முதலில் பழைய அணுகுமுறைகள் பின்னடைவுக்குள்ளாகியிருப்பது குறித்து பிரக்ஞைகொள்வது ஒரு அவசிய நிபந்தனையாகும்.

**கடந்த நூற்றாண்டின் சோசலிசக் கட்டுமான முயற்சிகளின் தோல்விகளில் இருந்து எத்தகைய பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று நினைக்கிறீர்கள்?**

சோசலிச முயற்சிகளின் தோல்விக்கு ஏகாதிபத்திய சதிகளுக்கு ஒரு பங்கு இருந்தபோதிலும், அவை பெரும்பாலும் அந்தந்த நாட்டில் மக்களின் எதிர்ப்புகளின் ஊடாகவே அவை தூக்கியெறியப்பட்டன என்பதை நாம் காணத்தவறக் கூடாது.

ருமேனியாவின் சீசெஸ்குவை கிட்டத்தட்ட இத்தாலியில் முசோலினியைத் தூக்கியெறிந்ததைப் போலவே ருமேனிய மக்கள் கொன்று குப்பையில் எறிந்தார்கள். சோவியத் ரஷ்யாவிலும் கூட, லெனின், ஸ்ராலின் ஆகியோரின் சிலைகள் எல்லாம் கூட தாக்கப்பட்டன. உலகவரலாற்றின் மகத்தான சாதனைகளாக வெளிப்பட்ட கடந்த நூற்றாண்டுச் சோசலிசப் புரட்சிகள் வெற்றிகரமாக உலக முதலாளிய வலைப்பின்னலில் இருந்து தம்மைத் துண்டித்துக் கொண்டு சுயபொருளாதார முயற்சியொன்றை கட்டமைத்தன. புகழ் பெற்ற எகிப்திய மார்க்சிய பொருளாதாரச் சிந்தனையாளரும் மாவோவாதியுமான சாமிர் அமின் இதனை "தேசியச் சுயமைய வளர்ச்சி" (National Autocentsie Development) என்பார்.

அதேபோன்று உற்பத்திச் சாதனங்களில் இருந்த தனியுடைமைப் புரட்சிக்குப் பிந்திய நாடுகளில் வெற்றிகரமாக ஒழிக்கப்பட்டன. மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதலின் கீழ் உற்பத்திச் சக்திகள் வளர்ச்சிக்கு இட்டுச் செல்லப்பட்டன. இந்த மூன்றையும் சோசலிசக் கட்டுமானத்தின் அவசிய நிபந்தனைகள் (Necessary conditions) என்பார்கள். ஆனால், இவை சோசலிசக் கட்டுமானத்திற்கான போதுமான நிபந்தனைகள் (Sufficient Conditions) ஆகா.

உண்மையான சோசலிசம் என்பது உற்பத்திப் புள்ளியில் உற்பத்தியின் மீதும் சகலவிதமான கருத்துருவாக்கம் மற்றும் நிருவாக நடைமுறைகளிலும் பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சியை நிறுவி அதை உண்மையான ஆளும் வர்க்கமாக மாற்றுவதுதான். இதுவே சோசலிசத்துக்கான போதுமான நிபந்தனை. அப்போதுதான் நகரம்-கிராமம், தொழிலாளி-விவசாயி, மூளைஉழைப்பு - உடல் உழைப்பு முதலானவற்றில் உள்ள வேறுபாடுகள் ஒழிந்து சுரண்டல்கள் ஒழியும். அப்படி ஒழியும்போது தான் உண்மையான அரசியல் மற்றும் சமூக ஜனநாயகம் நிலவும். சோசலிசப் பண்பாடும் புதிய மனிதனும் உருவாகும் நிலை ஏற்படும்.

புரட்சிக்குப் பிந்திய சமூகங்களில் இந்நிலை என்றைக்குமே ஏற்பட்டதில்லை. முதலாளியச் சமூகங்களில் இருந்ததைக் காட்டிலும் அதிகளவில் பாட்டாளி வர்க்கம் உற்பத்திச் சாதனங்களில் இருந்து அந்நியப்பட்டேயிருந்தது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்கிற பொதுவுடைமைக் கட்சியின் கீழான ஒரு கட்சி ஆட்சி முறையும் கருத்து வேறுபாடுகளுக்கு இடமில்லாமையும் இந்நிலை ஏற்படுவதற்கு முக்கிய காரணங்களாக அமைந்தன. வர்க்க சர்வாதிகாரம் என்கிற பெயரில் மக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட சோசலிசக் கட்டுமானங்களில் தோல்விக்கு ஒரு முக்கிய காரணமாக விளங்கியது.

**அப்படியானால் மார்க்சியம் தோற்றுவிட்டது. முதலாளிய ஜனநாயகம் வென்றுவிட்டது என்று அர்த்தப்படுத்த முடியுமா?**

நிச்சயமாக அப்படிக் கூறமுடியாது. சோசலிசக் கட்டுமானத்தில் ஏற்பட்டுள்ள தோல்விகளுக்கு மார்க்சியம் பொறுப்பாக முடியாது. மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியோர் சோசலிசம் குறித்து ஆழமான தத்துவச்செறிவுள்ள சில கருத்துகளை ஆங்காங்கு விட்டுச் சென்ற போதிலும், அது குறித்து விரிவான ஆய்வுகளைச் செய்ததில்

லை. 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அவர்கள் அன்று கோரப் பசியுடன் வளர்ந்து கொண்டிருந்த முதலாளியத்தின் விதிகளைக் கண்டறிவதிலேயே தங்கள் நேரத்தைச் செலவிட்டனர். எனவே, இருபதாம் நூற்றாண்டுச் சோசலிச முயற்சிகள் தோல்வியுற்றதை வைத்துக் கொண்டு மார்க்சியம் தோற்றுவிட்டது என்று சொல்லிவிட முடியாது.

முதலாளியக் கட்டுமானம் = சந்தைப் பொருளாதாரம் = ஜனநாயகம் என்பது போலவும்,

சோசலிசக் கட்டுமானம் = மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதல் = அதிகாரவர்க்கமயமாதல் = ஜனநாயக உரிமைகள் இல்லாமை என்பதுபோலவும் இன்று மார்க்சியத்துக்கு கல்லறை வாசகங்கள் எழுதுவோர் கூறுகின்றனர். அப்படிச் சொல்ல முடியாது. சோசலிச நாடுகளில் இப்படியான நிலைமை ஏற்பட்டதற்கான காரணங்களை நான் சற்று முன் விளக்கினேன். சந்தைப் பொருளாதாரமும் ஜனநாயகமும் எப்போதும் ஒன்றாக இருப்பதில்லை. ஜனநாயக உரிமைகள் முற்றிலும் பறிக்கப்பட்ட கடும் அடக்குமுறை நிலவுகிற பல நாடுகள் சந்தைப் பொருளாதாரத்தைத்தான் கடைப்பிடிக்கின்றன. மியன்மார், இலங்கை, காஷ்மீர் மற்றும் தண்டகாரண்யம் ( மாவோவாதிகள் தலைமையில் பழங்குடி மக்கள் போராடிக் கொண்டிருக்கும் வனப்பகுதிகள்) ஆகிய பகுதிகளில் கொடூரமான இராணுவ ஆட்சியைச் செயற்படுத்தும் இந்திய அரசு ஆகியவை சந்தைப் பொருளாதாரத்தைக் கடைப்பிடிப்பவைதானே.

கடுமையான பொருளாதார நெருக்கடியை இன்று முதலாளித்துவம் சந்தித்துக் கொண்டிருக்கிறது. 1930 களில் ஏற்பட்ட நெருக்கடிகளை விவசாய விரிவாக்கத்தின் மூலமும் எண்ணெய் வளக் கண்டுபிடிப்புகள் மூலமும் அன்றைய உலக முதலாளியம் சமாளித்தது. இன்றோ விரிவாக்குவதற்கு இனி விவசாய நிலங்கள் இல்லை. எண்ணெய் வளமோ வேகமாக அழிந்து கொண்டிருக்கிறது. எனவே இன்றைய நெருக்கடியை முதலாளியம் முன்னைப் போல சமாளிக்க இயலாமல் திணறுகிறது. முதலாளியம் என்றால் அமெரிக்காவும் பிரிட்டனும் மட்டுமல்ல, கடும் பட்டினிச்சாவுகள் நிகழ்ந்து கொண்டிருக்கும் ஆபிரிக்க நாடுகளும் கூட (எதியோப்பியா, கானா போன்றவை) முதலாளித்துவப்பாதையில் செல்பவைதான். கடுமையான இனக் கலவரங்கள், மதப்படுகொலைகள், உள்நாட்டு இடப்பெயர்வுகள், இன, மத, மொழி ஆதிக்கங்கள் நிலவுகிற இந்தியா, இலங்கை போன்ற நாடுகளும் கூட முதலாளிய நாடுகள் தான். ஒப்பீட்டளவில் புரட்சிக்குப் பிந்திய சமூகங்கள் பலவற்றில் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன. கல்வி, மருத்துவம் முதலியவை எல்லோருக்கும் சமமாகக் கிடைத்தன. பட்டினிச் சாவுகள் அங்கு இடம்பெற்றதில்லையே.

**சோசலிச முயற்சிகளின் தோல்விக்கு ஏகாதிபத்திய சதிகளுக்கு ஒரு பங்கு இருக்கின்ற போதிலும், மக்களின் எதிர்ப்புகளின் ஊடாகவே அவை தூக்கியெறியப் பட்டன என்பதை நாம் காணத்தவறக்கூடாது**

***இடதுசாரிக் கட்சிகளின் ஆட்சி நடைபெறும் சமகால நாடுகள் எந்த அளவிற்கு முன்னைய அனுபவங்களில் இருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டுள்ளன?***

இந்தியாவை எடுத்துக் கொண்டால் 34 வருடங்களாக மேற்கு வங்க மாநிலத்தை ஆட்சி செய்துகொண்டிருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான இடதுசாரிக் கூட்டணி அரசு இன்று படுதோல்வியடைந்துள்ளது. கேரளத்திலும் அதே நிலைதான். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைத் தொடர்ந்து ஆதரித்து வந்த புகழ்பெற்ற மார்க்சியப் பொருளாதார அறிஞர் பிரபாத் பட்நாயக், கட்சியையும் ஆட்சியையும் காப்பாற்றிக் கொள்ள பல்வேறு வகையில் முதலாளியத்துடன் சமரசம் செய்ய நேர்ந்ததே இந்தத் தோல்விக்குக் காரணம் என்கிறார். இது ஒரு வகையான ''அனுபவவாதம்'' என்கிறார் அவர். இருக்கும் நிலையைத் தக்கவைத்துக் கொள்வதற்காக முதலாளிய வளர்ச்சி முறையை ஏற்று விவசாயிகளிடமிருந்து கட்டாயமாக நிலங்களைப் பறிக்கும் அளவிற்கு இடதுசாரி முன்னணி ஆட்சி சென்றது. தொடர்ந்து முதலாளிய ஜனநாயகத்தின் கீழ் ஆட்சியை மேற்கொண்டதன் விளைவாக பிறமுதலாளியக் கட்சிகளில் இருந்த சகலவிதமான சீரழிவுகளுக்கும் அது காரணமாகியது. கட்சி அணிகள் காடையர்களாக மாறுவதற்கும் கூட அது வழிவகுத்தது.

மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியைத் தொடர்ந்து ஆதரித்து வந்த இன்னொரு அறிஞரான ஹிரேன் கோஹெய்ன் இதை ஏன் அனுபவ வாதம் என்று பூசிமெழுகுகிறீர்கள். திரிபுவாதம் என்று நேரடியாகச் சொல்வதுதானே என்கிறார்.

ஒரு இடதுசாரிக் கட்சியின் மூன்று முக்கிய நிபந்தனைகளான முதலாளியத்தை கடந்து செல்லுதல், ஏகாதிபத்திய விரிவாக்கத்தைத் தடுத்து நிறுத்துதல், எல்லாவற்றுக்கும் மேலாக அடிப்படை வர்க்கத்தின் நலன்களை முன்னிறுத்துதல் ஆகியன பின் தள்ளப்பட்டு ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதென்பது முதன்மைப் படுத்தப்பட்டதன் விளைவே இன்றைய சரிவிற்குக் காரணம்.

சோவியத் யூனியனுக்கு அடுத்தபடியாக உலக இடதுசாரி இயக்கங்களின் இலட்சிய நாடாகத் திகழ்ந்த மக்கள் சீனமும் இன்று ஒரு கட்சி ஆட்சியின் கீழ் கடும் உரிமைகள் மறுக்கப்பட்டு, விரிவாக்க நோக்கங் கொண்ட முதலாளியப் பாதைக்குத் திரும்பியுள்ளது. உலக முதலாளிய வலைப்பின்னலில் தன்னை விரும்பி இணைத்துக்கொண்டுள்ளது. இன

ஒடுக்குமுறை, விபசாரம், வேலையில்லாத் திண்டாட்டம், ஆகியவையும் பரவலாக அங்கு உள்ளன. அரசால் வழிநடத்தப்படும் முதலாளிய அமைப்பு என்கிற அளவிலேயே அதை இன்று மதிப்பிட முடியும். "சமாதான சகவாழ்வு" என்ற கருத்தாக்கத்தை முன்வைத்த குருஷ்சேவ் இன்றில்லை. ஆனால் சீனா இன்று உலக முதலாளியத்துடன் சமாதான சகவாழ்வைப் பேணி குருஷ்சேவிசத்தைப் பின்பற்றுவதற்கு வெட்கப்படவில்லை. அது முன்வைக்கும் மார்க்கெட் சோஷலிசத்தில் "மார்க்கெட்" (சந்தை) தான் அதிகமாக உள்ளதே ஒழிய சோசலிசம் குறைவாகவே உள்ளது. ஆக, சீனத்தைப் பொறுத்த மட்டில் சோசலிச நாடுகளின் வீழ்ச்சியிலிருந்து ஒரு எதிர்மறைப் பாடத்தை மட்டுமே கற்றுக்கொண்டுள்ளது எனலாம்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிகள் உள்ளிட்ட உலக கம்யூனிஸ்ட் இயக்கங்கள் பலவும் இன்று உலகளவில் ஏற்பட்டிருக்கக்கூடிய அமைப்பு எதிர்ப்பு (Anti systemic movement) இயக்கங்கள் சிலவற்றின் பாதிப்புகளை உள்வாங்கியுள்ளமையைக் காணலாம். சுரண்டல் என்பது பொருளாதார அடிப்படையில் மட்டுமே அமைவதில்லை. பொருளாதாரத்திற்கு அப்பாற்பட்ட இன, மொழி, மத, சாதி, பால் ஆகிய ஆதிக்கங்களின் ஊடாகவும் சுரண்டல்களும் ஒடுக்குமுறைகளும் நடைபெறுகின்றன. எனவே அவற்றையும் இடதுசாரி இயக்கங்கள் கையில் எடுக்க வேண்டும் என்கிற உணர்வு இன்று இந்தியா உட்பட உலகின் பல நாடுகளிலும் உள்ள இடதுசாரி இயக்கங்களுக்கு உருவாகியுள்ள நிலை வரவேற்கத்தக்கது. இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்த வகையில் சாதி, தீண்டாமை ஒழிப்பதற்காக இயக்கமொன்றை தொடங்கி குறிப்பிடத்தக்க செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது.

இந்த இடத்தில் இலங்கையில் என்.சண்முகதாசன் தலைமையில் செயற்பட்ட பொதுவுடைமை இயக்கம் 1960 களிலேயே இதை முன்ஊகித்துச் செயற்பட்டது உண்மையிலேயே இங்கு நினைவுகூரத்தக்க ஒன்றாகும். இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சாதிப் பிரச்சினைக்குரிய முன்னுரிமையைக் கொடுத்த போதிலும், இனப்பிரச்சினைக்குரிய முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அந்த வகையில் ஈழவிடுதலைப் போராட்டத்தில் ஈழமக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காத தவறைச் செய்து இன்று தமிழ் மக்களிமிருந்து அந்நியப்பட்டுள்ளது. இன்னொரு முக்கிய இடதுசாரிக் கட்சியான இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இன்னொரு எல்லைக்குச் சென்று விமர்சனம் இல்லாமல் அதிதீவிரமாக இனப்பிரச்சினையை அணுகுவது என்கிற நிலைப்பாட்டை எடுக்கிறது. இதன் விளைவாக பல நேரங்களில் பிற இனவாதக் கட்சிகளுக்கும் அதற்கும் வேறுபாடு இல்லை என்கிற அளவிற்கு அது செல்கிறது.

சுற்றுச்சூழல், இனவிடுதலை சாதி, மத ஆதிக்க எதிர்ப்பு உள்ளிட்ட பிரச்சினைகளை எடுக்கும் அமைப்பு எதிர்ப்பு இயக்கங்கள் அடையாள அரசியல் (Identity politics) முதலியன தன்னளவில் நியாயமானதாகவும் இதுகாறும் எல்லோராலும் புறக்கணிக்கப்பட்ட அம்சங்களின் மீது கவனம் குவிப்பதாகவும் இருந்த போதிலும் அவை குறுகிய வட்டத்திற்குள் இயக்கக் கூடியதாகவும் தொலை நோக்கான அரசியல் பார்வையில்லாதவையாகவும் உள்ளதை கவனிக்கத் தவறல் ஆகாது.

முதலாளியத்தைக் கடந்து செல்லுதல், ஏகாதிபத்தியத்தை வீழ்த்துதல், அடிப்படைவர்க்க நலன்களுக்கு முன்னுரிமை அளித்தல் முதலான தொலைநோக்கான பார்வை அவற்றுக்குக் கிடையாது. அடையாள இயக்கங்கள் பிற அடையாளங்களின் மீது கடும் வன்முறையையும் வெறுப்பையும் வெளிப்படுத்தும் வாய்ப்புள்ளவை என்பதையும் மறந்துவிடக் கூடாது. எனவே, இடதுசாரி இயக்கங்கள் அவற்றை எச்சரிக்கையாகக் கையாள வேண்டும். இனப்பிரச்சினை, சாதிப்பிரச்சினை ஆகியவற்றின் முக்கியத்துவத்தை முன்னிட்டு அவற்றில் உண்மையான ஈடுபாட்டுடன் ஒரு இடதுசாரி இயக்கம் அதைக் கையில் எடுக்கும் போதுதான் முதலாளித்துவத்தைக் கடந்துசெல்லுதல், ஏகாதிபத்தியத்தை வீழ்த்துதல், அடிப்படைவர்க்க நலன்களை முன்னிறுத்துதல் ஆகிய அம்சங்களோடு இவற்றை மேலெடுத்துச் செல்ல முடியும். அதற்கு முதலில் பொருளாதாரத்துக்கு அப்பாற்பட்ட இத்தகைய ஒடுக்குமுறைகளையும் உள்ளடக்கிய ஒரு கோட்பாட்டு உருவாக்கம் ஒன்று மார்க்சியத்தின் இன்றைய தேவையாகிறது. இன்றைய கம்யூனிஸ்ட் கட்சிகள் நடைமுறையில் இத்தகைய இயக்கங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்த போதிலும் அவற்றைக் கோட்பாட்டு உருவாக்கம் செய்யத் தயங்குகின்றன அல்லது வெட்கப்படுகின்றன.

**20ஆம் நூற்றாண்டுச் சோசலிச முயற்சிகள் தோல்வியுற்றதை வைத்துக்கொண்டு மார்க்சியம் தோற்றுவிட்டது என்று சொல்லிவிட முடியாது. சோசலிச கட்டுமானத்தில் ஏற்பட்டுள்ள தோல்விகளுக்கு மார்க்சியம் பொறுப்பாக முடியாது**

**மார்க்சியத்திற்குள் சுற்றுச்சூழல், சாதி, பெண்ணியம் ஆகியவற்றையெல்லாம் உள்ளடக்கி கோட்பாட்டு உருவாக்கம் செய்யக் கூடிய வாய்ப்புகள் உள்ளதா?**

நான் தொடக்கத்தில் குறிப்பிட்ட

படி ஆதிமூலதனத் திரட்டலும் தொடர்ந்த முதலாளிய விரிவாக்கமும் தொடங்கியிருந்த காலத்தில் வாழ்ந்தவர்கள் மார்க்ஸும் ஏங்கல்ஸும். முதலாளிய விதிகளைக் கண்டறிவதற்கே அவர்கள் முன்னுரிமை அளித்த போதிலும் மிகக் கூர்மையாக இப்பிரச்சினைகளையெல்லாம் தொட்டுச் சென்றுள்ளனர். எடுத்துக் காட்டாக சுற்றுச்சூழல் பிரச்சினை குறித்து 'முதலாளித்துவ விவசாயத்தில் காணப்படும் எல்லா முன்னேற்றங்களும் விவசாயத் தொழிலாளர்களைச் சுரண்டிக் கொழுக்கும் கலையில் காணப்படும் முன்னேற்றம் மட்டுமல்ல, அந்த மண்ணின் வளத்தைக் கொள்ளையடிக்கும் கலையில் காணும் முன்னேற்றமும் கூட. ஒரு போகச் சாகுபடியில் விளைவை அதிகரிப்பதில் காணப்படும் முன்னேற்றமெல்லாம் அந்த மண்ணின் வளத்தை என்றென்றைக்குமாய் அடியோடு அழிப்பதில் காணும் முன்னேற்றமும் தானே. நவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையில் ஒரு நாடு தனது வளர்ச்சியை எந்த அளவிற்கு அதிகரிக்கிறதோ அந்த அளவிற்கு அது அழிவை நோக்கிச் செல்லும். முதலாளிய உற்பத்திமுறை தனது தொழில்நுட்பத்தை மண் மற்றும் உழைப்பு என்கிற எல்லா ஆதார வளங்களையும் உறிஞ்சிக் குடிக்கும் வகையில்தான் வளர்த்தெடுக்கிறது' என்று 'மூலதனம்' 15ஆவது அத்தியாய இறுதியில் மார்க்ஸ் கூறுவார். இத்தனை சுருக்கமாகவும் நுட்பமாகவும் கவித்துவத்துடனும் முதலாளியத்துக்கும் சுற்றுச்சூழல் அழிப்பிற்கும் உள்ள உறவை யார் கூறமுடியும்?

பிறிதோரிடத்தில் ஏங்கல்ஸ் காடுகள் அழிப்பைக் பற்றி கவலையோடு சொல்லி வருகையில் 'இயற்கை உறுதியாக நம்மைப் பழிவாங்கும்' என்பார். 200 ஆண்டுகளுக்குப் பின் அந்தப் பழிவாங்கலை இன்று நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். எனினும் மார்க்ஸும் ஏங்கல்ஸும் அவர்கள் காலத்தில் இவற்றைக் கோட்பாட்டு உருவாக்கம் செய்ய இயலவில்லை. தவிரவும், பெதோயின் போன்ற சிறுதேசிய இனங்களின் உரிமைப் போராட்டங்களை அவர்கள் சில நேரங்களில் புறந்தள்ளியதும் உண்டு. மார்க்ஸிடமிருந்த ஹெகலியத்தாக்கம் இதற்கொரு காரணமாக இருந்திருக்கலாம். ஆனால், பின்னாளில் ரஷ்ய அனுபவங்களின் அடிப்படையில் லெனின் தேசிய இனங்களின் உரிமையை ஏற்று கோட்பாட்டு உருவாக்கம் செய்தது குறிப்பிடத்தக்கது.

'மார்க்ஸுக்குப் பிந்திய வளர்ச்சிகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு கோட்பாட்டு உருவாக்கம் செய்ய 70 மார்க்ஸ்கள் வேண்டும்' என்கிற ரீதியில் லெனின் ஒருமுறை சொன்னார், லெனினுக்கும் பிந்திய இந்த ஒரு நூற்றாண்டுகால அனுபவங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு கோட்பாட்டு உருவாக்கங்களைச் செய்ய இன்று நமக்கு இன்னும் 700 மார்க்ஸ்கள் தேவை என்பதை நாம் உணர வேண்டும், இத்தகைய கோட்பாட்டு உருவாக்கம் இல்லாமல் வெறும் அனுபவவாதமாக தேசிய இனப்பிரச்சினையை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கையில் எடுப்பதன் விளைவாகத்தான் ஈழப்பிரச்சினையில் தீவிர ஆதரவு நிலைப்பாடு எடுப்பதும் உள்நாட்டு தேசிய இனப்பிரச்சினைகளில் மௌனம் காப்பதும் நிகழ்கிறது. அதேபோல அணு உலை எதிர்ப்புப் போராட்டங்கள் போன்றவற்றில் இந்தியாவில் இயங்கும் இரு கம்யூனிஸ்ட் கட்சிகளும் போராடும் மக்களுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்து இன்று அம்மக்களிடம் இருந்து அந்நியப்பட்டு நிற்கின்றன. இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஜெய்தாபூரில் ஒரு நிலைப்பாடும் கூடங்குளத்தில் ஒரு நிலைப்பாடும் எடுத்து நகைப்பிற்குள்ளாகியுள்ளது.

**கியூபா, வெனிசூலா, பொலிவியா, ஈகுவடோர் முதலான லத்தீன் அமெரிக்க நாடுகளில் இன்று இடதுசாரி இயக்கங்கள் பல ஆட்சியைக் கைப்பற்றியிருக்கின்றனவே. அது குறித்து உங்கள் கருத்து......?**

தென்னமெரிக்கா, மத்திய அமெரிக்கா மற்றும் கரிபியன் பகுதிகளில் மிகப்பெரிய என்பதிலிருந்து மிகச் சிறிய என்பதுவரை, சுமார் 33 நாடுகள் உள்ளன. வரலாற்று ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் இனரீதியாகவும் வேறுபட்ட இந்நாடுகளில் பல்வேறு மட்டங்களில் இடதுசாரி அரசியல் செயற்படுகிறது. இதில் கியூபா மட்டுமே பழைய பாணியிலான கம்யூனிஸ்டுகள் தலைமையிலான ஒரு கட்சி ஆட்சிமுறையைப் பின்பற்றுகிறது. மற்றப்படி வெனிசூலாவின் ஹியூகோ சாவேஸ், ஈகுவடோரின் ரபேல் கொரியா, பொலிவியாவின் ஈவோ மொறேல்ஸ், நிக்கர குவாவின் டானியல் ஓர்டேகா ஆகியோர் பலகட்சி ஆட்சிமுறையை ஏற்றுக்கொண்டு தேர்தல் மூலம் அதிகாரத்தைப் பெற்று தமது சூழலுக்குத் தகுந்தவகையில் தத்தம் நாடுகளில் மிகவும் கவனமாக சோசலிசத்தை முயற்சிக்கின்றனர். எந்தவகையிலும் தமது சனரஞ்சக ஆதரவை இழக்காமல் அவர்கள் இதைச் செய்ய வேண்டியுள்ளது. இவர்கள் "புதிய இடதுசாரிகள்" என்றுஅழைக்கப்படுகின்றனர். இவர்களின் சோசலிச நடைமுறையை "21 ஆம் நூற்றாண்டுக்கான சோசலிசம்' என்று சொல்லிக் கொள்கிறார்கள்.

ரொம்பவும் கவனமாக அந்நிய மூலதனங்களை நாட்டுடைமை ஆக்

> சோவியத்யூனியனுக்கு அடுத்தபடியாக உலக இடதுசாரி இயக்கங்களின் இலட்சிய நாடாகத் திகழ்ந்த மக்கள் சீனமும் இன்று ஒரு கட்சி ஆட்சியின் கீழ் கடும் உரிமைகள் மறுக்கப்பட்டு விரிவாக்கம் நோக்கம் கொண்ட முதலாளித்துவ பாதைக்கு திரும்பி விட்டது

**உலகமய சூழலில் பழைய வர்க்கப்பகுப்பாய்வுகள் இன்று எவ்வளவும் பொருந்தாது. பன்னாட்டு முதலாளியம், தேசிய முதலாளியம், தரகு முதலாளியம் ஆகியவற்றுக்கு இடையேயுள்ள எல்லைக்கோடுகள் இன்று தகர்ந்துள்ளன**

குவதிலும், எண்ணெய் உள்ளிட்ட இயற்கை வளங்களை அந்நிய மற்றும் கார்ப்பரேட் மூலதனப் பிடிகளில் இருந்து அரசு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதிலும் குறிப்பிடத்தக்க அளவு வெற்றி பெற்றுள்ளனர்.

அமெரிக்கா உள்ளிட்ட அந்நிய நாடுகளின் பிடியிலிருந்து தம்மை விலக்கிக்கொண்டு லத்தீன் அமெரிக்க அளவிலான பிராந்திய ஒற்றுமையை வலுப்படுத்தியிருப்பது அவர்களின் இன்னொரு சாதனை. அவர்கள் உருவாக்கியுள்ள 'நமது அமெரிக்க மக்களுக்கான பொலிவியக் கூட்டமைப்பு' (ALBA) இவ்வகையில் முக்கியமான ஒன்று. டாலர் மற்றும் யூரோவுக்கு எதிரான ஒரு பொதுவான கரன்ஸியொன்றையும் அவர்கள் முயற்சிக்கின்றனர்.

இலக்கு நோக்கிய சமூக நலத்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றி கல்வி, சுகாதாரம் முதலிய துறைகளில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளனர். வெனிசூலாவின் எண்ணெய் வளத்திற்கு ஈடாக இத்துறைகளில் கியூபாவின் அனுபவத்தையும் வல்லுநர்களையும் மாற்றீடு செய்து வெனிசூலாவில் குறிப்பிடத்தக்க வெற்றியை சாவேஸ் ஈட்டியுள்ளார்.

லத்தீன் அமெரிக்காவுக்கேயுரித்தான வகையில் இவர்கள் ஒரு இடதுசாரிக் கருத்தியலை முன்வைக்கின்றனர். ஜேர்மனிய மார்க்சியரான ஹெய்ன்ஸ் டயற்றிச் ஸ்றபான் என்பவரின் சிந்தனையை அடியொற்றி இவர்கள் தமது 21ஆம் நூற்றாண்டுச் சோசலிசத்தைக் கட்டமைக்கின்றனர். முதலாளிய தனிநபர்வாதம், இலாபவேட்டை, ஊழல் ஆகியவற்றுக்கு மாற்றாக இவர்கள் ஒரு வகையான கிறிஸ்தவ அறம், ஒழுக்கம் ஆகியவற்றைப் பேசுகின்றனர்.

"பிரதிநிதித்துவ ஜனநாயகம்" என்பதற்குப் பதிலாக "பங்கேற்பு ஜனநாயகத்தையும்" வெறும் சமத்துவம் என்பதற்குப் பதிலாக சமவுரிமைகளுடன் கூடிய சமத்துவம் என்பதையும் இவர்கள் முன்வைக்கின்றனர். அந்த வகையில் இவர்கள் தனிச்சொத்துரிமையையும் ஏற்றுக்கொள்கின்றனர். பொருளாதாரத்துறையில் கூட்டுறவு முயற்சிகள், இணைவுச் செயற்பாடுகள் ஆகியவற்றைப் பேசுகின்றனர்.

அடுத்தடுத்து தேர்தல்களில் வெற்றி பெறுவதென்பது இவர்களுக்குள்ள மக்கள் ஆதரவைக் காட்டுகிறது. அந்நிய மூலதனங்களை நாட்டுடைமை ஆக்குவதுபோன்ற இவர்களின் அதிரடி நடவடிக்கைகளுக்கான எதிர் வினைகளில் இருந்து இவர்களை வெனிசூலாவின் எண்ணெய் வளம் காப்பாறுகிறது.

எனினும் பிரச்சினைகள் இல்லாமல் இல்லை. பணவீக்கம், விலைவாசி ஏற்றம், நாணய ஸ்திரமின்மை ஆகிய பிரச்சினைகளை அவர்கள் எதிர்கொள்கின்றனர். கியூபாவில் உள்ள கடும் அடக்குமுறை, கருத்துச் சுதந்திர மறுப்பு, சாவேஸைச் சுற்றி உருவாகியுள்ள அதிகாரக் கும்பல் ஆகியவை குறித்து கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. தனக்குள்ள மக்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி சாவேஸ் மறுதேர்தலில் நிற்கும் உரிமையைப் பெற்றுள்ளார். சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப்பிறகு கியூபாவின் பொருளாதார நிலை மேலும் சீரழிந்துள்ளது.

எனினும் கொல்லைப் புறத்தில் உள்ள அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்துநின்று ஒருவகை இடதுசாரி அரசியலுடன் மக்கள் நலத் திட்டங்களை மேற்கொண்டு வருகிற வகையில் உலகத்தவரின் கவனத்தை லத்தீன் அமெரிக்க இடதுசாரிகள் ஈர்த்துள்ளனர்.

நான் சற்றுமுன் சொன்னதுபோல லத்தீன் அமெரிக்காவில் ஆயுதப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த இயக்கங்கள் பலவும் பின்னடைவுக்குள்ளாகியுள்ளன. புரட்சியை அடுத்த நாட்டுக்கு ஏற்றுமதி செய்வது என்கிற காஸ்ட்ரோவின் கொள்கையும் தற்போது மாறியுள்ளது. 1980களின் இறுதிப்பகுதியில் சிலியில் ஆயுதப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த எஃப்.பி.எம்.ஆர் என்கிற புரட்சிகர இயக்கத்திடம் "ஆயுதப் போராட்ட சகாப்தம் முடிந்துவிட்டது" என்று காஸ்ட்ரோ அறிவித்தது குறிப்பிடத்தக்கது. அது முதல் காஸ்ட்ரோ சகோதரர்கள் இருவரும் லத்தீன் அமெரிக்க ஆயுதப்போராட்டக் குழுக்களுக்கும் அரசுகளுக்கும் இடையே சமாதான முயற்சிகளிலேயே தங்களை ஈடுபடுத்தி வருகின்றனர்.

**அப்படியானால், ஆயுதப்போராட்டங்களின் மூலம் மார்க்சியப் புரட்சி இனிமேல் சாத்தியமில்லையா?**

ஆயுதப் போராட்டங்கள் என்றில்லை. பழைய புரட்சிகர நடைமுறைத் தந்திரோபாயங்கள் அனைத்துமே இன்றைய கால, இடசூழலுக்கு தகுந்தாற்போல மாற்றப்படவேண்டியவையாகவுள்ளன. நன்றாக யோசித்துப் பார்த்தால் பழைய புரட்சிகளும் கூட கால இட, வேறுபாடுகளுக்குத் தகுந்தாற்போல் வேறுபட்டுத்தான் நடந்துள்ளன. ஒரு பின்தங்கிய முதலாளித்துவ வளர்ச்சியுள்ள நாட்டில் தான் ரஷ்யப்புரட்சி நடந்தது. விவசாய நாடாகிய சீனத்தில் மாவோ மக்கள் ஜனநாயகப் புரட்சி என்கிற கருத்தையும், நீண்டகால மக்கள் யுத்தம், கிராமங்களைக் கைப்பற்றி நகரங்களைச் சுற்றிவளைத்தல் முதலான போராட்ட வடிவங்களையும் முன்வைத்தார். அதேபோல ஒரு அரை நிலப்பிரபுத்துவ சமூகமாகிய வியட்நாமில் ஹோ சிமின் முற்றிலும் அவர்களது தேசியச் சூழலுக்குரிய ஒருவகைப் புரட்சிகர வடிவத்தைத் தேர்ந்தெடுத்தார். ஜெனரல் கியாப்

பின் போர்க் குறிப்புகளை வாசித்தால் அதில் மாவோவைக் காட்டிலும் லெனினது மேற்கோள்களே மிகுந்திருக்கும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சோவியத் ரஷ்யாவின் உதவியோடே புரட்சிகள் நிறைவேறின.

இன்று காலமும் சூழலும் பெரியளவில் வேறுபட்டுள்ளன. அப்படியே பழைய கோட்பாடுகளையும் அனுபவங்களையும் நம்மீது திணித்துக் கொள்வதைவிட முட்டாள்தனம் ஏதும் இருக்கமுடியாது. இந்திய மாவோயிஸ்டுகள் 'சீனாவின் தலைவர் நம் தலைவர்' என்று ஒரு காலத்தில் கூறினார்கள். இன்று மாவோவின் யெனானை தண்டகாரண்ய வனப்பகுதிகளில் பதியமிட முயற்சித்து பின்னடைவிற்குள்ளாகியுள்ளனர். முன்னணித் தலைவர்கள் பலரும் ஒன்று கொல்லப்பட்டுள்ளனர் அல்லது சிறையில் உள்ளனர். பழங்குடி மக்களின் பிரதிநிதிகளாக நின்று ஏகாதிபத்தியத்துக்கும் இந்திய அரசுக்கும் எதிராக ஒரு வீரஞ்செறிந்த போராட்டத்தை அவர்கள் நடத்திக் கொண்டிருந்தாலும் அவர்கள் இன்றளவும் பழங்குடி இந்தியாவைத் தாண்டி அடுத்த அடி எடுத்துவைக்க இயலவில்லை. ஒரு தொழிற்சங்கம் கூட அவர்கள் கையில் இல்லை. நகரங்களைச் சுற்றி வளைப்பது என்பதெல்லாம் அவர்களுக்கு இன்று சாத்தியமில்லை. கொடிய இந்திய இராணுவம்தான் அவர்களை இன்று சுற்றிவளைத்துக் கொண்டுள்ளது. நீண்டகால மக்கள் யுத்தம் என்பதில் 'நீண்டகாலம்' என்பதற்கு ஒரு எல்லையுண்டுதானே.

தவிரவும் உலகமயச் சூழலில் பழைய வர்க்கப் பகுப்பாய்வுகள் இன்று எள்ளவும் பொருந்தாது. பன்னாட்டு முதலாளியம், தேசிய முதலாளியம், தரகுமுதலாளியம் முதலியவற்றுக்கு இடையேயுள்ள எல்லைக்கோடுகள் இன்று தகர்ந்துள்ளன. இந்தியத் தரகு முதலாளிகள் பிரெஞ்சு கார்ப்பரேட்டுகளை விலைக்கு வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆபிரிக்க நிலங்கள் இந்திய முதலாளிகளின் கைக்குள் வந்து கொண்டிருக்கின்றன.

தொழிலாளர்களின் புலப்பெயர்வு தொழிலாளர் வர்க்க குணாம்சத்தைப் பெரியளவில் பாதித்துவருகிறது. தொழிலாளிகள் மட்டுமல்ல இன்று முதலாளிகளும் புலம்பெயர்கின்றனர். ஃபோர்ட், ஹொண்டா கார்களும் நோக்கியாவும் இன்று சென்னையில் உற்பத்தியாகின்றன. இவ்வாறு புலம்பெயர்ந்துவரும் கார்ப்பரேட்டுகள் முதலில் குறிவைப்பது உள்நாட்டுத் தொழிலாளர் பாதுகாப்புச் சட்டங்களைத்தான். இன்று கார்ப்பரேட் நிறுவனங்கள் பலவற்றிலும் மூன்றில் இருபங்கு தொழிலாளர்கள் தற்காலிக ஒப்பந்தத் தொழிலாளிகளே. இவர்களுக்கு எந்தத் தொழிற்சங்க உரிமைகளும் கிடையாது. நிரந்தரத் தொழிலாளிகளுக்குச் சமமாகவும் கூடுதலாகவும் வேலை செய்யும் இவர்களுக்கு நிரந்தரத் தொழிலாளர்களைவிட பல மடங்கு ஊதியம் குறைவு. உரிமைகளும் கிடையாது. இவர்களோடு ஒப்பிடுகையில் நிரந்தரத் தொழிலாளிகள் இழப்பதற்கு ஏதுமில்லாதவர்கள் இல்லை. அவர்கள் மதிப்பு மிகுந்த தம் வேலையை சொத்தாக வைத்துள்ளார்கள். எனவே இவர்கள் தற்காலிகத் தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் போராடுவதில்லை. தற்காலிகத் தொழிலாளர்களே அதிகமாக உள்ள நிலையில் நிரந்தரத் தொழிலாளிகளினால் வேலை நிறுத்தப் போராட்டங்களையும் நடத்த முடிவதில்லை.


இருக்கிற தொழிற்சங்கங்களும் இடதுசாரி அமைப்புகள் வசம் இல்லை. முதலாளியக் கட்சிகளும் சாதி இன அமைப்புகளுமே தொழிற்சங்கங்களைக் கையில் வைத்துள்ளன.

மார்க்சியம் தோன்றி வளர்ந்து வெற்றிகளையீட்டி வீழ்ச்சிகளையும் அடைந்த 19 ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளைக் காட்டிலும் 21 ஆம் நூற்றாண்டு மிகவும் வேறுபட்டது. இந்தப் புதிய 21 ஆம் நூற்றாண்டுக்குரிய புதிய கோட்பாட்டு உருவாக்கங்கள் தேவை. புதிய சூழலில் உருவாகிவரும் இயக்கங்களை ஆராய்வதும் அதில் உண்மையான ஈடுபாட்டுடன் பங்கெடுப்பதும் வேண்டும். அணிகளை வென்றெடுப்பது அல்லது இயக்கத்தைக் கைப்பற்றுவது என்பது போன்ற வழமையான தந்திரோபாயங்களைக் கைவிட்டு அவற்றில் உண்மையான ஈடுபாட்டுடன் பங்கேற்க வேண்டும். இடதுசாரிகளின் பங்கேற்பு அத்தகைய இயக்கங்களை அவற்றின் குறுகிய வட்டத்தில் இருந்து விடுவித்து இடதுசாரி அரசியலின் அடிப்படை நோக்கங்களாகிய "முதலாளியத்தைக் கடந்து செல்லுதல், ஏகாதிபத்திய எதிர்ப்பு, அடிப்படை வர்க்கங்களின் நலன்களை முன்னிறுத்துதல்" ஆகிய குறிக்கோள்களுடன் ஒருங்கிணைப்பதற்கு இட்டுச் செல்ல வேண்டும். அவற்றுக்குரிய வகையில் புதிய கோட்பாட்டு உருவாக்கங்கள் செய்யப்படவேண்டும்.

மார்க்சிய கோட்பாடுகளில் எந்த மாற்றங்களும் தேவைப்படும் அளவிற்கு காலமும் சூழலும் மாறிவிடவில்லை என்பது போன்ற மமதையையும் காலத்திற்கொவ்வாத வரட்டுக் கோட்பாடுகளையும் கைவிட்டு சிக்கல்களின் பன்முகத் தன்மையை அங்கீகரிக்கக்கூடிய மனப்பக்குவம் வேண்டும். தேர்தல் பாதையா, ஆயுதப்புரட்சியா அல்லது சீனா நல்லதா, கெட்டதா என்பது போன்ற எளிமைப்படுத்தப்பட்ட கேள்விகளில் இருந்து விலகி பிரச்சினைகளின் பன்முகப் பரிமாணங்களையும் மார்க்சியர்கள் கவனத்திற் கொள்ளவேண்டும். ●

மார்க்சிய கோட்பாடுகளில் எந்த மாற்றமும் தேவைப்படும் அளவிற்கு காலமும் சூழலும் மாறிவிடவில்லை என்ற மமதையையும் காலத்திற்கு ஒவ்வாத வரட்டுக் கோட்பாடுகளையும் கைவிட்டு சிக்கல்களின் பன்முகத்தன்மையை அங்கீகரிக்கக்கூடிய மனப்பக்குவம் வேண்டும்

பொருளியல் ஆய்வு



முத்துக்கிருஷ்ணன் சர்வானந்தா

# இலங்கை பொருளாதாரம் மீள் எழுச்சி பெறக்கூடிய வாய்ப்புகள் அரிது

சர்வதேச ரீதியில் இலங்கைக்கு எதிராக காணப்படுகின்ற பாதகமான போக்குகள்

இலங்கையின் தேசிய பொருளாதார வளர்ச்சி உள்நாட்டுப் போரின் முடிவிற்குப் பின்னரான காலகட்டத்தில் குறிப்பாக, 2010-2011இல் அதியுயர்ந்த வீதத்தை அடைந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. உதாரணத்திற்கு 2010ஆம் ஆண்டு பொருளாதார வளர்ச்சி 8 சதவீதமாக இருந்த அதே வேளை, 2011 ஆம் ஆண்டு 8.3 சதவீதமாக வளர்ச்சிகண்டிருந்தது. சுதந்திரத்திற்குப் பின்னரான காலகட்டத்தில் 1970களில் குறிப்பாக 1979ஆம் ஆண்டு பொருளாதார வளர்ச்சி 8.2சதவீதமாகக் காணப்பட்டது.

ஆகவே சுருங்கக்கூறினால் சுதந்திரத்திற்கு பின்னர் கூறவேண்டுமானால் 2011 ஆம் ஆண்டு அதி உச்சப் பொருளாதார வளர்ச்சி வீதத்தை இலங்கையினால் காணக்கூடியதாக இருந்தது. இந்த உயர்ந்த வளர்ச்சி வீதம் நீடித்திருக்கக்கூடியதான சூழ்நிலைகள் இருக்குமா என்பதே பிரதான கேள்வியாக இருக்கிறது. ஏற்கனவே 2012 ஆம் ஆண்டு வளர்ச்சி வீதத்தை நோக்குவோமாயின் அது 6 சதவீதம் அல்லது அதற்கு குறைவானதாகவே காணப்படுகிறது. இருந்தபோதிலும் உத்தியோகபூர்வமாக சித்திரை மாதம் தான் புள்ளிவிபரம் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2013 ஆம் ஆண்டு வளர்ச்சி வீதம் கூட அதிகமாக உயரக்கூடியதான சாத்தியங்கள் இல்லை என்றுதான் தென்படுகிறது.

ஆகவே, 2010 -2011 அதி உச்சவீதமானது ஒரு தற்காலிக வளர்ச்சி வீதமாகத்தான் காணப்பட்டது. ஏனெனில், பிரதானமாக போருக்குப் பின்னரான அபிவிருத்தி வேலைகள் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட உட்கட்டமைப்புப் பணிகள் மூலமே குறிப்பாக மேற்கொள்ளப்பட்டது. அதாவது பொருளாதாரச் சந்தை நிலைப்பாட்டின்படி இல்லாமல் ஒரு தனியார்த்துறை முதலீட்டு முயற்சிகள் மூலம் அல்லாமல் அரசினால் கடன்பட்டு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி முயற்சியேயாகும்.

இவ்வாறான அரசின் வேலைத்திட்டங்கள் அரசியல் நோக்கத்திற்காக மேற்கொள்ளப்பட்டு வருவதால் அவை நிலைத்து நிற்கக்கூடிய சாத்தியக்கூறுகள் அரிதாகவே உள்ளன. மேலும் போரை எதிர்நோக்கிய நாடுகளை உதாரணமாக எடுத்துக்கொண்டால் போர் முடிவடைந்த பிறகு ஆபிரிக்க நாடுகளுடன் இலங்கையை ஒப்பிடும் போது 2010-2011 பொருளாதார வளர்ச்சியை பெரிய சாதனை என்று கொள்ளமுடியாது.

போரினால் பாதிக்கப்பட்ட பிராந்தியங்களின் பொருளாதார அதிஉச்ச வளர்ச்சி வீதமானது கூட ஒரு தற்காலிக வளர்ச்சி வீதமாகவே காணப்படுகிறது. உதாரணத்திற்கு கிழக்கு மாகாணத்தில் போர் 2007ஆம் ஆண்டு முடிவிற்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் 2008/09 களில் கிழக்கு மாகாண பொருளாதார வளர்ச்சி அதி உச்ச நிலையைக் கண்டிருந்தது. ஆனால் 2010/11 ஆம் ஆண்டுகளில் கிழக்கு மாகாணப் பொருளாதார வளர்ச்சி வீதம் சற்றுக் குறைவடைந்தே காணப்பட்டது. இவ்வாறே தான் வடமாகாணத்தின் பொருளாதார வளர்ச்சி வீதமும் 2010/11 ஆம் ஆண்டுகளில் அதி உச்ச வளர்ச்சியைக் கண்டிருந்தது.

இருந்தபோதிலும் 2012/13 சற்று தளர்ச்சி

யுறும் சாத்தியங்களே காணப்படுகிறது. இவற்றை நோக்கும் போது ஒட்டு மொத்தத்தில் தேசிய ரீதியிலும் போரினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட பிராந்திய ரீதியிலும் நிலைத்து நிற்கக்கூடிய வளர்ச்சி வீதத்தை எட்டக்கூடியதாக இருக்கவில்லை. இந்தப் பெறுபேறுகள் மூலம் அரசின் தாரக மந்திரமான 'பொருளாதார வளர்ச்சி மூலம் நல்லிணக்கம் அல்லது சமாதானம்' என்ற கோஷம் ஒரு வெற்று வார்த்தையாகவே காணப்படும் எனலாம்.

வடமாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற உட்கட்டமைப்பு மீள்நிர்மாணப்பணிகள் மனித மூலவளம் சார்ந்ததாகவன்றி இயந்திர மூலவளம் சார்ந்ததாகவே இருந்துவருகின்றது. அதாவது மனித வளத்தை அன்றி பிரதானமாக பாரிய இயந்திரங்களைக் கொண்டே பெரும்பாலான உட்கட்டமைப்பு, மீள் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறான அபிவிருத்தி அணுகுமுறை நிதியியல் ரீதியாக சிக்கனமாக இருந்தபோதிலும் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் போதியளவு வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்படவில்லை. இதனால் இளைஞர்கள் மத்தியில் சற்று விரக்தி நிலை ஏற்பட்டிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. இதனை அப்பிராந்தியங்களில் காணப்படும் குற்றச் செயல்களும் சட்டபூர்வமற்ற முறையில் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு இளைஞர்கள், யுவதிகள் மேற்கொள்கின்ற முயற்சிகளும் பிரகாசமாக வெளிக்காட்டுகின்றன. வீதிகள், பாலங்கள், நெடுஞ்சாலைகள் விஸ்தரிக்கப்படுவதும் நவீனப்படுத்தப்படுவதும் சாதகமான செயற்பாடுகளாக இருந்த போதிலும் இவ்வாறான பகுதிகளின் மேம்பாடுகள் வடக்கிற்கும் தெற்கிற்கும் உள்ள பௌதீக இடைவெளியை குறைக்குமே ஒழிய வடபகுதி மக்களுக்கும் தென்பகுதி மக்களுக்கும் இடையே உளசார் இடைவெளியை குறைக்கப்போவதில்லை. ஏனெனில் மக்களுக்குள்ள இடைவெளியை குறைப்பதற்கு ஏதுவாக பொருளியல், சமூக, அரசியல் ரீதியாக அதிகளவு செயன்முறைகள் அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அதாவது மக்களுக்கு இடையிலான வெளியைக் குறைப்பதற்கு நிதியியல், அரசியல் மற்றும் பொருளாதார அதிகாரப்பகிர்வு இன்றியமையாதது. ஏனெனில், இவ்வாறான அதிகாரப்பகிர்வு மூலம் தான் அந்தந்தப் பிராந்திய மக்கள் தமது தேவைகளையும் அபிலாஷைகளையும் பூர்த்திசெய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கிறது. இந்தத் தேவைக்கு எதிர்மறையாக பிராந்தியங்களுக்கு இருந்த நிர்வாக, தீர்மானம் எடுக்கும் அதிகாரங்களைக் கூட மத்தியப்படுத்தும் நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. உதாரணத்திற்கு மாகாண சபைகளுக்கு இருந்த பல்வேறுபட்ட அதிகாரங்களை திவிநெகும சட்டத்தின் மூலம் அரசாங்கம் அபகரித்துக்கொண்டுவிட்டது. இவ்வாறான மத்திய மயமாக்கல் நடவடிக்கைகள் பிராந்திய மக்களுக்கிடையிலான உளரீதியான இடைவெளியை அதிகரிக்கவே செய்யும். அண்மைக்காலத்தில் காணப்படக்கூடியதாக இருந்த நீதித்துறைக்கும் நிறைவேற்று அதிகாரம் மற்றும் பாராளுமன்றத்திற்கும் இடையேயான முரண்பாடுகள் பொருளாதாரத்தை நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

சந்தைப் பொருளாதாரத்திற்கு சட்டத்தின் ஆட்சி இன்றியமையாததாகும். ஏனெனில் தனியார் முதலீட்டாளர்கள் தமது முதலீடுகளுக்கு சட்டத்தின் பாதுகாப்பு கிடைக்கப்பெறும் என்ற நம்பிக்கையிலேயே தமது செயற்பாடுகளை முன்னெடுக்கிறார்கள். அண்மைக்காலமாக சட்டத்தின் ஆட்சிக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பாதிப்புகள் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களை அதைரியப்பட வைத்திருக்கிறது. இலங்கைப் பொருளாதார வளர்ச்சி வீதத்தினை அரசாங்கத்தின் முயற்சியினால் மட்டுமே நிலையானதாக வைத்திருக்க முடியாது. அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு மேலாக தனியார் முதலீடுகளே பொருளாதார வளர்ச்சிக்கு நிலையானதும் நீடித்தது மான பங்களிப்பைச் செய்ய முடியும். இவ்வாறான தனியார் முதலீடுகளுக்கு பாரிய சவாலாக அண்மைக் கால அரசியல் நிகழ்வுப்போக்குகள் அமைந்திருக்கின்றன.

மேலும், சில வாரங்களுக்கு முன்னர் பிரதம நீதியரசர் பதவி நீக்கம் செய்யப்பட்ட விவகாரத்தில் காணப்படக்கூடியதாக இருந்த முறைகேடான நடவடிக்கைகள் அரசாங்கத்தின் மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கையை பெருமளவுக்கு குறைத்திருக்கிறது. இவற்றை நிவர்த்தி செய்வதற்காகவும் மக்களின் செல்வாக்கை மீளப்பெறுவதற்காகவும் அரசாங்கம் கிராமப்புற மக்களுக்கு மானியங்களையும் சலுகைகளையும் நடுத்தர வர்க்கத்தினருக்கு அரச தொழில்வாய்ப்புகளையும் சம்பள உயர்வுகளையும் வழங்கி சமாளிக்க முயற்சிக்கக்கூடும். ஆனால், இவ்வாறான நடவடிக்கைகள் பொருளாதாரத்தில் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும். மேலும் இலங்கையில் ஏற்றுமதி / இறக்குமதி வர்த்தகத்தை எடுத்துக்கொண்டால் உலகளாவிய பொருளாதார தளம்பல் நிலைகாரணமாகவும் இலங்கை ரூபாவின் பெறுமதி செயற்கையாக உயர்த்தப்பட்டுள்ளதாலும் அது அதிகரிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை என்றே கூறலாம். ஆகவே உள்நாட்டு/ வெளிநாட்டு பொருளாதாரச் செயற்பாடுகள் எழுச்சிபெறக்கூடிய வாய்ப்புகள் இவ்வாண்டு அரிதாகவே காணப்படுகின்றன.

மேலும், சர்வதேச ரீதியில் இலங்கைக்கு எதிராகக் காணப்படுகின்ற பாதகமான நிலைப்பாடுகள் இவ்வாண்டும் தொடரப்போவதால் இலங்கைப் பொருளாதாரம் மீள் எழுச்சி பெறக்கூடிய வாய்ப்புகள் அரிதாகவே காணப்படுகின்றன.

குறிப்பாக அடுத்த மாதம் ஜெனீவா ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இடம்பெறப்போகின்ற நிகழ்வுகளும் வருட இறுதியில் இலங்கையில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள பொதுநலவரசு நாடுகளின் உச்சிமகாநாடும் இலங்கைக்கு பாரிய சவாலாக அமையும். இவ்வாறான எதிர் மறையான அரசியல் தாக்கங்கள் பொருளாதாரத்தில் நேரடியாகவும்மறைமுகமாகவும் பாதிப்புகளை ஏற்படுத்தும்.




மியன்மார் பொருளாதார ரீதியில் இலங்கையைவிட பெருமளவு பின் தங்கியுள்ள நிலையில் இருக்கின்ற போதிலும் அங்கு அண்மைக்காலமாக மேற்கொள்ளப்படுகின்ற பொருளாதார மற்றும் அரசியல் சீர்திருத்தங்கள் காரணமாக நேரடி முதலீடு செய்வதற்காக குறிப்பாக அமெரிக்க மற்றும் ஜப்பானிய கம்பனிகள் வரிசையில் காத்து நிற்கின்றன. இவ்வாறான முதலீட்டாளர்களின் ஆர்வம் ஏன் இலங்கையின் மீது ஏற்படவில்லை என்பது முக்கியமானதொரு கேள்வியாகும். இதற்கு அரசாங்கத்தின் பிற்போக்கான பொருளாதார அரசியல் நடவடிக்கைகளே காரணமாகும். உதாரணமாக கடந்தவருடம் மியன்மாருக்கு வருகை தந்த உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கை இலங்கைக்கு வருகைதந்த பிரயாணிகளின் எண்ணிக்கையைவிடவும் அதிகமானதாகும். இந்த புள்ளி விபரம் கூறும் செய்தி என்னவென்றால், மியன்மார் மீது சர்வதேச ரீதியாக மக்களுக்கு இருக்கும் நம்பிக்கை இலங்கை மீது இல்லை என்பதாகும்.

மியன்மாரும் இலங்கையும் கிட்டத்தட்ட ஒரே காலப்பகுதியில் தான் பிரித்தானியாவிடம் இருந்து சுதந்திரம் பெற்றன. அதாவது மியன்மாருக்கு 1948 ஜனவரி 4ஆம் திகதியும் இலங்கைக்கு 1948 பெப்ரவரி 4ஆம் திகதியும் சுதந்திரம் கிடைத்தது. இலங்கை ஒரு ஜனநாயக நாடாக இருந்து வந்துள்ளது. ஆனால், மியன்மார் 1962ஆம் ஆண்டிலிருந்து இராணுவ ஆட்சியின் கீழ் தான் இருந்து வந்தது. ஆகவே அந்த ஆண்டிலிருந்து மியன்மார் பொருளாதார, அரசியல் ரீதியாகப் பாரிய சவால்களை எதிர்கொண்டு வந்ததால் உலகில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்து வந்தது என்ற போதிலும் கடந்த 2 வருடங்களாக மியன்மாரில் மேற்கொள்ளப்பட்டு வரும் அரசியல், பொருளாதார சீர்திருத்தங்கள் உலகின் கவனத்தை ஈர்க்கச் செய்திருக்கிறது. இதற்கு மாறாக இலங்கை மீது இருந்த நம்பிக்கை உலகளவில் குறைந்துகொண்டே வருகிறது.

போகிற போக்கில் இலங்கையின் முன்னணி தனியார் நிறுவனங்கள் எழுச்சிபெற்று வரும் மியன்மார் போன்ற நாடுகளில் தமது முதலீடுகளை மேற்கொள்ள முனையலாம். இவ்வாறான செயற்பாடுகள் இலங்கையின் பொருளாதாரத்தை எதிர் மறையாக பாதிக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் வெகுவாகக் காணப்படுகின்றன. அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கணக்குகளில் 1912ஆம் ஆண்டு பற்றாக்குறை காணப்படுவதாகத் தோன்றியது. இவ்வாறு 2012ஆம் ஆண்டு கூட அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கணக்கில் பற்றாக்குறை காணப்பட்டது. குறிப்பாக 1912 ஆம் ஆண்டு இலங்கையின் ஏற்றுமதி 7 சதவீதமாக குறைவடைந்து இருந்த வேளையில் இறக்குமதி 5 சதவீதத்திற்கு குறைவாக வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. அதாவது வெளிநாட்டுக் கணக்கில் நடைமுறைக்கணக்கில் பாரிய பற்றாக் குறையே காணப்பட்டு வருகிறது. இது எமது பொருளாதார ஸ்திரத்தன்மையை நலிவடையச் செய்கிறது. இதன் காரணமாக இந்த அரசாங்கம் மீண்டும் ஒருமுறை சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெருந்தொகை கடனைப் பெற முனைகிறது.

மீண்டும் ஒரு முறை சர்வதேச நிதியம் கடன் வழங்குமா என்ற சந்தேகம் நிலவுகின்ற வேளையில் அப்படியாக மேலும் கடன் வழங்கினாலும் கூட நிபந்தனைகள் மிக கடுமையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இவ்வாறான கடும் நிபந்தனைகள் பாரிய அரசியல் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும். ஆகவே மொத்தத்தில் பொருளாதார ரீதியிலும் அரசியல் ரீதியிலும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இலங்கை க்கு ஒரு நெருக்கடியான காலமாக இவ்வாண்டும் அடுத்து வரும் ஆண்டுகளும் இருக்கும் என்று எதிர் பார்க்கலாம்.

# சரித்திர முக்கியத்துவ




வத்திக்கான் நகர் ஆலோசனை மண்டபத்தில் கடந்த 11 ஆம் திகதி கூடிய கருதினால்கள் விரைவில் இடம்பெறவிருக்கும் திருநிலைப்படுத்தல் சடங்கு பற்றி பாப்பரசர் 16ஆவது பெனடிக்ற் தங்களுக்கு விளக்கமளிக்கப்போகிறார் என்றே நினைத்தார்கள். ஆனால், பெப்ரவரி 28 ஆம் திகதி இரவு 8 மணியுடன் தனது பதவியை இராஜினாமா செய்யப்போவதாக பாப்பரசர் வெளியிட்ட அறிவிப்பைக் கேட்டு அவர்கள் திகைத்துப் போனார்கள். முற்றிலும் எதிர்பார்க்காத இந்த முடிவின் விளைவான அதிர்ச்சியிலிருந்து உலகம் பூராக வும் வாழும் ஒரு கோடிக்கும் அதிகமான கத்தோலிக்கர்கள் விடுபடுவதற்கு அவர்களுக்குக் காலம் தேவைப்பட்டிருக்கக்கூடும். ஆனால், பல திருச்சபைத் தலைவர்களும் அரசாங்கத் தலைவர்களும் பாப்பரசரின் தீர்மானத்தைத் துணிச்சலானது என்றும் மதிக்கப்படவேண்டியது என்றும் பாராட்டியதைக் காணக்கூடியதாக இருந்தது.

தனக்கு முன்னர் இப்பதவியில் இருந்தவர்களைப் போலன்றி 16 ஆவது பெனடிக்ற் தனது முதுமை காரணமாக பொறுப்புகளை உகந்த முறையில் நிறைவேற்றுவதில் இருக்கின்ற சிக்கல்களை மனதார ஏற்றுக்கொண்டு பதவிவிலக முன்வந்திருக்கிறார். திருச்சபையின் 2000 வருடகால வரலாற்றில் கடந்த 600 ஆண்டுகளில் தனது சொந்த விருப்பத்தில் பதவியிலிருந்து இறங்கிய முதலாவது பாப்பரசர் 16ஆவது பெனடிக்ற்றேயாவார்.

பாப்பரசராக வருவதற்கு மூவர் உரிமை கோரியதனால் மேற்குலகில் தோன்றிய மிகப்பெரிய திருச்சபை உட்பிளவு என்று வர்ணிக்கப்படுகி

# வம் வாய்ந்த முடிவு



றது. நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக 1415 ஆம் ஆண்டு பதவியிலிருந்து இறங்கிய 12ஆவது கிறகரிக்குப் பிறகு பதவி விலகும் முதலாவது பாப்பரசர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. வத்திக்கானைப் பொறுத்தவரை இன்னொரு முக்கியமான பதவிவிலகல் 1294 ஆம் ஆண்டில் இடம்பெற்றதை இங்கு நினைவுபடுத்துவது பொருத்தமானதாகும். பாப்பரசர் பதவிக்குரிய அரசியல் மற்றும் நிதிச் சுமைகளை கையாளக்கூடிய தகுதியின்மையை தான் கொண்டிருக்கவில்லை என்பதை உணர்ந்த பாப்பரசர் ஐந்தாவது செலஸ்தீன், பாப்பரசர் பதவியில் இருப்பவர் பதவி விலகுவதை அனுமதிக்கும் கட்டளையொன்றைப் பிறப்பித்துவிட்டு தானாகப் பதவிவிலகிக் கொண்டார். தனது கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதற்கான உடல்வலிமையும் மனவலிமையும் தன்னிடம் இல்லையென்பதே தற்போதைய பாப்பரசர் தனது பதவி விலகலுக்கு முன்வைத்த காரணமாகும். அண்மைக்காலமாக அவரின் உடல்நிலை ஆரோக்கியமானதாக இருக்கவில்லை. அவருக்கு முன்னர் பதவிவகித்த பாப்பரசர்களில் எவருமே உடல் நிலையைக் காரணம் காட்டி பதவியைத் துறந்ததில்லை. அவர்களில் பலருக்கு உடல் நலம் குன்றியபோதிலும் பதவியில் தொடர்ந்தும் இருந்தார்கள்.

இம்மாத இறுதியில் பாப்பரசர் பதவி வெற்றிடமாகிறது. பாப்பரசர் ஒருவர் காலமானால், அடுத்த பாப்பரசரைத் தெரிவு செய்வதற்காக கார்டினல்கள் மன்றம் (College of Cardinals) 15-28 நாட்கள் இடைவெளிக்குள் தங்கள் கூட்டத்தைக் கூட்டித் தெரிவைச் செய்யவேண்டும். இத்தடவை ஏற்படுகின்ற வெற்றிடம் அத்தகையதல்லவென்பதால், பெப்ரவரி 28 க்குப் பிறகு அவர்கள் விரைவாகவே கூட முடியும். ஆனால், புதிய பாப்பரசர் தெரிவு இடம்பெறும் வரை சிரேஷ்ட கார்டினல் ஒருவர் பாப்பரசர் கடமைகளைப் பொறுப்பேற்பார்.

ஜேர்மனியைச் சேர்ந்த முன்னாள் கார்டினல் ஜோசப் ரற்சிங்கர், பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் மறைந்ததையடுத்து 2005 ஏப்ரில் 19ஆம் திகதி பாப்பரசராகப் பதவியேற்றார். அவர் பதவி விலகிய பிறகு திருச்சபையில் எந்தப் பாத்திரத்தையும் வகிக்கப் போவதில்லை. ஆய்வுக்காகவே தனது மிகுதிக்காலத்தை அவர் அர்ப்பணிக்கப் போகிறார். பாப்பரசர் என்ற வகையில் வத்திக்கான் சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் தனது இறுதி ஆராதனையில் பெப்ரவரி 13 ஆம் திகதி புதன்கிழமை அவர் கலந்துகொண்டார்.


பாப்பரசர் 16ஆவது பெனடிக்றின் மரபு எப்போதுமே சர்ச்சைக்குரியதாகவே இருக்கும். 2005ஆம் ஆண்டு புதிய பாப்பரசரைத் தெரிவு செய்வதற்குக் கூடிய கார்டினல்கள் மன்றத்தின் முன்பாக மிகவும் பழைமைவாதத் தன்மையான உரையொன்றை ஆற்றிய பிறகே இவர் தெரிவு செய்யப்பட்டார். பாப்பரசர் என்றவகையில், கத்தோலிக்கத் திருச்சபைக்குள் இருந்த தாராளவாதிகளுக்கு எதிராக இவர் நடவடிக்கைகளை எடுத்தார்.

16ஆவது பெனடிக்றின் பதவிக் காலம் திருச்சபையின் நற்பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தக்கூடிய (கத்தோலிக்க மதகுருமார் சம்பந்தப்பட்ட) சிறுவர் பாலியல் துஷ்பிரயோக வழக்குகள் போன்ற பல சர்ச்சைகளைச் சந்தித்தது. அவற்றுக்காக அவர் மன்னிப்புக் கோரிய போதிலும், அந்தப் பிரச்சினைகளைக் கையாளுவதற்கு உருப்படியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வந்தன. மதகுருமார் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டுகள் பெரும்பாலும் அமெரிக்கா, அயர்லாந்து, போலந்து மற்றும் பாப்பரசரின் சொந்த நாடான ஜேர்மனியில் தான் கிளம்பின. ஒழுங்கு முறைகளில் மிகவும் இறுக்கமானவராகவும் வைதீகத்தன்மை கொண்டவராகவும் கருதப்பட்ட 16ஆவது பெனடிக்றின் சில பிரகடனங்களும் கொள்கை நிலைப்பாடுகளும் சர்ச்சைக்குரியவையாக மாறியிருந்தன.

கருத்தடையை அவர் எதிர்த்தார். தாம்பத்திய வாழ்வில் எச்.ஐ.வி./எயிட்ஸ் தொற்றுதலைத் தடுப்பதற்காகக் கருத்தடை உறைகள் பாவிக்கப்படுவதைக் கூட எதிர்த்தார். எந்தச் சந்தர்ப்பத்திலும் கருக்கலைப்பை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. செயற்கைக் கருவூட்டலையும் கடுமையாக எதிர்த்தார். எதேச்சாதிகார அரசாங்கங்கள் மற்றும் பாதாள உலகத்தவர்கள் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படுகின்ற சந்தேகத்துக்கிடமான நிதிக் கொடுக்கல் வாங்கல்களில் வத்திக்கான் ஈடுபட்டதாகவும் கூட குற்றச்சாட்டுகள் கிளம்பின.

பாப்பரசரின் பல அறிக்கைகளும் கூற்றுகளும் முஸ்லிம்களையும் யூதர்களையும் மாத்திரமல்ல, தாராள சிந்தை கொண்ட கத்தோலிக்கர்களையும் கூட சீற்றமடைய வைத்தன. முஸ்லிம்களை அவர் வன்முறையுடன் தொடர்புபடுத்தினார். இரண்டாவது உலகமகா யுத்தகாலத்தில் ஐரோப்பாவில் யூதர்கள் படுகொலை செய்யப்பட்ட களப்பலிகளை நிராகரித்த ஒருவருக்கு புனர்வாழ்வு அளித்த பாப்பரசரின் செயல் யூதர்களைப் பெரும் குழப்பத்திற்குள்ளாக்கியது.

தன்னினச் சேர்க்கை மற்றும் பெண்களை மதகுருமாராக நியமிப்பது தொடர்பான விவகாரங்களில் அவரின் கொள்கைகள் சமகால நிலைவரங்களுக்கு ஏற்புடையவையாக இருக்கவில்லை. பாப்பரசரின் சமையல்காரர் அந்தரங்க ஆவணங்களை வெளியிட்டதையடுத்து வத்திக்கானில் இடம்பெற்றிருக்கக்கூடிய ஊழல்தனமான செயற்பாடுகள் அம்பலத்துக்கு வந்தன. காலம் மாறிவருகின்றபோது தோன்றுகின்ற பிரச்சினைகளைக் கையாளக்கூடியதாக நேர்மறையாகவும் ஆக்கபூர்வமாகவும் தனது பிரதிபலிப்புகளை வெளியிட்டு திருச்சபையை வலுப்படுத்தக் கூடியவராக அவர் செயற்படவில்லை என்ற ஒரு பரவலான எண்ணம் நிலவுகிறது. இவருக்கு முன்னர் இருந்த



புதிய பாப்பரசர் ஐரோப்பா கண்டத்திற்கு வெளியே யுள்ளவராக இருக்க வேண்டும் என்று மாத்தி ரமல்ல ஒப்பீட்டளவில் இளமையானவராகவும் உலக மயமாக்கல் தோற்றுவித்துள்ள தார்மீக சவால்களுக்கும் திருச்சபை விவகாரங் களுடன் சம்பந்தப்பட்ட சவால்களுக்கும் உகந்த முறையில் பிரதிபலிப் பைக்காட்டக் கூடிய ஆற்றல் உடையவரா கவும் இருக்க வேண்டும் என்றே பெரும்பாலான கத்தோலிக்கர்கள் எதிர் பார்க்கிறார்கள்

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் இவரை விடவும் பெரு மளவுக்கு செல்வாக்கு மிக்கவராக விளங்கினார்.

அடுத்தமாதம் கார்டினல்கள் மன் றத்தினால் தெரிவு செய்யப்பட விருக்கும் புதிய பாப்பரசர் மீதே கத்தோலிக்க உலகின் கவனம் மாத்தி ரமல்ல, முழு உலகினதும் கவனம் செல்கிறது. இதுகாலவரையில் வத் திக்கானில் பதவியில் இருந்த சகல பாப்பரசர்களுமே ஐரோப்பாவைச் சேர்ந்தவர்கள். புதிய பாப்பரசர் ஐரோப்பாக் கண்டத்துக்கு வெளியே யுள்ளவராக இருக்கவேண்டுமென்ற எதிர்பார்ப்பு காணப்படுகிறது.

வத்திக்கானின் வரலாற்றில் சகல பாப்பரசர்களும் ஐரோப்பாவைச் சேர்ந்தவர்களாகவே இருந்த பாரம் பரியத்திலிருந்து கார்டினல்கள் மன் றம் இத்தடவை விலகுமா? கத்தோ லிக்க சனத்தொகையைக் கூடுதலாகக் கொண்ட லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்தவரை, அல்லது உலகில் இருக் கக்கூடிய கத்தோலிக்கர்களில் 15 சத வீதமானோரின் தாயகமாக விளங் கும் ஆபிரிக்காக் கண்டத்தைச் சேர்ந்தவரை கார்டினல்கள் மன்றம் புதிய பாப்பரசராகத் தெரிவு செய் யுமா?

ஐரோப்பா கண்டத்திற்கு வெளியே தான் கூடுதலான கத்தோலிக்கர்கள் வாழ்கிறார்கள். ஆனால், கார்டினல் கள் மன்றம் ஐரோப்பியர்களின் ஆதிக்கத்திலேயே இருக்கிறது. அந்த ஐரோப்பிய கார்டினல்களில் பெரும் பாலானவர்கள் 16ஆவது பெனடிக்றி னால் நியமனம் செய்யப்பட்டவர் களே. அதனால், கூடுதலான அளவு க்கு மிதவாதப்போக்குடைய ஒரு பாப்பரசர் தெரிவாகக்கூடிய வாய்ப் புகள் அதிகம் இருப்பதாகக் கூறுவ தற்கில்லை.

புதிய பாப்பரசர் ஒப்பீட்டளவில் இளமையானவராக இருக்க வேண்டு மென்றும் சிறப்பான தொடர்பாடல் வல்லுனராகவும் உலகமயமாக்கல் தோற்றுவித்துள்ள தார்மீக மற்றும் திருச்சபை விவகாரங்களுடன் சம் பந்தப்பட்ட சவால்களுக்கு உகந்த முறையில் பிரதிபலிப்பைக் காட்டக் கூடிய ஆற்றலுடையவராகவும் இரு க்க வேண்டுமென்றே பெரும்பாலான கத்தோலிக்கர்கள் எதிர்பார்க்கிறார் கள்!



# அரசியல் துறவறம் போவாரா குஷ்பு?

'குஷ்பு' என்ற மந்திரச் சொல் தமிழக சினிமா ரசிகர்களை மயக்கும் மூன்றெழுத்துச் சொல்லாக தமிழகத் திரையுலகில் வலம் வந்த நேரம். 'வருஷம் 16' திரைப்படம் மூலம் வட மாநிலமான மும்பையிலிருந்து தமிழகத்திற்குள் நுழைந்த நடிகை குஷ்புவிற்கு தமிழகத்தில் 'கோயில்கள்' கூட கட்டப்பட்டன. தமிழகத்தில் ஒரு நடிகைக்கு 'கோயில்' கட்டியது 'சின்னத்தம்பி' சினிமா மூலம் ரசிகர்களைச் சுண்டியிழுத்த குஷ்புவிற்கு மட்டுமே முதலில் நடந்தது. அந்த அளவிற்கு ரசிகர்களின் அன்பால் அரவணைத்துக் கொள்ளப்பட்ட நடிகை குஷ்பு, பொதுவாக சமுதாய கருத்துகளைச் சொல்வதில் அக்கறை கொண்டவர். நீரோடை போல் அமைதியாகச் சென்று கொண்டிருந்த குஷ்புவின் திரையுலக வாழ்வில் திடீரென்று 'வெள்ளம்' பாயத்தொடங்கியது வெளிப்படையாகத் தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்துகளால்தான்!.

2005ஆம் வருடம் வாக்கில், வாரப் பத்திரிகையொன்றிற்கு அளித்த பேட்டியில், 'திருமணத்திற்கு முன்பாக தாம் பத்யம் என்பது கூடாது. ஏனென்றால் பெண்ணுக்கு கற்பு என்பது அழியாச் சொத்து. தவறிப் போய் திருமணத்திற்கு முன்பு செக்ஸ் வைத்துக்கொள்ள நேரிட்டால், பாதுகாப்பான செக்ஸ் வைத்துக் கொள்ள வேண்டும்' என்று 'எய்ட்ஸ்' பற்றிய விழிப்புணர்வு பேட்டியொன்றில் கருத்துச் சொன்னார் குஷ்பு. அதுமட்டுமன்றி 'எந்த ஒரு படித்த மாப்பிள்ளையும் தன் மனைவி கற்பாக இருக்க வேண்டும் என்று நினைக்கமாட்டார்' என்று இன்னுமொரு விவகாரமான கருத்தைச் சொன்னார். அந்தப் பேட்டியே குஷ்புவின்

வாழ்க்கைத் தேரோட்டம் திடீ ரென்று 'ராட்ஷத காற்றில்' சிக்கிக் கொண்டது. டாக்டர் ராமதாஸ் தலைமையிலான பாட்டாளி மக் கள் கட்சியும், திருமாவளவன் தலைமையிலான விடுதலைச் சிறு த்தைகள் அமைப்பும் 'தமிழக பெண்களை கேவலப்படுத்தி விட் டாய்' என்று கூறி, குஷ்புவிற்கு எதிரான போராட்டங்களை நடத் தின. குஷ்பு போகும் இடங்களில் 'துடைப்பம்' 'செருப்பு' போன்ற வற்றை தூக்கிக் காட்டி கலாட்டாக் கள் செய்தன. குஷ்புவின் மீது ஆங்காங்கே உள்ள நீதிமன்றங் களில் 'மானநஷ்ட வழக்கு' போட்டார்கள். ஒரு கருத்து சொன் னதற்காக அதிக வழக்குகளைச் சந்தித்த தமிழ் சினிமா நடிகை குஷ்பு மட்டுமே! வழக்குகளைச் சந்திக்க நீதிமன்றங்களுக்கு குஷ்பு போனால் அங்கும் அக்கப்போர். எள் அளவு அமைதி கூட இல்லா மல் எரிமலை தன் முன்பு வெடித் துச் சிதறுவது போன்ற உணர்வில் இருந்தார் குஷ்பு.

அது போன்ற வேளையில் தி.மு.க. தலைவர் கருணாநிதியின் மகளும், ராஜ்ய சபை எம்.பி. யுமான கனிமொழியும், இப் போது இந்திய நிதியமைச்சராக இருக்கும் ப.சிதம்பரத்தின் மகன் கார்த்தி சிதம்பரமும் சேர்ந்து 'கருத்து' என்ற ஒரு அமைப்பை உருவாக்கினார்கள். அந்த அமைப்பின் சார்பில் பல்வேறு பொதுப் பிரச்சினைகள், சமுதா யப் பிரச்சினைகள் பற்றி அவர வர் சுதந்திரமாக கருத்துச் சொல் வதற்கு வகை செய்யும் அமைப்பு இது. இன்னும் சொல்லப்போ னால் குஷ்புவிற்கு ஏற்பட்ட பிரச் சினைக்கு வடிகால் காணும் விதத் தில் ஏற்படுத்தப்பட்ட அமைப்பு இது என்றால் கூட சாலப்பொ ருத்தமே! அந்த அமைப்பின் சார் பாக ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து, அங்கே குஷ்புவிற்கு எதி ராக கடுமையாகப் போராடிய திருமாவளவன் வரவழைக்கப் பட்டார். அக்கூட்டத்தில் கனி மொழி, குஷ்புவிற்கு ஆதரவாக பேசினார். 'கருத்துச் சுதந்திரத் திற்கு ஆபத்து வரக்கூடாது. குஷ்பு பேசியதைத் தவறாகப் புரிந்து கொண்டு இப்படி ஒரு பெண்ணிற்கு எதிராக ஆங் காங்கே வெடிக்கும் போராட்டங் கள் வேதனையைத் தருகிறது' என்ற ரீதியில் கருத்துச் சொன் னார். தமிழகத்தில் ஆளுங்கட்சி யாக அப்போது இருந்த தி.மு.க. வின் சார்பில் நீண்ட கனிமொழி யின் கரம் குஷ்புவிற்கு ஆறுத லைக் கொடுத்தது. அவருக்கு எதி ராகப் போராட்டங்கள் நடத்திய பா.ம.க., விடுதலைச் சிறுத்தைகள் போன்ற கட்சியினரும் அதன் பிறகு தங்கள் 'ஆர்ப்பாட்ட சுரு தியை' ஆரவாரம் இன்றி குறைத் துக் கொண்டனர். குஷ்புவிற்கு எதிராகப் போடப்பட்ட 22 வழக்

**திருமண விழா வில் ஆற்றிய உரையால் மூண்ட புதிய சர்ச்சை**







## சென்னை மெயில்





முத்தையா காசிநாதன்

குகளை சுப்ரீம் கோர்ட் தள்ளுபடி செய்தது!

அந்தப் புயலில் இருந்து தன்னைக் கரை சேர்த்த கட்சிக்கு விசுவாசமாக இருக்க நினைத்தார் குஷ்பு. அப்படித்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது பாசம் கொண்டார். தன் காலத்தில் திரையுலகில் பாப்புலரான பல நடிகைகளும் ரசிகர்களின் மனதிலிருந்து 'காணாமல்' போனாலும், குஷ்பு மட்டும் நிலைத்து நின்றார். அவர் சமுதாயக் கருத்துகளை தைரியமாக எடுத்து வைக்கும் பேட்டிகளைக் கொடுத்து பிரபலமாகியதுதான் அதற்குக் காரணம். குஷ்புவிற்கு தமிழும் தெரியும். ஆங்கி லமும் தெரியும். இந்தியும் தெரியும். அதனால் அவரை டெலிவிஷன் சனல்களும் சரி, தமிழ் மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகளும் சரி மொய்க்கத் தொடங்கின. 'மீடியா ப்ரெண்ட்லி' குஷ்பு என்ற அளவிற்கு அவர் அனைத்து மட்டங்களிலும் மின்னினார். 2011 பெப்ரவரி மாதத்தில் குஷ்பு ஒபிஷியலாக தி.மு.க.வில் இணைந்தார். அவர் அந்தக் கட்சியில் ஒரு அடிமட்ட தொண்டர் அவ்வளவுதான். வேறு எந்த பொறுப்புகளும் இல்லை. கட்சியின் பொதுக்குழு கூடும் நேரங்களில் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்பார். ஆனால் பெயர் போடப்பட்டிருக்கிறதோ, இல்லையோ தி.மு.க.வின் ஆர்ப்பாட்டம் எதுவாக இருந்தாலும் பங்கேற்பார். தி.மு.க.வில் உள்ள மற்ற சினிமா பிரமுகர்களான வாகை சந்திர சேகர் போன்றோர் கூட 'ஆர்ப்பாட்டத்திற்கோ' 'கூட்டத்திற்கோ' அவர்கள் பெயர் போட்டிருந்தால் மட்டுமே ஆஜராவார்கள். ஆனால் குஷ்பு அப்படியில்லை! எங்கு கூட்டம் என்றாலும் 'சம்மன்' இல்லாமலேயே ஆஜராகும் மரபை வைத்திருந்தார்.

தி.மு.க.வில் தலைமைக் கழகப் பேச்சாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மாநிலம் முழுவதும் கலந்து கொண்டு பேசும் கூட்டங்கள் பற்றி அறிவிப்பு வரும். அதில் ஒரு சில நேரங்களில் மட்டுமே குஷ்புவிற்கும் அதிர்ஷ்டம் அடிக்கும். ஆனால் கட்சியில் சேர்ந்த குஷ்புவைத் தனியாக அழைத்து சிறப்பு பொதுக்கூட்டங்கள் தி.மு.க.வில் போடப்படவில்லை. புதிதாக கட்சியில் சேருவோருக்கு இப்படியொரு கூட்டத்தைப் போடும் பழக்கம் தி.மு.க.வில் உண்டு. குஷ்பு விடயத்தில் அது கடைப்பிடிக்கப்படவில்லை. நடிகர் குமரி முத்து போன்றோர் எப்படி பிரசாரம் செய்தார்களோ, அப்படி 2011 சட்டமன்றத் தேர்தலின் போது ஆங்காங்கே பிரசாரமும் செய்தார் குஷ்பு. ஆனால் தி.மு.க.வில் 'விளம்பரம்' இல்லாமல் கூட்டம் கூடியது என்றால் அது குஷ்புவின் கூட்டத்திற்குத்தான்- இதை இன்றைக்கும் தி.மு.க. முன்னணித் தலைவர்கள் அனைவரும் மனம் திறந்து பாராட்டுகிறார்கள். இந்நிலையில் ஈரோட்டில் தி.மு.க.வின் சார்பில் 2012 ஜனவரி 25ஆம் திகதி வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் நடந்தது. (இந்தி திணிப்பை எதிர்த்துப் போராடி உயிர் நீத்தவர்களுக்காக வருடந்தோறும் நடத்தப்படும் பொதுக் கூட்டம் இது). அதில் குஷ்பு பேசுவார் என்று அறிவிக்கப்பட்டதும், 'இந்தி பேசும் குஷ்பு எப்படி வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் பேசலாம்?' என்று அ.தி.மு.க கடுமையாக எதிர்த்தது. ஆனால் அதற்கு தி.மு.க. தலைமை பதில் சொல்லவில்லை. ஆனால் இந்த வருடம் ஜனவரி 25ஆம் திகதி நடைபெற்ற வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் பேசுவோர் பட்டியலில் நடிகை குஷ்பு பெயர் இடம்பெறவில்லை. 'கட்சியில் நம்மை ஓரங்கட்டுகிறார்கள்' என்ற எண்ணத்தை குஷ்புவின் மனதில் விதைத்த முதல் நிகழ்ச்சி இதுதான். கனிமொழியின் ஆதரவாளராக கட்சிக்குள் வந்தார் குஷ்பு என்ற ஒரே காரணம்தான்!

இது போன்ற சூழலில்தான் அந்த சர்ச்சைக்குரிய பேட்டி வெளிவந்தது. கட்சிக்குள் 'அடுத்த தலைவர் ஸ்டாலின்' என்ற பிரசாரம் ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்த நேரம். வாரப்பத்திரிகையொன்றிற்கு பேட்டியளித்த குஷ்பு, 'தி.மு.க.விற்கு ஸ்டாலின்தான் தலைவராக வேண்டும் என்றில்லை. பொதுக் குழு கூடி முடிவு எடுக்கும்' என்ற ரீதியில் பேட்டி கொடுத்தார். அப்பேட்டி வெளிவந்த தினத்தில் திருச்சியில் ராஜ்ய சபை உறுப்பினர் சிவாவின் இல்லத் திருமணம். அதில் தி.மு.க. தலைவர் கருணாநிதி, மத்திய அமைச்சர் அழகிரி, தி.மு.க. பொருளாளர் ஸ்டாலின், ராஜ்ய சபை உறுப்பினர் கனிமொழி ஆகிய நால்வரும் ஒரே மேடையில் அமரும் விதத்தில் அந்தத் திருமண நிகழ்ச்சி பெப்ரவரி 7ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. திராவிடர் கழகத் தலைவர் வீரமணியும் பங்கேற்றார். அந்த நிகழ்ச்சியில் வரவேற்புரையாற்றி விட்டு அமர்ந்திருந்தார் ஸ்டாலின். பொதுவாக தி.மு.க.வின் பொதுக்கூட்டம் என்றாலும், திருமண நிகழ்ச்சிகள் என்றாலும் யார், யார் எந்த வரிசையில் பேசுவது என்ற மரபு உண்டு. குறிப்பாக வீரமணியும் பங்கேற்கும் கூட்டங்களில் ஸ்டாலின், வீரமணி, பேராசிரியர் அன்பழகன், தலைவர் கருணாநிதி என்ற வரிசையில்தான் பேசுவார்கள். அன்றைய தினம் அன்பழகன் வரவில்லை. ஸ்டாலின் முன்பே வரவேற்புரை ஆற்றிவிட்டார். இது போன்ற சூழ்நிலையில் திருமணத்திற்கு சற்று தாமதமாக வருகை தந்தார் நடிகை குஷ்பு. அப்போது வீரமணி பேச வேண்டிய நேரம். தாமதமாக வந்ததால், குஷ்பு முன்னணி பிரமுகர்கள் இருந்த வரிசைக்குப் போகாமல், திரையுலகினரான சமுத்திரக்கனி, டைரக்டர் அமீர், திண்டுக்கல் லியோனி ஆகியோர் அமர்ந்திருந்த வரிசையில் உட்கார்ந்தார். சர்ச்சைக்குரிய பேட்டி கொடுத்த குஷ்புவின் வருகையைப் பார்த்த ஸ்டாலின் ஆதரவாளர்கள் கோபத்தின் உச்சியில் திருமண பந்தலில் குமுறிக் கொண்டிருந்தார்கள்.

இந்த சமயத்தில் கனிமொழி எம்.பி. கட்சித் தலைவரிடம், 'குஷ்புவை பேசச் சொல்லுங்கள்' என்று வேண்டுகோள் விடுத்தார். அப்போது வீரமணி பேசிக் கொண்டிருந்ததால், அவர் பேசி முடித்ததும் குஷ்புவிற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. மைக்கைப் பிடித்த குஷ்பு 'கணவன்- மனைவிக்குள் பிரச்சினை வரும். அதனால் வருத்தம் வரும். ஆனால் அந்த வருத்தம் இணைப்பில்தான் முடிய வேண்டுமே தவிர பிரிவில் முடியக்கூடாது' என்று கலகலப்பாகப் பேசி, 'திருமண வாழ்வில் சோகம் உண்டு. ஆனால் அது கூட சுகமான அனுபவமாக மாறுவது காதலில் தானே' என்று முத்தாய்ப்பாக முடித்தார். அதில் கட்சி ரீதியாக ஸ்டாலின், கலைஞர் கருணாநிதி ஆகியோர் பற்றிக்கூட எதுவும் குஷ்பு பேசவில்லை. பேட்டியும் கொடுத்து விட்டு, ஸ்டாலி

னையும் பாராட்டிப் பேசவில்லை என்ற கோபம் அங்கிருந்த ஸ்டாலின் ஆதர வாளர்களுக்கு 'பாய்லர்' போல் கொதித்தது. அதற்கு மேலும் தூபம் போட்டது, திருமண நிகழ்ச்சியில் திரா விடக் கழகத் தலைவர் வீரமணிக்குப் பிறகு குஷ்பு பேசியது! 'கட்சியில் இவர் என்ன தளபதிக்கு இணையான வரா?' என்று கொந்தளித்தார்கள். அதன் எதிரொலி சற்று நிமிடங்களில் புறப்பட்டது. திருச்சியில் குஷ்பு மீது செருப்பு வீசப்பட்டது. சென்னையில் அவரது வீடு தாக்கப்பட்டது.

நடிகை குஷ்பு நடுங்கிப் போனார் என்றே சொல்ல வேண்டும். உடனே ஹைதராபாத்திற்கு 'எஸ்கேப்' ஆகி விட்டார். சென்னை திரும்பினால் விமான நிலையத்தில் ஸ்டாலின் ஆதர வாளர்கள் தாக்கலாம் என்ற அச்சம் அவருக்கு தலைக்கேறியது! பிறகே சென்னை வந்தார். முதலில் கனிமொழி மூலம் குஷ்புவை சமாதானம் செய்தார் கள். குஷ்பு வீட்டில் நடந்த தாக்குதலை தி.மு.க. தலைமைக் கழகத்திலிருந்து 'இது காட்டுமிராண்டித்தனமான தாக்கு தல்' என்று கடுமையாகக் கண்டித்து அறிக்கை வெளியிட்டு கண்டித்தார்கள். 'குஷ்புவை தி.மு.க.விலிருந்து வெளி யேற்ற நடைபெற்ற சதி முறியடிக்கப் பட்டு விட்டது' என்றும் தலைமைக் கழக செய்திக் குறிப்பு சொன்னது. இப் படி சதி செய்தவர்கள் யார் என்பது தான் தி.மு.க.விற்குள் 'உலா' வந்த 'உஷ்ணமான' கேள்வி. சென்னையில் குஷ்புவின் வீட்டைத் தாக்கியவர்கள் ஏற்கனவே தி.மு.க. பொதுக்குழுவில் முன்னாள் அமைச்சர் வீரபாண்டி ஆறு முகம் பேசும் போது 'கலாட்டா' செய்த வர்கள் என்பதைக் கண்டுபிடித்தது. மேடையில் இருந்த தலைவர்களின் பெயரைச் சொல்லும் போது ஸ்டாலின் பெயரை விட்டு விட்டார் என்பதே அவர் மீது அப்போதைய கோபம். தாக் குதல் நடத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று பத்திரிகைச் செய்தி வெளிவந்தாலும், இதுவரை குஷ்பு வீட்டைத் தாக்கியவர்கள் மீது எந்த நடவடிக்கையும் இல்லை என் பதே உண்மை. இப்போது குஷ்பு பிரச் சினை, தி.மு.க. தலைவரின் குடும்ப உறுப்பினர்களுக்குள் 'பனிப்போர்'

# அரசியல் கூட்டணிக்கு அச்சாரம்?

வைகோவும், முதல்வர் ஜெய லலிதாவும் திடீரென்று சந்தித்துக் கொண்டது தமிழக அரசிய லில் அதிரடித் திருப்பத்தை ஏற்படுத்தி யிருக்கிறது. பூரண மதுவிலக்கை அமுல்படுத்த வேண்டும் என்ற கோரிக் கையை வலியுறுத்தி நடைபயணம் செல்கிறார் வைகோ. சமீப காலமாக அடிக்கடி தனது வழக்கமான இல்ல மான போயஸ் கார்டனில் தங்காமல் அடிக்கடி சிறுதாவூரில் உள்ள இல்லத் தில் தங்கி வருகிறார் முதல்வர் ஜெயல லிதா. அதனால் தலைமைச் செயலகத் திலிருந்து சிறுதாவூருக்கு சென்று கொண்டிருந்த முதல்வர் பையனூர் அருகில் எதிரில் வந்து கொண்டிருந்த வைகோவைப் பார்த்து காரை நிறுத்தி னார். நடைபயணத்திலிருந்தவர்கள் எல்லாம் திகைத்துப் போனார்கள். தனக்காகவே காரை நிறுத்தியிருக்கி றார் முதல்வர் ஜெயலலிதா என்று கருதி வைகோ அவரை நோக்கி நடக்க, முதல்வரோ வைகோவை நோக்கி காரை விட்டு இறங்கி வந்தார். இருவ ரும் சந்தித்துக் கொண்டார்கள். மிகவும் இயற்கையான சந்திப்பாக அது அமைந்துவிட்டது. அதிலும் குறிப்பாக பிரபாகரனின் மகன் பாலசந்திரன் பிரபாகரன் இலங்கை இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட படங்கள் பிர பல இந்து பத்திரிகையின் முதல் பக்கத்



தில் வந்திருந்த தினத்தன்று நடைபெற்ற இந்தச் சந்திப்பு தமிழக அரசியலைப் புரட்டிப் போடும் என்றே எதிர்பார்க்கப் படுகிறது.

இருவரும் பரஸ்பர நலம் விசாரித் துக் கொண்டிருந்தார்கள். வருகின்ற 24 ஆம் திகதி பிறந்த நாள் காணும் முதல் வர் ஜெயலலிதாவை 'நீங்கள் நூறா ண்டுகளுக்கும் மேல் வாழ வேண்டும்' என்று பிறந்த நாள் வாழ்த்துச் சொன் னார் வைகோ. முதல்வர் ஜெயலலி தாவும் பதிலுக்கு, 'அம்மா' (வைகோ வின் தாயார்) எப்படியிருக்கிறார்கள் என்று பாசத்துடன் விசாரித்தார். எட்டு நிமிடங்கள் நடைபெற்ற இச்சந்திப் பிற்கு பிறகு முதல்வர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். அப்போது அந் நிகழ்ச்சியை படம் எடுத்தவர்கள் வைகோவுடன் நடைபயணத்தில் வந்த போட்டோகிராபர் மட்டுமே. அதனால் வைகோவைப் பார்த்து, 'ஒரு கேஸட்டை ஜெயா டி.வி.க்கு கொடுத்து அனுப்பி விடுங்கள்' என்று முதல்வர் சொல்ல, அதன்படியே அவசரமாக ஒரு கேஸட்டை ஜெயா டி.வி (ஆளும் அ.தி.மு.க.வின் டி.வி)க்கு கொடுத்து

என்ற நிலைமைக்கு முற்றிப் போய் விட்டது. 'குஷ்புவை இந்த அளவிற் குத் தூண்டி விட்டது கனிமொழிதான்' என்ற கோபம் ஸ்டாலின் குடும்பத்தின ருக்கு வந்துள்ளது. குறிப்பாக ஸ்டா லின் மனைவி துர்க்கா ஸ்டாலின் இப்ப டித்தான் நினைக்கிறார். அதற்கு முக்கிய காரணம் திருச்சி சிவா இல்லத் திருமணத்தில் சும்மா ஓரத்தில் அமர்ந் திருந்த குஷ்புவை ஸ்டாலினுக்கு இணையான அந்தஸ்தில் பேச வைத் தது கனிமொழி என்பதால்தான்! 2-ஜி அலைக்கற்றை ஊழலில் சிக்கி திகார் ஜெயிலில் அடைபட்டிருந்த போது கனிமொழியை நேரடியாகச் சந்தித்த குஷ்பு, 'நான் கனிமொழியுடன் இருக் கிறேன்' என்று பேட்டி கொடுத்தவர். அந்த நன்றிக்கடனிற்கே கனிமொழி இப்படியொரு உதவியைச் செய்தார் என்றும் தகவல்.

இதற்கிடையில் இன்னொரு மாதமி ருமுறை பத்திரிகையில் 'கலைஞர் கரு ணாநிதியையும், குஷ்புவையும்' 'ஈவெரா பெரியார்- மணியம்மை' ஆகியோருடன் ஒப்பிட்டு 'திடுக்கி டும்' செய்தி வந்தது. ஆனால் இந்த முறை ஸ்டாலின் பற்றிய குஷ்புவின் பேட்டிக்கு தி.மு.க.வினர் சிலர் கொந்த ளித்தது போல் தி.மு.க. தலைவர் கரு ணாநிதி பற்றி வந்த செய்திக்கு யாரும் போராடவில்லை. அதன் பிறகு, 'இது தரமற்ற செய்தி. இதை எதிர்த்து சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுப்பதா அல்லது அந்த பத்திரிகை அலுவலகத் தின் முன்பு போராடுவதா?' என்று ஆலோசனை செய்யப்படும் என்று கலைஞர் கருணாநிதி அறிவித்த பிறகு தான், தமிழகத்தின் பல பகுதிகளிலும் அந்த பத்திரிகையைத் தீயிட்டுக் கொளுத்தி தி.மு.க. தொண்டர்கள் போராடி வருகிறார்கள். குஷ்பு பிரச்சி னை இப்போது தி.மு.க.விற்குள் கொளுந்து விட்டு எரிகிறது.

தி.மு.க. தலைவர் கருணாநிதியைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு தேர்த லின் போதும் ஒரு புதுமுகத்தை தேர் தல் பிரசாரத்திற்குக் கொண்டு வரு வார். அவர்களுக்கு முக்கியத்துவமும் கொடுப்பார். உதாரணமாக 1989 சட்ட மன்ற தேர்தலின் போது நடிகை ராதி காவை தி.மு.க.விற்காக பிரசாரம் செய்ய வைத்தார். 1998 பாராளுமன் றத் தேர்தலின் போது 'நடிகர் சரத் குமாரை' தி.மு.க.வில் சேர்த்து அவ ருக்கு பாராளுமன்றத் தேர்தலில் போட் டியிடவே சீட் கொடுத்தார். 2011 சட்ட மன்ற தேர்தலில் குஷ்புவை தி.மு.க. வில் சேர்த்து தமிழகம் முழுக்க சட்ட மன்ற தேர்தல் பிரசாரத்திற்கு பயன்ப டுத்தினார். இப்படி சேர்ந்தவர்களில் சரத்குமாரும் சரி, குஷ்புவும் சரி ஸ்டா லினுடன் ஏற்பட்ட மோதலில் சிக்கிக் கொண்டார்கள். சரத்குமார் விலகிச் சென்று அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி துவங்கி இப்போது அ.தி. மு.க. கூட்டணியில் இருக்கிறார். குஷ்பு மட் டும் தி.மு.க.வில் 'இன்றுவரை' தொட ருகிறார்.

இதற்கிடையில் குஷ்புவை சமாதா

அனுப்பினார் வைகோ. சென்ற சட்ட மன்றத் தேர்தலின் போது 21 சட்டமன் றத் தொகுதிகளைக் கேட்ட வைகோ விற்கு, 12 தொகுதிகள் மட்டுமே தர முடியும் என்று அ.தி.மு.க. தரப்பு சொன்னதால், அப்போது கூட்டணியை விட்டு வெளியேறினார் வைகோ. கடைசி நேரத்தில் ஏற்பட்ட இந்த கசப் பான அனுபவத்தால், சென்ற சட்டமன் றத் தேர்தலையே புறக்கணித்தார் வைகோ. அவ்வளவு குறைந்த தொகு திகளை வாங்கிக் கொண்டு வைகோ அ.தி.மு.க. கூட்டணியில் நீடிக்க முடி யாமல் போனதற்கு முக்கிய காரணம் அ.தி.மு.க.வுடன் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் கூட்டணி வைத்திருந்தது தான்.

இதன் பிறகு நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் மிகவும் குறைவான இடங்க ளிலேயே வைகோ போட்டியிட்டார். ஆனால் தி.மு.க.வுடன் அவர் நெருக் கத்தை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. அதற்கு மாறாக 'பாதயாத்திரை' 'போராட்டங்கள்' மூலம் மறுமலர்ச்சி தி.மு.க.வின் வாக்கு வங்கியை உயர்த் துவதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டார். அந்த வரிசையில் திரு நெல்வேலியிலிருந்து மதுரைக்கு அவர் மேற்கொண்ட 'மதுவிலக்கு பாதயாத் திரை' மிக முக்கியமானது. இந்நிலை யில் அ.தி.மு.க. கூட்டணியிலிருந்து விஜயகாந்த் விலகிச் சென்றார். தமிழக அரசியல் கூட்டணியைப் பொறுத்தமட் டில் திருமாவளவன் தலைமையிலான விடுதலைச் சிறுத்தைகளும், டாக்டர் ராமதாஸ் தரப்பிலான பாட்டாளி மக் கள் கட்சியும் ஒரே அணியில் இருக்க முடியாது. ஒரேயொரு முறை அப்படி சென்ற 2011 சட்டமன்றத் தேர்தலில் இருவரும் தி.மு.க. அணியில் இடம் பெற்றார்கள். ஆனால் அதனால் படு தோல்விதான் கிடைத்ததே தவிர, வெற்றி கிட்டவில்லை. அதேபோல் விஜயகாந்தும், வைகோவும் ஒரே கூட் டணியில் இடம்பெற முடியாது. ஆகவே அ.தி.மு.க.வை விட்டு விஜய காந்த் விலகிச் சென்ற போதே வைகோ வின் ம.தி.மு.க. மீண்டும் அ.தி.மு.க. கூட்டணிப்பக்கம் வருவதற்கான வாய்ப்புகள் பிரகாசமானது.

அதை மனதில் வைத்தே பெப்ரவரி முதல்வாரத்தில் நடைபெற்ற ம.தி.மு.க. பொதுக்குழுவில் அ.தி.மு.க. மீது கண் டனக் கணைகளைத் தொடுக்காமல் அமைதி காத்தார் வைகோ. அந்தக் கூட் டத்தில் மொத்தம் 17 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றுள் 11 தீர்மானங்கள் மத்தியில் உள்ள காங்கி ரஸ் அரசுக்கு எதிரானது. மீதியுள்ள ஆறு தீர்மானங்களில் ஒன்று கட்சி தொடர்புடையது. இரண்டு தீர்மானங் கள் 'மதுவிலக்கு' 'ஈழத்தமிழர் பிரச் சினை' போன்ற பொதுப் பிரச்சினை கள் தொடர்புடையது. மூன்று தீர்மா னங்கள் மட்டுமே மாநில அரசு தொடர் புடையது. ஆனால் அவற்றில் மக்கள் அவதிப்படும் மின்வெட்டு பற்றிய தீர் மானத்தில் கூட அ.தி.மு.க. அரசை விமர்சிக்கவில்லை வைகோ. அதற்குப் பதிலாக 'மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மின்சாரத்தை முறையாகப் பகிர்ந்து கொடுக்க வேண்டும்' என்று ஆலோசனை வழங்கும் தீர்மானமா கவே இருந்தது. பொதுக்குழுவில் போடப்பட்ட இந்த தீர்மானங்கள்தான் வைகோ- ஜெயலலிதா சந்திப்பிற்கு வழி அமைத்துக் கொடுத்தது.

ஏனென்றால் இந்த பொதுக்குழுத் தீர் மானங்களைக் கூர்ந்து கவனித்த தி.மு.க. தலைவர் கருணாநிதி ஒரு 'வியூகத்தை' கையில் எடுத்தார். அதா வது, அவருக்கு விஜயகாந்த் தலைமை யிலான தே.மு.தி.க.வுடன் கூட்டணி வைக்க வேண்டும். அதற்கு முன்பு

னம் செய்ய எடுத்துக் கொண்ட முயற்சிகள் எதுவும் கைகூடவில்லை. ஒரு கட்டத்தில் தி.மு.க. தலைவரின் கட்டளையை ஏற்று ஸ்டாலினே கூட குஷ்புவிடம் பேசியதாக அறிவாலய வட்டாரத் தகவல். ஆனால் குஷ்புவோ, ''நீங்கள் தலைவர் பதவிக்கு வரக்கூடாது என்று நான் எங்கும் சொல்லவில்லை. அந்த நினைப்பும் எனக்கு இல்லை. உங்கள் படமும், தலைவர் கலைஞர் படமும் மட்டுமே என் வீட்டில் இருக்கிறது. அந்த வாரப்பத்திரிகைக்கு கொடுத்த பேட்டியில், 'கலைஞர் தளபதியை (ஸ்டாலின்) முன்மொழிவேன் என்று கூறியிருக்கிறார். எனக்குப் பிறகு ஸ்டாலின் சமுதாயப் பணிகளைக் கவனிப்பார் என்று கூறியிருக்கிறார். இனி பொதுக்குழுவும் ஸ்டாலினைத்தான் தேர்வு செய்யும்' என்று தான் சொல்ல வந்தேன். நினைக்கும் எண்ணங்களை தமிழில் அவ்வளவு விவரமாக என்னால் வெளிப்படுத்த முடியாமல் போனதால் ஏற்பட்ட குழப்பம் அது. மற்றபடி உங்களைத் தலைவராக்கக்கூடாது என்றெல்லாம் நான் பேட்டி கொடுக்கவில்லை'' என்று விளக்கிக் கூறியிருக்கிறார். அதே நேரத்தில் கட்சிப் பணிகளுக்கு வருவது பற்றி குஷ்பு இன்னும் பிடிகொடுக்கவில்லை. அவர் அறிவாலயத்திற்கும் வரவில்லை. கலைஞர் கருணாநிதியின் கோபாலபுரம் இல்லத்திற்கும் வரவில்லை. வீட்டில் அமைதியாக இருக்கும் குஷ்பு, 'எனக்கு எதிராக மாற்றுக் கட்சியினர் போராட்டம் நடத்துவார்கள் என்று தெரிந்தால் நான் ஜாக்கிரதையாக இருக்க முடியும். ஆனால் என் கட்சியினரே என்னை அடித்து விடுவார்கள் என்ற நிலை இருந்தால் எப்படி என்னால் கட்சிப் பணி செய்ய முடியும்? எப்படி என்னை தற்காத்துக் கொள்ள முடியும்? ஆகவே நான் கட்சிப்பணிக்கு வரவில்லை. அரசியலுக்கே குட்பை சொல்லப் போகிறேன். ஆனால் கடைசி வரை எனக்குத் தலைவர் கலைஞர்தான்' என்று மிகவும் உருக்கமாக தன்னைச் சந்திக்கும் கட்சி நிர்வாகிகளிடம் கண்ணீர் மல்க சொல்லி வருகிறாராம்.

தி.மு.க.வில் இதுவரை ஸ்டாலினுக்கு போட்டியாக பல தலைவர்கள் உருவானார்கள். அவர்கள் பெரும்பாலும் விலகிச் சென்று விட்டார்கள். அதில் குறிப்பிடத்தக்கவர் மறுமலர்ச்சி தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ. அவருக்குப் பிறகு கட்சிக்குள் மத்திய அமைச்சர் மு.க. அழகிரி ஒரு 'அதிகார மையமாக' ஸ்டாலினுக்கு எதிராக உருவானார். ஆனால் இந்த முறை அவரது பிறந்த நாள் விழாவிற்கு தன் குடும்பத்திலிருந்தும், தான் தங்கியிருக்கும் மதுரையிலிருந்தும் கட்சி நிர்வாகிகள் யாருமே வாழ்த்துச் சொல்லவில்லையே என்று நொந்து போயிருக்கிறார் அழகிரி. இவர் மாதிரியே 'ஸ்டாலின்தான் தலைவராக வேண்டுமா?' என்று கட்சிக்குள் கேள்வி எழுப்பியவர் முன்னாள் அமைச்சர்

**(50ஆம் பக்கம் பார்க்க...)**

விஜயகாந்திற்கு இருக்கும் 'ரிமோட்' வாய்ப்பு ஒன்று அவர் மீண்டும் அ.தி.மு.க.வுடனேயே கூட்டணி வைப்பது. அது நடைபெற்றுவிடக்கூடாது என்பதை மனதில் கொண்டு செயல்பட்ட கலைஞர் கருணாநிதி திடீரென்று வைகோவைப் பாராட்டினார். இலங்கை அதிபர் ராஜபக்ஷ திருப்பதி பயணம் வந்த போது வைகோ டெல்லியிலும், அவரது ஆதரவாளர்கள் ஆந்திர மாநிலம் திருப்பதியிலும் போராட்டம் நடத்தினர். டெசோ இயக்கத்தின் சார்பில் கருணாநிதி, சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்தினார். சென்னை ஆர்ப்பாட்டத்தில் பேசிய கருணாநிதி, 'இன்று நாடு முழுவதும் வேறு பகுதிகளில் ஆர்ப்பாட்டம் நடத்துபவர்களை வரவேற்கிறேன்' என்றார். இந்த வரவேற்பிற்கு பிறகுதான் முதல்வர் ஜெயலலிதா சிறுதாவூர் அருகே நடைபயணத்தில் வைகோவைச் சந்தித்துள்ளார். இதனால் நடைபெற்றுள்ள விளைவு என்ன? எதிர்காலத்தில் வைகோ, அ.தி.மு.க.வுடன் நெருங்கிச் செல்லும் வாய்ப்பு பிரகாசமாகியிருக்கிறது. அதே நேரத்தில் விஜயகாந்த் அ.தி.மு.க.வுடன் மீண்டும் கூட்டணி வைக்கும் வாய்ப்பு டல்லடிக்கத் தொடங்கியுள்ளது. அந்தச் சூழ்நிலை தே.மு.தி.க.வுடன் கூட்டணி பேசுவதற்கு தி.மு.க.விற்கு கை கொடுக்கும் என்று கருணாநிதி நினைக்கிறார். அதனால், வைகோ- ஜெயலலிதா சந்திப்பைப் பார்த்து அவர் மகிழ்ச்சிகரமாக இருப்பதாக அறிவாலய வட்டாரத்தில் பேச்சு.


இன்னும் தமிழக அரசியலில் அடுத்த பாராளுமன்ற கூட்டணி உருவாகிவிடவில்லை. ஆனால் தி.மு.க., தே.மு.தி.க, காங்கிரஸ் ஆகிய மூன்று கட்சிகளும் ஓரணியில் இருக்கும் வாய்ப்புகள் உருவாகலாம் என்ற எதிர்பார்ப்பு அதிகமாகியிருக்கிறது. அதே போல் அ.தி.மு.க., இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ம.தி.மு.க. போன்ற கட்சிகள் அதற்கு எதிரணியாக உருவாகும் சூழ்நிலையும் கனிந்து வந்து கொண்டிருக்கிறது. அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவைப் பொறுத்தமட்டில் வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் 'காங்கிரஸ் எதிர்ப்பு' 'மத்திய அரசின் கொள்கைகள் எதிர்ப்பு' 'ஈழத்தமிழர் பிரச்சினை' ஆகிய மூன்றையும் முன்னிறுத்தி தீவிரப் பிரசாரத்தை மேற்கொள்ள இருக்கிறார். இதை மனதில் வைத்தே பெப்ரவரி 20 ஆம் திகதி காவிரி நதிநீர் மன்ற இறுதித் தீர்ப்பு வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து சென்னை தலைமைச் செயலகத்தில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த முதல்வர் ஜெயலலிதா, 'பிரபாகரன் மகன் கொல்லப்பட்டது மனிதாபிமானமற்ற செயல்' என்றும் 'இலங்கையில் ஹிட்லர் ஆட்சி நடக்கிறது' என்றும் கடுமையாக குற்றம் சாட்டியிருக்கிறார். மின்வெட்டு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளால் மாநில அரசுக்கு எதிராக இருக்கும் சூழ்நிலையை, மத்திய அரசுக்கு எதிரானதாக மாற்றி பாராளுமன்றத் தேர்தல் வெற்றியைப் பெற வேண்டும் என்பது அவரது வியூகம். அந்த வியூகத்தை 'பிரமாண்டமாக பிரசாரம்' செய்வதற்கு வைகோ போன்றவர்கள் மிகவும் அவசியம் என்றும் அ.தி.மு.க. தலைமை கருதுகிறது. அதனால்தான் தானாகவே முன்வந்து நடைபயணத்தில் சென்ற வைகோவை வழியில் சந்தித்துப் பேசியிருக்கிறார் முதல்வர் ஜெயலலிதா. 'அரசியல் நாகரிகத்தை பேணும் சந்திப்பு' என்று வைகோ பேட்டியளித்திருந்தாலும், இது அரசியல் நாகரிகத்தையும் மீறி, வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் வரப் போகும் 'அரசியல் கூட்டணிக்கான சந்திப்பு' என்பதே உண்மை!

# தூக்குத்தண்டனைகளில் காட்டப்படுகின்ற திடீர் அவசரம்

## அப்சல் குரு தூக்கிலிடப்பட்டதையடுத்து காஷ்மீரில் மீண்டும் தீவிரவாதம் உத்வேகம் அடையுமா?

இவ்வளவு விரைவாக இந்த மரண தண்டனை நிறைவேற்றப்படும் என்று எவரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். மதச்சார்பின்மையின் பெயரில் சிறுபான்மையினத்தவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுப்பதில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற் போக்குக் கூட்டணி அரசாங்கம் மென்மையான அணுகுமுறையையே கடைப்பிடித்து வந்திருக்கிறது என்பதை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது அடுத்தடுத்து மரணதண்டனைகள் நிறைவேற்றப்படும் என்று மக்கள் நினைத்திருக்க வாய்ப்பில்லை. கடந்த வருடம் நவம்பர் 21ஆம் திகதி அஜ்மல் கசாப்பை அரசாங்கம் தூக்கிலிட்டது. 4 வருடங் களுக்கு முன்னர் மும்பை பயங்கரவாத தாக்குதலில் பங்கேற்றவேளை கைதுசெய்யப்பட்ட இந்த பாகிஸ்தானிய தீவிரவாதி புனேயிலுள்ள சிறையில் மிகவும் இரகசியமாக தூக்கிலிடப்பட்டான்.

கடந்த பெப்ரவரி 9ஆம் திகதி சனிக்கிழமை காலை மத்திய அரசாங்கம் இன்னொரு உயர்மட்ட இரகசிய தூக்குத்தண்டனையை நிறைவேற்றியது. 2001, 13 டிசம்பர் இந்திய பாராளுமன்றத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட துணிச்சலான தாக்குதலில் பங்கேற்ற பயங்கரவாதிகளுக்கு உதவிய 43 வயதான காஷ்மீர் வர்த்தகர் முஹமட் அப்சல் குருவே தூக்கிலிடப்பட்டவர். நாட்டின் அதியுயர் சட்டவாக்க சபையான பாராளுமன்றத்திற்குள் பிரவேசித்த 5 தீவிரவாதிகள் வகைதொகையின்றி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.


அப்சல் குரு

அதில் அவர்கள் உட்பட 14 பேர் கொல்லப்பட்டனர். 18 பேர் காயமடைந்தனர். பாராளுமன்றத்தின் மீதான தாக்குதலுக்கு வழிவகுத்த முழுச் சதி முயற்சியிலும் நடுநாயகமாக விளங்கியதாக குரு குற்றவாளியாகக் காணப்பட்டார். 10 வருடங்களாக மரணதண்டனையை எதிர்பார்த்து அவர் சிறையில் இருந்து வந்தார். 2002 டிசம்பரில் விசேட நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாகக் காணப்பட்ட குருவின் மரணதண்டனையை 2005 ஆகஸ்ட் 4 ஆம் திகதி உச்ச நீதிமன்றம் ஊர்ஜிதம் செய்தது.

குரு டில்லி திகார் சிறைக்குள் தூக்கிலிடப்பட்டு அவரது சடலம் முஸ்லிம் சம்பிரதாயங்களின்படி சிறைவளாகத்திற்குள்ளேயே அடக்கம் செய்யப்பட்டது. இந்த மரண தண்டனை நிறைவேற்றம் குரு தொடர்பில் சுமார் ஒரு தசாப்த காலமாக நிலவிய நிச்சயமற்ற தன்மையை முடிவிற்கு கொண்டுவந்தனர். இரு தசாப்தங்களுக்கும் கூடுதலான காலத்திற்குப் பிறகு திகார் சிறை ஒரு மரண தண்டனை நிறைவேற்றத்தைக் கண்டது. இறுதியாக திகார் சிறையில் தூக்கிலிடப்பட்டவர்கள் முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியின் கொலையாளிகளான சந்வந்த் சிங்கும் கெஹார் சிங்குமேயாவர். இது நடந்தது 1989 ஜனவரி 6 ஆம் திகதியாகும்.

சகலவிதமான சட்ட நடமுறைகளுக்கும் பிறகு குரு காலை 8 மணிக்கு தூக்கிலிடப்பட்டதாக மத்திய உள்துறை அமைச்சர் சுசில் குமார் ஷிண்டே கூறினார். 'ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி கருணை மனுவை பெப்ரவரி 3 ஆம் திகதி நிராகரித்தார். அதற்குப்பிறகு மறுநாள் பெப்ரவரி 4 ஆம் திகதி நான் எனது அங்கீகாரத்தை வழங்கினேன். தூக்கிலிடப்படுவதற்கான திகதியின் நேரமும் நீதித்துறை அதிகாரியொருவரினால் உறுதிப்படுத்தப்பட்டது. புதிய ஜனாதிபதி சகல கருணை மனுக்களையும் பரிசீலனைக்காக அனுப்பிவைத்தார். நான் கோவையை கவனமாக பரிசீலனை செய்து அப்சல் குருவின் மனுவை நிராகரிப்பதற்காக ஜனவரி 21 ஆம் திகதி ஜனாதிபதிக்கு சிபார்சு செய்தேன்' என்று ஷிண்டே



ஊரடங்கு வேளையில் ஜம்மு- காஷ்மீர் விடுதலை முன்னணி ஆதரவாளர்களை விரட்டியடிக்கும் பொலிஸார்

கூறினார்.

இதுவொரு சரியான தீர்மானம். ஆனால், தவறாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. தவறு கற்பிப்பதற்கு விமர்சகர்களுக்கு வாய்ப்பை அளித்திருக்கிறது. பாராளுமன்றம் போன்ற அதியுயர் நிறுவனம் ஒன்றைத் தாக்கியதாக குற்றம்சாட்டப்பட்ட ஒருவரை எந்த நாடும் மன்னிக்க முடியுமா? நிச்சயமாக இல்லை. நாடுபூராகவும் குழப்பநிலையைத் தோற்றுவிப்பதற்கான அரசியல் நோக்கத்துடன் பயங்கரவாதத் தாக்குதலொன்றில் பங்கேற்ற குற்றவாளிக்கு தண்டனை அளிப்பதில் முன்னுரிமை காட்டப்படவேண்டாமா? நிச்சயமாக காட்டப்படவேண்டும். அதனால் அரசாங்கம் சரியான காரியத்தையே செய்திருக்கிறது. முன்னுரிமை அடிப்படையில் நோக்குவதானால் கசாப்பிற்கு முதலே குரு தூக்கிலிடப்பட்டிருக்கவேண்டும். ஆனால், அரசாங்கம் கசாப்பை தூக்கிலிடுவதற்கு அதி முன்னுரிமை கொடுத்ததைக் காணக்கூடியதாக இருந்தது. ஏனென்றால், அவனொரு பாகிஸ்தானிய பயங்கரவாதி. பயங்கரவாதம் மற்றும் குற்றச்செயல்களுக்கெதிராக எடுப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருக்கும் கடுமையான நடவடிக்கைகள் தொடர்பில் நாட்டுக்கு ஒரு செய்தியை விடுப்பதாகவும் இந்த தூக்குத்தண்டனை நிறைவேற்றம் அமைந்தது.




கசாப் தூக்கிலிடப்பட்ட பிறகு ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டதைப்போலவே (11 வருடங்களுக்கும் அதிகமான காலமாக சிறையில் இருக்கும்) குருவின் மரணதண்டனையையும் நிறைவேற்றவேண்டும் என்ற கோரிக்கை எழுந்தன. பொதுமக்களிடம் இருந்து தொடர்ச்சியாக வந்த நெருக்குதல்களே பயங்கரவாதம் மற்றும் குற்றச்செயல்களுக்கெதிராக கடுமையான நிலைப்பாட்டை எடுப்பதற்கு அரசாங்கத்தை நிர்ப்பந்தித்தது. மக்களின் நெருக்குதல்கள் எதிர்வரும் மாதங்களில் தங்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று ஐக்கிய முற்போக்குக்கூட்டணி பயப்படுகிறது.

எம்.பி.வித்தியாதரன்



இவ்வருடம் மாத்திரம் 10 மாநிலங்களில் சட்டசபைத் தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன. மேகாலயா, திரிபுரா, நாகலாந்து ஆகிய மாநிலங்களின் சட்டசபைத்தேர்தல்கள் அண்மையில் தான் நடந்துமுடிந்தன. வாக்கு எண்ணிக்கை விரைவில் இடம்பெறவிருக்கிறது. எவ்வாறெனினும் இந்த மாநிலத் தேர்தல்கள் மத்தியரசாங்கத்தைப் பொறுத்தவரை பெருமளவுக்கு அரசியல் முக்கியத்துவம் கொண்டவையல்ல. ஆனால், இன்னும் ஒரு சில மாதங்களில் கர்நாடக மாநிலம் சட்டசபைத்தேர்தலை எதிர்நோக்கப்போகிறது. அக்டோபருக்கு முன்னதாக மத்திய பிரதேசம்,

ராஜஸ்தான், சதிஷ்கார் மற்றும் டில்லி ஆகிய மாநிலங்கள் சட்டசபைத் தேர்தலைச் சந்திக்கவுள்ளன.

எனவே ஐக்கியமுற்போக்குக் கூட்டணி அரசாங்கமும் காங்கிரஸ் கட்சியும் பயங்கரவாதம் மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பில் அவற்றின் இமேஜை மேம்படுத்துவதற்கு தீர்மானித்திருக்கின்றன போல் தெரிகிறது. சிறுபான்மையினரை குழப்பத்திற்கு உள்ளாக்கிவிடும் என்கிற அச்சத்தில் அரசாங்கம் வாக்குவங்கி அரசியலை மனதில் கொண்டு எந்தவொரு கடுமையான தீர்மானத்தையும் எடுப்பதற்கு தயங்குகிறது என்று பரவலான அபிப்பிராயம் மக்கள் மத்தியில் இருக்கிறது. ஆனால் சிலர் கடுமையான அரசியல் தீர்மானங்களை எடுக்க வேண்டியது அவசியம் என்ற முடிவுக்கு தலைமைத்துவம் இப்போது வந்திருக்கிறதுபோலத் தோன்றுகின்றது.

ஆனால், அரசாங்கம் அப்சல்குருவின் மரணதண்டனையை நிறைவேற்றும் விடயத்தில் மேலதிக முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொண்டிருக்க வேண்டும். ஏனென்றால் பாராளுமன்றத் தாக்குதல் வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட ஒரு பயங்கரவாதி என்பதற்கப்பால் குரு வேறுபட்ட வகையிலானவர். இந்த வழக்கு மதத்தின் பெயரில் பெரும்பாலும் சகல அரசியல் கட்சிகளினாலுமே அரசியல் மயப்படுத்தப்பட்டிருந்தது. காங்கிரஸ்கூட இது விடயத்தில் குற்றப்பொறுப்புடையதே. நீதித்துறை செயன்முறைகள் பூர்த்தியாகி 2 வருடங்கள் கடந்திருந்த நிலையிலும் கூட தூக்குத்தண்டனை நிறைவேற்றப்படுவதில் தாமதம் காட்டப்பட்டது. குருவின் கருணை மனுக் கோவை ஒரு அரசியல் உதைபந்து போன்று அரசாங்க அலுவலகங்களுக்கிடையில் எறியப்பட்டுக்கொண்டிருந்தது. தற்போது எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்ட தீர்மானத்தை மேற்கொள் வதற்கு அப்போது காங்கிரஸ் தயாராயிருக்கவில்லை.

கருணை மனு நிராகரிப்புக்கெதிராக குருவோ அல்லது அவரது குடும்பத்தினரோ விண்ணப்பம் செய்வதற்கு கால அவகாசத்தைக் கொடுக்காமல் மரணதண்டனையை நிறைவேற்றிவிடுவதில் அரசாங்கம் இத்தகைய அவசரத்தை ஏன் காட்டியதென்பதை விளங்கிக் கொள்ளமுடியவில்லை. இறுதியாக குருவைச் சந்திப்பதற்கு அவரது குடும்பத்தினருக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவும் இல்லை. அவர்களுக்கு நேரகாலத்தோடு அறிவிக்கப்படவும் இல்லை. மரணதண்டனை நிறைவேற்றப்படப்போகும் தீர்மானம் அதிவேககடிதமூலமாகவே குடும்பத்திற்கு அறிவிக்கப்பட்டது. ஆனால், அக்கடிதம் அவர் தூக்கிலிடப்பட்ட பிறகே குடும்பத்தின் கையில் கிடைத்தது. இது சட்டச் செயன்முறைகள் முழுவதையும் கேலிக்கூத்தாக்கியிருக்கிறது. உணர்ச்சிபூர்வமாக இருந்த காலத்தை உள்துறை அமைச்சர் கையாண்ட முறை குறித்து பிரதமர் மன்மோகன் சிங் கூட திருப்தியடையவில்லை என்று தோன்றுகின்றது. டில்லியில் நடைபெற்ற ஆளுநர்கள் மகாநாட்டில் கலந்துகொண்டவேளை பிரதமர் அதிவேக கடிதத்தின் தாமதம் குறித்து உள்துறை அமைச்சரிடம் வினவியிருக்கிறார். அப்சல்குருவின் கோவையில் தான் கையெழுத்து மாத்திரமே இட்டதாகவும் மரணதண்டனை நிறைவேற்ற உத்தரவை நடைமுறைப்படுத்தும் பொறுப்பை உள்துறைச் செயலாளர் ஆர்.கே.சிங்கிடமும் ஏனைய அதிகாரிகளிடமும் விட்டு விட்டதாகவும் அமைச்சர் பிரதமரிடம் பதில் கூறினார்.

இந்த விவகாரத்தில் அரசு பெருமளவுக்கு கவலை கொள்ள வேண்டுமா? அல்லது இந்த விவகாரம் முழுவதும் அரசியல் மயப்படுத்தப்பட்டதன் விளைவா இது? இத்தகைய அநாவசியமான சர்ச்சைகளைத் தவிர்ப்பது குறித்து சகல அரசியல் தலைவர்களும் கொள்கை வகுப்பாளர்களும் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். நீதித்துறைச் செயன்முறைகளுக்குப் பிறகு விரைவாகவே நேரகாலத்தோடு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டிருந்தால் பாதிப்புகளை குறைத்திருக்க முடியும்.

இப்போது ஜம்மு காஷ்மீர் முதலமைச்சர் ஓமர் அப்துல்லா கவலையடைந்தவராகக் காணப்படுகிறார். பல தசாப்தகால தீவிரவாதத்திற்குப்பிறகு மாநிலத்தில் ஓரளவுக்கு வழமை நிலையை மீண்டும் கொண்டுவந்த பெருமைக்குரியவர் அவர். இராணுவப் படைகளின் பிரசன்னத்தை அவரால் குறைக்கக்கூடியதாக இருந்ததுடன், உல்லாசப்பிரயாணத்துறை மூலம் பொருளாதாரத்தை கணிசமான அளவிற்கு மேம்படுத்தியிருக்கிறார். இப்போது காஷ்மீர் பள்ளத்தாக்கில் பல திரைப்படங்களின் படப்பிடிப்புகளும் நடைபெறுகின்றன. ஆனால் குரு தூக்கிலிடப்பட்டதையடுத்து மாநிலம் பழைய நிலைக்கு குறைந்தபட்சம் 10 வருடங்களுக்கு முன்பிருந்த நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது. குரு தூக்கிலிடப்பட்ட காலவேளை பிரகடனப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு இன்னமும் தொடர்கிறது. மாநிலத்தின் பல பாகங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்ற வண்ணம் இருக்கின்றது. மரணதண்டனை நிறைவேற்றத்தை அரசியலுக்குப் பயன்படுத்துவதை வெறுப்பதாக குருவின் உறவினர்கள் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் குருவின் சடலம் மாத்திரமே தங்களுக்கு கையளிக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்கள். தான் தூக்கிலிடப்பட்டால் அதற்குப் பிறகு என்ன விலை கொடுத்தேனும் அமைதியைக் காக்குமாறே குரு வேண்டுகோள் விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் சகல அரசியல் குழுக்களும் தீவிரவாதக் குழுக்களும் இந்த விவகாரத்தில் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்துவதில் மும்முரமாக இருக்கின்றன.

இவ்வருட இறுதியில் தேர்தலுக்கு முகம் கொடுக்க வேண்டியிருப்பதால் அப்துல்லா பெரும் கவலைகொண்டவராகக் காணப்படுகிறார். அதைவிட மரணதண்டனைக்கு எதிரான உணர்வுடன் தன்னை அவர் கூடுதலாக அடையாளப்படுத்தியும் இருக்கிறார்.

பிரிவினைவாதிகளுக்காக எதிரணியினர் பரிந்துபேசுவதைத் தடுப்பதற்கான ஒரு தந்திரோபாயமாக அப்துல்லா இதைச் செய்திருக்கக்கூடும். இதே முதலமைச்சர் பாகிஸ்தானிய தீவிரவாதி கசாப்பை தூக்கிலிட்டதற்காக அரசாங்கத்தைப் பாராட்டியவர். பஞ்சாப் முதலமைச்சர் பியன்ற் சிங் கொலைவழக்கு மற்றும் ராஜீவ்காந்தி கொலைவழக்கில் குற்றவாளியாகக் காட்டப்பட்டு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டவர்களையும் தூக்கிலிடுவதற்கு மத்திய அரசாங்கம் துணிச்சல் கொள்ளுமா என்று அப்துல்லா கேள்வியெழுப்புகிறார். எவ்வாறெனினும் இத்தகைய குற்றச்செயல்களை ஒருபோதும் பொறுத்துக்கொள்ளப்போவதில்லை என்ற உறுதிப்பாட்டுடன் அரசாங்கம் இப்போது சந்தனக்கடத்தல் வீரப்பனின் சகாக்களை தூக்கிலிடுவதற்கு நடவடிக்கையில் இறங்கியிருக்கிறது.

குருவின் சடலத்தை அவரின் குடும்பத்தினருக்கு கையளிப்பதில்லை என்று அரசாங்கம் விடுத்த தீர்மானம் தொடர்பில் இன்னொரு சர்ச்சை மூண்டிருக்கிறது. நிலைவரங்களை முழுமையாகவும் நிதானமாகவும் ஆராய்ந்த பின்னரே இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் காஷ்மீர் பள்ளத்தாக்கில் அமைதியைச் சீர்குலைத்து வன்முறையைத் தூண்டிவிடுவதற்கு குருவின் மரணச்சடங்குகள் பயன்படக் கூடும் என்று அரசாங்கம் அஞ்சியதாகவும் அதிகாரிகள் கூறுகிறார்கள். ஆனால், ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டதும் இந்த விவகாரம் பாரியதொரு சர்ச்சையாக உருவெடுக்கக்கூடிய ஆபத்திலிருக்கிறது. அதிவேகக் கடிதம் தாமதமாக குருவின் குடும்பத்தினரின் கையில் கிடைத்த விடயமும் கூட இன்னொரு சர்ச்சையாக்கப்படலாம். அஜ்மல் கசாப் பின் விவகாரத்தைப் பொறுத்தவரை அவனது சடலத்தை இறுதிக்கிரியைகளுக்காகப் பொறுப்பேற்பதுக்கு அவனது குடும்பமோ அல்லது பாகிஸ்தானிய அரசாங்கமோ இணங்கவில்லை.

குரு குற்றவாளியாகக் காணப்பட்டதை பெரும்பாலான காஷ்மீரியர்கள் ஒருபோதும் ஏற்றுக்கொண்டதில்லை. அவர் தவறான முறையில் அந்த வழக்கில் சம்பந்தப்படுத்தப்பட்டதாகவும் நேர்மையான முறையில் வழக்கு விசாரிக்கப்படவில்லையென்றும் அவர்கள் நம்புகிறார்கள். குருவுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்ட பிறகு முதலமைச்சர் ஒமர் அப்துல்லா அத்தண்டனை நிறைவேற்றப்பட்டால் பாரதூரமான விளைவுகள் ஏற்படுமென்று மத்திய அரசாங்கத்தை அடிக்கடி எச்சரிக்கை செய்திருந்தார்.

1984ஆம் ஆண்டு திகார் சிறை காஷ்மீர் தலைவர் ஒருவர் தூக்கிலிடப்பட்டபிறகே அந்த மாநிலத்தில் தீவிரவாதம் பரவுவதற்கான சூழ்நிலைகள் தோன்றின. ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணி என்ற புதிய அமைப்பின் தலைவர்களில் ஒருவரான மக்பூல் பாத் என்பவரே தூக்கிலிடப்பட்டவராவார். 1984ஆம் ஆண்டு பெப்ரவரியில் இது நடந்தது. பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரை கொலைசெய்ததாக அவர் குற்றவாளியாகக் காணப்பட்டார். பாத் தூக்கிலிடப்பட்டதை அடுத்து மூண்ட முழு அளவிலான கிளர்ச்சி சுமார் 3 தசாப்த காலமாகத் தொடர்ந்தது. குரு தூக்கிலிடப்பட்ட சம்பவமும் முன்னதைப்போன்று காஷ்மீரில் மீண்டும் ஒரு தடவை தீவிரவாதம் உத்வேகமடையக் காரணமாக அமையுமா?

## இந்திய அரசுக்கு நெருக்கடிதரும் இன்னொரு ஊழல் விவகாரம்

வரவிருக்கும் தேர்தல் சவால்களை எதிர்நோக்குவதற்கு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கமும் காங்கிரஸ் கட்சியும் கடுமையாகப் பாடுபட்டு தங்களை தயார்செய்துகொண்டிருக்கும் நிலையில், இன்னொரு ஊழல் விவகாரம் அம்பலப்படுத்தப்பட்டிருக்கிறது. இது அரசாங்கத்திற்கும் காங்கிரஸிற்கும் பெரும் தொல்லையாக மாறியிருக்கிறது. காந்தி குடும்பத்தினதும் அமைச்சரவையில் இருப்பவர்களில் மிகவும் கைசுத்தமானவர்களில் ஒருவர் என்று கருதப்படும் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனியினதும் நற்பெயருக்கு இந்த புதிய ஊழல் விவகாரம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தப்போகிறது.

பிரிட்டனிலுள்ள அகஸ்டா வெஸ்ட்லான்ட் என்ற நிறுவனத்திடம் இருந்து




விசாரணைகளில் ஒத்துழைக்கா விட்டால் ஒப்பந்தம் ரத்து செய்யப்படும் என்று அகஸ்டா வெஸ்ட்லென்ட் விமான தயாரிப்பு நிறுவனத்தை அந்தோனி எச்சரிக்கை செய்திருக்கிறார்

அதிமுக்கிய பிரமுகர்களின் பாவனைக்காக 12 ஹெலிகொப்டர்களை கொள்வனவு செய்வதற்கு கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை சம்பந்தப்பட்ட 3760 கோடி ரூபா ஊழல்விவகாரமே இதுவாகும். அகஸ்டா வெஸ்ட்லான்ட் இத்தாலியின் பின்மெக்கானிக்கா என்ற பிரமாண்டமான விமானத் தயாரிப்பு நிறுவனத்தின் ஒரு கிளையாகும். 3 ஹெலிகொப்டர்கள் ஏற்கனவே தருவிக்கப்பட்டுவிட்டன. அவை தென்மேற்கு இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்டவை. ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட 12 அதியுயர் பிரமுகர்கள் சேவைக்காக 12 மூன்று இயந்திரங்களைக்


கைது செய்யப்பட்ட பின் மெக்கானிக்கா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஓர்சி


முன்னாள் இந்திய விமானப்படைத்தளபதி பி.எஸ்.தியாகி

கொண்ட ஏ.டபிள்யூ- 101 ஹெலிகொப்டர்களை வாங்குவதற்காக 2010 பெப்ரவரியில் இந்தியா இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டது.

இந்த உடன்படிக்கையை செய்து கொள்வதற்காக இலஞ்சம் கொடுக்கப்பட்டதா என்பது குறித்து விளக்கம் அளிக்குமாறு அகஸ்டா வெஸ்ட் லான்ட் நிறுவனத்தை பாதுகாப்பு அமைச்சு இப்போது கேட்டிருக்கிறது. ஊழல் தொடர்பில் எப்போதுமே கடுமையான நிலைப்பாட்டை எடுக்கும் பாதுகாப்பு அமைச்சர் அந்தோனியினால் அனுப்பப்பட்ட கடிதம் இந்த விசாரணைகளில் ஒத்துழைக்காவிட்டால் ஒப்பந்தம் ரத்துச்செய்யப்படும் என்று அந்த விமானத்தயாரிப்பு நிறுவனத்தை எச்சரிக்கை செய்திருக்கிறது. ஏலத்தில் மறுபரிசீலனைகள் செய்யப்படாதிருந்தால் அகஸ்டா வெஸ்ட் லான்ட் நிறுவனம் இந்த ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டிருக்காது என்ற அடிப்படையிலேயே அந்த ஊழல் விவகாரத்தில் கவனம் செலுத்தப்படுகிறது. மாற்றங்களைச் செய்வதற்காக நிறுவனம் இடைத்தரகர்களுக்கு சுமார் 360 கோடி ரூபாவை இலஞ்சமாக கொடுத்ததாகக் கூறப்படுகிறது. பின்மெக்கானிக்கா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கியூசெப்பி ஓர்சி இத்தாலியில் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்தே இந்த ஊழல் விவகாரம் அம்பலத்திற்கு வந்தது.

பாரதிய ஜனதாக்கட்சி தலைமையிலான முன்னைய தேசிய ஜனநாயக கூட்டணி அரசாங்கமே ஏல நடைமுறைகளில் மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்று வேண்டிக்கொண்டதாக அரசாங்கம் விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எவ்வாறெனினும் பாதுகாப்பு மற்றும் அமைச்சரவைச் செயலாளர்கள் உட்பட உயர்மட்ட அதிகாரிகளினால் மாற்றங்கள் குறித்து கூட்டங்களில் ஆராயப்பட்டு அது அங்கீகரிக்கப்பட்டதென்பதே உண்மையாகும். இறுதியில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கமே உடன்படிக்கையைச் கைச்சாத்திட்டது.

அகஸ்டா வெஸ்ட் லான்டுக்குப் பொருத்தமான முறையில் நடைமுறை நுட்பங்கள் மாற்றியமைக்கப்படுவதை உறுதிசெய்வதற்காக முன்னாள் விமானப்படைத்தளபதி எயார் சீவ் மார்சல் எஸ்.பி.தியாகிக்கு பணம் கொடுக்கப்பட்டதாக இத்தாலிய வழக்கு தொடுநர்கள் கூறுகிறார்கள். தியாகியின் உறவினர்களுக்கு 1கோடியே 20 லட்சம் யூரோக்கள் அல்லது 86 கோடி ரூபா கொடுக்கப்பட்டதாகவும் அகஸ்டா வெஸ்ட் லான்ட்டிற்கான இடைத்தரகர்கள் எஸ். பி. தியாகியை 6 தடவைகள் சந்தித்து உடன்படிக்கை குறித்து கலந்துரையாடியதாகவும் அவர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் தியாகியும் அவரது சகோதரரும் குற்றச்சாட்டுகளை நிராகரிக்கிறார்கள்.

ஏல நடைமுறைகளில் மாற்றங்களைச் செய்யுமாறு 2003 ஆம் ஆண்டில் வேண்டிக்கொள்ளப்பட்டது. அந்த வருடமே அந்த மாற்றங்கள் பூர்த்தி செய்யப்பட்டன. அப்போது பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசாங்கமே அதிகாரத்தில் இருந்தது. பிரதமராக அடல் பிகாரி வாஜ்பாய் இருந்தார். ஆனால் 2006 ஆம் ஆண்டில் புதிய தேவைகள் குறித்து அறிவிக்கப்பட்டது. அப்போது கலாநிதி மன்மோகன் சிங் பிரதமர். பிரணாப் முகர்ஜி பாதுகாப்பு அமைச்சர் எஸ்.பி.தியாகி விமானப்படைத் தளபதி.

ஆரம்ப ஏல பத்திரத்தில் இரு முக்கியமான மாற்றங்களைச் செய்யுமாறு அகஸ்டா வெஸ்ட் லான்ட் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டதாக இத்தாலிய விசாரணை கூறுகிறது. ஹெலிகொப்டர்கள் பறக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்ட உயரம் 18 ஆயிரம் அடியிலிருந்து 15 ஆயிரம் அடியாக குறைக்கப்பட்டது. இது அகஸ்டா வெஸ்ட் லான்டுக்கு அனுகூலமாக அமைந்தது.

பாரதீய ஜனதாக்கட்சி அதிகாரத்தில் இருந்தபோதே இந்த ஊழல் விவகாரம் ஆரம்பமானது என்பதை வலியுறுத்த அரசாங்கம் விரும்புகின்ற அதேவேளை, காங்கிரஸின் கண்காணிப்பின் கீழ் 2010 ஆம் ஆண்டுதான் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது என்று எதிர்க்கட்சி எதிர்வாதம் செய்கின்றது. இத்தாலிய வழக்குத் தொடுநர்களினால் குறிப்பிடப்பட்ட 'அந்தக் குடும்பம்' எது என்பதை அறிய விரும்புவதாகவும் எதிர்க்கட்சி கூறுகிறது. இத்தாலியரான சோனியா காந்தியின் குடும்பத்தை நோக்கியே சுட்டுவிரல் காட்டப்படுவதாகக் கருதப்படுகிறது.

விசாரணைகளில் சம்பந்தப்பட்ட ஆவணங்களைத் தருமாறு இந்தியா விடுத்த கோரிக்கையை இந்த ஊழல் விவகாரத்தை விசாரிக்கும் இத்தாலிய நீதிமன்றம் நிராகரித்துவிட்டது. தகவல்கள் ரகசியமானவை என்று நீதிமன்றம் காரணம் கூறியிருக்கிறது. சாத்தியமானளவு சான்றுகளைத் திரட்டுவதற்காக இந்திய பாதுகாப்பு அமைச்சு ஒரு சிரேஷ்ட இணைச்செயலாளரை இத்தாலிக்கு அனுப்புகிறது. தனது இமேஜை தூய்மையானதாக வைத்திருப்பதில் அக்கறைகொண்டுள்ள இந்திய அரசாங்கம், இச்சர்ச்சை குறித்து விசாரணை ஒன்றை ஆரம்பிக்குமாறு மத்திய புலனாய்வுப் பணியகத்தை (சி.பி.ஐ) கேட்டிருக்கிறது. ஆனால், ஒரு மிகப்பெரிய உண்மையென்னவென்றால் கடந்த 30 வருட காலத்தில் சர்வதேச பாதுகாப்பு ஒப்பந்தங்கள் தொடர்பில் சி.பி.ஐ.யினால் மேற்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய சகல விசாரணைகளுமே முழுத்தோல்வியிலேயே முடிந்திருக்கிறது. ஒரு விவகாரத்தில் மாத்திரம் அதனால் ஓரளவு க்கு வெற்றியைக் காணமுடிந்தது. 1980 களில் ராஜீவ் காந்தி அரசாங்க காலத்தில் இடம்பெற்ற போபோஸ் ஊழல்விவகாரம் அதுவாகும்.

வரவு-செலவுத் திட்ட கூட்டத்தொடருக்கான பாராளுமன்றம் கூட இருக்கும் நிலையில் இந்த ஊழல் விவகாரங்களைப் பயன்படுத்தி அரசாங்கத்தின் மீது தாக்குதல் தொடுப்பதற்கு பாரதீய ஜனதா தயாராகின்ற அதேவேளை, அரசாங்கம் தான் தூய்மையானதென்று காட்டவிரும்புகின்றது. மன்மோகன் சிங், அந்தோனி போன்ற கைசுத்தமான தலைவர்கள் தங்களின் கீழ் இருக்கும் அமைச்சுகளில் ஊழல்களை தடுக்கமுடியாமல் இருந்திருக்கிறார்கள் என்பது உண்மையே. பாராளுமன்றத்தில் கடுமையான கேள்விகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் அந்தோனி இருக்கிறார். அந்தோனியின் 50 வருட கால பத்திரிகைத்துறை நண்பர் ரி.வி.ஆர்.ஷெனோய் இவ்வாறு கூறுகிறார்; 'அந்தோனியின் நேர்மையினால் கூட இத்தடவை அரசாங்கத்தைக் காப்பாற்ற முடியாது. அமைச்சரவையில் உள்ள மிகவும் நேர்மையான அமைச்சர் அந்தோனி என்பதில் எனக்கு சந்தேகமில்லை. ஆனால் திறைசேரி பணத்தை இழந்திருக்கிறது. இதற்கு அவர் பதிலளிக்கவேண்டியவர்'.

---

*(12ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

அரசியல்-சமூகத் தலைமைகளும் செயல்பட்டால் மட்டுமே தமிழ் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகள் குறித்து ஏதாவது ஒரு தெளிவு பிறக்கும். இதுவல்லாத நிலையில், அடிப்படைப் பிரச்சினைகள் நீண்டுகொண்டே போய், வலுவிழக்கும். அதற்கு மாறாக புதிய பிரச்சினைகளிலும் அவற்றைக் கையாளும் விதத்திலும் சர்வதேச சமூகமும், இலங்கை அரசும் தமிழ் அரசியல் தலைமைகளும் தங்களது நேரத்தை மீண்டும் ஒரு முறை விரயப்படுத்தும். இடைக்கால வெற்றிகளை வெறியுடன் கொண்டாடும்.

மழை ஓய்ந்து வானம் தெளிந்து, தெளிவு பிறந்ததும், சர்வதேச சமூகமும் தமிழ்த் தலைமையும் 'உன்னால் நான் கெட்டேன், என்னால் நீ கெட்டாய்' என்றபடி பழைய பல்லவியைப் பாடும். உள்நாட்டில் அரசும் தமிழ்த் தலைமையும் கூட அந்த கீறல் விழுந்த 'ரெக்கார்டை'-யே போட்டு அடுத்தவரைக் கேட்க வைக்கும். அடிபட்டுப் பழகிப் போன அப்பாவித் தமிழ் மக்களும், 'இந்த விடயத்தில் மட்டுமாவது நமது எதிர்பார்ப்பு பொய்த்து விடவில்லை' என்ற விரக்தி நிலையில் பெறும் வெற்றிக் களிப்பில் சில நொடிகளாவது தங்களைத் தாங்களே நொந்து கொண்டு, தங்களது தலைவிதியையும் நொந்து கொள்வார்கள். வேறு வழி?



சர்வதேச அரசியல்

# சர்வதேச நெருக்குதல்களுக்கு பணிய மறுக்கும் பாதையில் வட கொரியாவின் இளந்தலைவர்

தனது தலைமைத்துவத்தை நிரூபித்துக் காட்டுவதற்கும் வம்ச ஆட்சியை நியாயப்படுத்துவதற்கும் கிம்மினால் காட்டப்படக்கூடிய மிகப்பெரிய சாதனைகளை பிரதிபலிப்பவையாக வடகொரியாவின் அணு மற்றும் ரொக்கெட் திட்டங்கள் விளங்குகின்றன



ஷுசாங் ஹுன்

வடகொரிய ஜனாதிபதி கிம் யொங் உன் அமெரிக்காவினால் விடுக்கப்பட்ட எச்சரிக்கைகளை மாத்திரமல்ல, தனது நேச அணியான சீனாவிடமிருந்து வந்த எச்சரிக்கைகளையும் அலட்சியம் செய்து அணு வெடிப்புச் சோதனையொன்றை இம்மாத ஆரம்பத்தில் செய்தார். தனது நாட்டு மக்கள் மத்தியில் தான் ஒரு பெறுமதியான தலைவர் என்று தனது அந் தஸ்தை உயர்த்திக் கொள்வதற்காகவும் எதிரிகள் என்று தனது அரசாங் கம் கருதுகின்ற நாடுகள் பாரதூரமாக நோக்க வேண்டிய எதிரி என்று தன்னைக் காட்டிக் கொள்வதற்காகவும் கிம் மேற்கொண்ட முயற்சியே இது.

2011 பிற்பகுதியில் தந்தையார் கிம்யொங் இல் மரணமடைந்ததைத் தொடர்ந்து அந்த இராணுவவாத ஆட்சியை பொறுப்பேற்ற போது கிம்முக்கு 30 வயது கூட ஆகவில்லை. நீண்ட காலமாக கஷ்டத்தில் வாழும் வடகொரிய மக்களுக்கு சிறப்பானதொரு வாழ்க்கைத் தரத்தை ஏற்படுத்திக் கொடுக்கப் போவதாக அண்மையில் உறுதியளித்த கிம், சர்வதேச தனிமையில் இருந்து நாட்டை விடுவிப்பதற்கான தலைமைத்துவத்தை வழங்கப்போவதாகவும் நம்பிக்கையூட்டியிருந்தார். ஆனால், அதே





கடந்த டிசம்பரில் வடகொரியா பரீட்சித்த ஏவுகணை

நேரம் தான் கிம் யொங் இல்லின் மகன் என்பதையும் நிரூபித்துக் கொண்டே வந்தார். கடந்த டிசம்பரில் நீண்டதூர ரொக்கெட்டை ஏவினார். சர்வதேசத் தடைகளுக்கு மத்தியிலும் மேலும் கூடுதல் ஏவுகணைப் பரிசோதனைகளையும் அணுப்பரிசோதனைகளையும் செய்யப் போவதாகவும் அச்சுறுத்தல் விடுக்கிறார்.

இறுதியாக இம்மாத ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட அணுவெடிப்புச் சோதனையை நோக்கும் போது அவர் தற்போதைக்கு பணிய மறுக்கும் ஒரு பாதையையே தெரிந்தெடுத்திருக்கிறார் போலத் தெரிகிறது. அதற்கு நிலைமைக்கேற்ற காரணங்கள் இருக்கின்றன என்று அவதானிகள் கூறுகிறார்கள்.

“பிராந்தியத்தில் உள்ள வல்லாதிக்க நாடுகளுடன் உறவுகளை மாற்றியமைத்துக் கொள்வதற்கு கிம் யொங் உன்னிற்கு தற்போது பொருத்தமான தருணம் வந்திருக்கிறது” என்று மசாசூசெட்ஸில் உள்ள ரேவ்றஸ் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் ஒரு வடகொரிய நிபுணரான லீ சுங்-யூன் கூறியிருக்கிறார்.

## பிந்திய ஆத்திர மூட்டல்

பிராந்தியத்தில் உள்ள அரசாங்கங்களில் எந்த ஒன்றுமே வெளியுறவுக் கொள்கை நெருக்கடியொன்றைக் கையாளுவதற்கு விரும்பாத ஒரு நேரத்தில் வடகொரியாவின் பிந்திய ஆத்திரமூட்டல் வந்திருக்கிறது. ரஷ்யா, சீனா மற்றும் ஜப்பான் உட்பட வட பசுபிக்கில் உள்ள சகல வல்லாதிக்க நாடுகளுமே அண்மையில் தலைமைத்துவ மாற்றங்களைக் கண்டிருக்கின்றன. தென்கொரியாவும் கூட தலைமைத்துவ மாறுதலின் நடுவில் இருக்கிறது. ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் பார்க் கியுன் - ஹை பெப்ரவரி 25ஆம் திகதி பதவியேற்கிறார்.

பிராந்தியத்தில் சஞ்சலத்தை ஏற்படுத்தும் வடகொரியாவின் பிரயத்தனங்கள் கடந்த டிசம்பரில் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான நீண்டதூர ஏவுகணைப் பரிசோதனை மற்றும் செய்மதியொன்றை விண்ணுக்குச் செலுத்துதல் ஆகியவற்றுடன் ஆரம்பித்தன. வறுமைப்பட்ட வடகொரியா விண்ணுக்கு அனுப்பிய முதல் செய்மதி இதுவாகும். இந்த நடவடிக்கைகள் வடகொரியாவுக்கு எதிரான தடைகளை மேலும் கடுமையாக்குவதற்கு ஐக்கிய நாடுகளை உந்தின. ஐ.நா. பாதுகாப்புச் சபையில் வடகொரியாவின் ஒரேயொரு பிரதான பாதுகாவலர் என்று கருதப்படுகின்ற சீனா கூட, தடைகளை ஆதரித்ததுடன், கிம் யொங் உன்னின் அரசாங்கத்தைக் கண்டிக்கவும் செய்தது. ஆனால், செய்மதி செலுத்துவதில் காணப்பட்ட வெற்றியும் கிம்முக்கு பெரும் ஊக்கத்தையளித்ததுபோல் தெரிகிறது.

“உள்நாட்டிலும் சரி, சர்வதேச ரீதியிலும் சரி தனக்கு அனுகூலமானவையாக அமையக் கூடியவையென்று காண்பவற்றைத் தொடர்ந்து முன்னெடுப்பதில் கிம் நாட்டம் காட்டுகிறார் போல் தோன்றுகிறது. சீனாவிடமிருந்து எச்சரிக்கைகள் வருகின்றபோதிலும் கூட, எந்த எச்சரிக்கையையும் செவிமடுப்பதில் அவர் அக்கறை காட்டுவதாக இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருப்பது தானே என்ற செய்தியைக் கூறுவதில் நாட்டம் கொண்டிருக்கும் ஒருவராக அவரைக் காணக்கூடியதாக இருக்கிறது” என்று புரூக்கிங்ஸ் நிறுவனத்தில் பணியாற்றும் வடகொரிய விவகாரங்கள் தொடர்பான நிபுணரான ஜொனாதன் டி பொல்லக் கூறுகிறார்.

“அனுபவமற்றவர்” என்றும் “பரீட்சிக்கப்படாதவர்” என்றும் மேற்குலகினால் அடிக்கடி தள்ளுபடி செய்யப்படுகிற இளம் கிம்,மேலும் கூடுதலான தடைகள் விதிக்கப்படக் கூடிய சாத்தியப்பாடுகளினால் அடிபணிந்துவிடக்கூடிய ஒருவரல்ல என்று (அண்மைக்காலத்தில் அவரின் அரசாங்கத்தினால் செய்யப்பட்ட தொடர்ச்சியான பல கடுமையான அறிவிப்புகள் மூலமாக) தன்னைக் காண்ப்பிப்பதற்கு முயற்சித்திருக்கிறார். தற்போது நடைமுறையில் இருக்கும் தடைகளுக்கு மேலதிகமாக தடைகள் விதிக்கப்படும் பட்சத்தில் அது நொந்துபட்டுப் போயிருக்கிற வடகொரியப் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு கிம்மால் தீட்டப்பட்டிருக்கக் கூடிய திட்டங்களை குந்தகத்துக்குள்ளாக்கி, நாட்டை மேலும் தனிமைப்படுத்திவிடக்கூடிய ஆபத்தைக் கொண்டிருக்கிறது.

வடகொரியா அண்மையில் சீனாவைக் கூட கடுமையாகக் கண்டனம் செய்தது. எந்தவொரு பெரிய வல்லரசுக்கும் அடிபணியப் போவதில்லை என்று சூளுரைத்தது. கடுமையான

தேசியவாத உணர்வைக் கொண்ட வடகொரிய இராணுவம் மற்றும் அதிகார உயர் குழாத்தினர் மத்தியில் தனது அதிகாரப் பிடியை வலுப்படுத்துவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கும் கிம்மைப் பொறுத்தவரை இத்தகையதொரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டியது முக்கியமானதாக இருக்கிறது.

தனது தலைமைத்துவத்தை மக்களுக்கு நிரூபித்துக்காட்டுவதற்கும் தனது குடும்பத்தின் வம்ச ஆட்சியை நியாயப்படுத்துவதற்கும் கிம்மினால் காட்டப்படக்கூடிய மிகப்பெரிய சாதனைகளைப் பிரதிபலிப்பவையாக வடகொரியாவின் அணுத் திட்டமும் ரொக்கெட் திட்டங்களும் விளங்குகின்றன. கிம்மின் தந்தையாரின் பிறந்த தினம் பெப்ரவரி 16 கொண்டாடப்பட்டது. அத்தினம் வடகொரியாவில் ஒரு பிரதான விடுமுறையாகும்.

சிறியரக அணுகுண்டுகள் சம்பந்தப்பட்டமட்டில் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட அணுச்சோதனை பெருவெற்றியாக அமைந்ததாக வடகொரியா அறிவித்திருக்கிறது. இது குறித்து பிராந்தியத்தில் உள்ள அரசாங்கங்களிடமிருந்து உடனடியாக உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை. வடகொரியாவின் உரிமை கோரலை அவ்வாறு உறுதிப்படுத்திக் கொள்ள முடியாவிடினும்கூட, இது பிராந்திய அரசாங்கங்கள் மத்தியில் குறிப்பிடத்தக்களவுக்கு கவலையையே ஏற்படுத்தக்கூடியதாகும். அத்துடன் வடகொரியாவின் அணு மற்றும் ஏவுகணைத் திட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்கான இராஜதந்திர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தையும் உணர்த்தி நிற்கிறது.

வடகொரியாவின் அணுச்சோதனை (அதன் மட்டுப்படுத்தப்பட்ட புளூட்டோனியம் கையிருப்புக்கு அப்பால்) யுரேனியத்தை செறிவூட்டுவதற்குப் பயன்படுத்தப்படுமானால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும். அணுவாயுதப் பரம்பல் அச்சுறுத்தல் தொடர்பில் புதிய ஒபாமா நிருவாகத்திற்கு வடகொரியா ஒரு பெரிய பிரச்சினையாக மாறும். பிராந்தியத்தின் ஏனைய வல்லாதிக்க நாடுகளின் கொள்கைகளையும் சிக்கலாக்கும் வடகொரியா தொடர்பில் புதிய கொள்கைகளை தென்கொரியாவின் புதிய ஜனாதிபதி முன்னெடுப்பதையும் அணுச்சோதனை கஷ்டமாக்கிவிடும்.

சீனத்தலைமைத்துவத்தின் மனப்பான்மைகளும் வடகொரியாவைக் குற்றங்காண்பனவாகவே தொடர்ந்தும் இருக்கின்றன என்று அரசியல் அவதானிகள் கூறுகிறார்கள். வடகொரியாவின் அணுவாயுத நாட்டம் தொடர்பில் அதிருப்தியுற்றிருக்கின்றதற்கு மத்தியிலும், அந்நாட்டுக்கான எண்ணெய் விநியோகத்தையோ ஏனைய பொருளாதார விநியோகங்களையோ துண்டிப்பதற்கு சீனா நீண்டகாலமாகவே மறுத்துவருகிறது. வடகொரியாவின் ஸ்திரப்பாடு குலைந்துவிடுமென்ற பயமே இதற்குக் காரணமாகும்.

சீனாவின் புதிய தலைமைத்துவம் அதன் முந்திய தலைமைத்துவங்கள் கடைப்பிடித்துவந்த விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையைத் தொடர்ந்து பேணுமா? அல்லது சீனா அதன் அணுகுமுறைகளை மறுமதிப்பீடு செய்யக்கூடியதாக வடகொரியாவின் நடத்தைகள் சீனாவின் நலன்களுக்கு முரணானவையாகுமா? கொரியாவில் மிகவும் ஆபத்தானதும் தீர்க்கமானதுமான கட்டத்தை நாம் அடைந்திருக்கிறோம் என்று புரூக்கிங்ஸின் ஜோன் எல். தோர்ன்றன் சீனா நிலையத்தின் தலைவராக இருக்கும் பொல்லக் கூறியிருப்பது முக்கியமாக கவனிக்கத்தக்கதாகும்.

**(ஷுசாங் ஹுன் புலிட்சர் விருது பெற்ற தென்கொரிய பத்திரிகையாளர்)**



*(41ஆம் பக்கத் தொடர்ச்சி...)*


வீரபாண்டி ஆறுமுகம். அவரும் சமீபத்தில் மறைந்து விட்டார். இப்போதைக்கு தி.மு.க. விற்குள்தான் தலைவர் பதவிக்கு வருவதற்கு எதிர்ப்பாக இருப்பவர் கனிமொழி மட்டுமே என்று ஸ்டாலின் தரப்பு நினைக்கிறது. அந்த கனிமொழி 'பரிந்துரைத்து' திருமண விழாவில் குஷ்பு பேசியதுதான் ஸ்டாலின் தரப்புக்கு கோபம். குஷ்புவின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல் கனிமொழிக்கும் ஒரு பாடமாக அமையட்டும் என்பதே ஸ்டாலின் குடும்பத்தினரின் நினைப்பு என்கிறார்கள் கட்சியின் மூத்த தலைவர்கள். தன் மீது 22க்கும் மேற்பட்ட வழக்குகள் போடப்பட்ட போது, 'நான் ஒரு ஃபைட்டர்' என்று பேட்டி கொடுத்தார் குஷ்பு. ஆனால் தற்போது அந்த மனநிலையில் குஷ்பு இல்லை. தனக்கு எதிர்காலம் தி.மு.க.வில் இல்லை என்பது குஷ்புவிற்கு புரிந்துவிட்டது. ஆகவே அரசியல் துறவறத்தை நோக்கி குஷ்பு இப்போது 'அதிவேக' நடை போட்டுக் கொண்டிருக்கிறார்!

# கமலினால் இந்தியாவிலிருந்து வெளியேற முடியுமா?

கோயம்புத்தூரிலோ அல்லது பெங்களூரிலோ இயல்பாக பெறுகின்ற ரசிகர்களின் நெருக்கத்தை லொஸ் ஏஞ்சல்ஸிலோ அல்லது லண்டனிலோ அவரால் பெற முடியாது.



நீங்கள் நாட்டுக்கு வெளியே சென்றுவிட முடியும். ஆனால் நாட்டை உங்களிலிருந்து எடுத்துவிட முடியாது



ரி.ஜே.எஸ்.ஜோர்ஜ்

கமலஹாசன் கோயம்புத்தூரிலோ அல்லது பெங்களூரிலோ இயல்பாகப் பெறுகின்ற ரசிகர் பிணைப்பை லொஸ் ஏஞ்சல்ஸிலோ அல்லது லண்டனிலோ பெறமுடியாது.

ஒருவர் தனது சொந்த நாட்டை விட்டு ஓட முடியுமா? வெளிநாட்டுக்குச் சென்றுவிடப்போவதாக கமலஹாசன் கூறியபோது அவர் மிகவும் விரக்தியும் கோபமும் அடைந்திருந்தார். சுபாஸ் சந்திரபோஸையும் எம்.எவ்.ஹுசெய்னையும் இரு முன்னுதாரணங்களாக அவர் காட்டினார். ஆனால், அவ்விருவரும் உண்மையில் வேறுவிதமாகவே தங்களை நிரூபித்துக்கொண்டார்கள். நீங்கள் நாட்டுக்கு வெளியே சென்றுவிட முடியும். ஆனால், நாட்டை உங்களில் இருந்து எடுத்துவிட முடியாது.

இந்தியாவுடன் இருப்பதற்காகவும் இந்தியாவுக்காகப் போராடவுமே போஸ் இந்தியாவைவிட்டு வெளியேறினார். பிரிட்டிஷாரின் சட்டப்புத்தகத்தில் அவர் ஒரு போர்க் குற்றவாளியானார். பிரிட்டன் போரில் வென்றபோது அவரால் இந்தியாவுக்குத் திரும்பிவர முடியவில்லை. பரவலாகச் சொல்லப்பட்டதுபோல், போஸ் விமான விபத்தில் மரணமடையவில்லை என்பதற்கு நம்பகமான சான்று இருக்கிறது. அவர் ரஷ்யப் பிராந்தியத்துக்குத் தப்பியோடி பிறகு இந்தியா திரும்பி ஒரு சந்நியாசி போன்று பல வருடங்கள் வாழ்ந்தார்.

ஹுசெய்ன் இந்தியாவை விட்டுச் செல்லவில்லை. அவரது உயிருக்கு மதவெறியர்களினால் ஆபத்து ஏற்பட்டபோது (சல்மான் ருஷ்தியை தத்தெடுத்த நாடு பாதுகாத்ததைப் போன்று) அவரது நாட்டு அரசாங்கம் பாதுகாக்கவில்லை. ஹுசெய்னுக்கு முக்கியமானது எதுவோ அதை அவர் தொடர்ந்து செய்வதற்கு வசதியாக வெளிநாட்டில் அளிக்கப்பட்ட தஞ்சத்தை ஏற்றுக்கொண்டார். எங்கு

வாழ்ந்தாலும் அங்கெல்லாம் 'ஒரு இந்திய ஓவியர்' என்று அறியப்பட வேண்டுமென்றே விரும்பியதாக ஹுசெய்ன் கூறியிருந்தார்.

சரித்திரத்தின் பல மகத்தான மனிதர்கள் அடிப்படைவாதச் சக்திகளினால் அவர்களின் நாடுகளிலிருந்து விரட்டப்பட்டார்கள். அல்பேர்ட் அயன்ஸ்ரீன் தனது சொந்த நாடான ஜேர்மனியில் ஒரு ஆசிரியராகவே ஆசைப்பட்டார். ஆனால், அவர் ஒரு யூதர் என்பதால் அது மறுக்கப்பட்டது. அதன் விளைவாகவே ஜேர்மனியின் இழப்பு அமெரிக்காவுக்கு ஆதாயமாகியது. இன்னொரு யூதரான சிக்மண்ட் பிரைட் அவரது நாடான ஆஸ்திரியாவுக்குள் நாஜிகள் பிரவேசித்தபோது அங்கிருந்து தப்பியோடினார். கார்ள் மார்க்ஸும் கூட யூத வம்சாவளியினரே. அவர் ஜேர்மனியில் இருந்து, பிறகு பிரான்ஸிலிருந்து, பெல்ஜியத்திலிருந்து வெளியேற்றப்பட்டார் 'கூடுதலான அளவுக்கு ஆபத்தான' காரணத்துக்காக. அதாவது புதிய பொருளாதாரத் தத்துவங்களுக்காக.

சார்ளி சப்ளின் 40 வருடங்களாக அமெரிக்காவில் வாழ்ந்தார். ஆனால், தனது பிரிட்டிஷ் பிரஜாவுரிமையைக் கைவிடவில்லை. அமெரிக்காவில் செனட்டர் மக்காதியின் வெறித்தனமான கம்யூனிச விரோதப் போராட்டம் அதன் உச்சக்கட்டத்தை அடைந்தபோது, 'கம்யூனிச சார்புடையவர்கள்' என்று குற்றஞ்சாட்டப்பட்ட பெருவாரியான கலைஞர்கள் மற்றும் புத்திஜீவிகளில் சார்ளி சப்ளினும் ஒருவர். சுவிட்சர்லாந்தில் குடியேறிய சப்ளின் 'யேசு கிறிஸ்து ஜனாதிபதியாக வந்தால் கூட, அமெரிக்காவுக்கு நான் திரும்பிப் போக மாட்டேன்' என்று கூறினார்.

இந்தியாவின் மகத்தான எழுத்தாளர்களில் ஒருவரான சாதாத் ஹசன் மன்ரோவுக்கு நேர்ந்த கதியை ஓவியர் எம்.எவ்.ஹுசெய்னின் கதியுடன் ஒப்பிட முடியும். இனவாதச் சிந்தனை கிஞ்சித்தேனும் இல்லாத ஒரு மனிதாபிமானி மன்ரோ. உபகண்டப் பிரிவினை பற்றிய அவரது சில கதைகள் உலகத்தரம் வாய்ந்தவையாக இருந்தன. இருதேச கோட்பாடு பற்றி மன்ரோ கர்ணகடூரமான கேலித்தாக் குதல்களைச் செய்த போது அவரின் ஆளுமையும் ஆற்றலும் அவற்றின் உச்சங்களை எட்டியிருந்தன. திரைப்படத் துறையிலும் அவர் ஒரு பெரிய புள்ளியாக மாறினார். ஆனால், சுதந்திரத்துக்கு ஒரு சில மாதங்கள் கழித்து அவர் திடீரென்று தனது நேசத்துக்குரிய பம்பாயை விட்டு பாகிஸ்தானுக்குச் சென்றுவிட்டார்.

திரைப்படத்துறையைச் சேர்ந்த பெரும்பாலான முஸ்லிம் முக்கியஸ்தர்கள் நடந்து கொண்டதற்கு முற்றிலும் முரணான முறையில் மன்ரோ நடந்து கொண்டார். உதாரணத்துக்கு ஒரு நூர்ஜஹான் வெளியேற, பல கே.அசீவ்களும் மெஹ்பூப் கான்களும் நௌஷாட்களும் டிலிப் குமார்களும் வேறிடம் போகாதிருந்து பம்பாயை பிரமாண்டமான பொலிவூட்டாக வளர்க்க உதவினார்கள். அதே வேளை, திரைப்படதலை நகரம் என்றவகையில் லாகூர் தகர்ந்துபோனது. ஏன் மன்ரோ இவர்கள் எல்லோரையும் விட வித்தியாசமாக நடந்து கொண்டார்? அவர் பணியாற்றிய திரைப்படத் தயாரிப்புக் கம்பெனியான பிலிமிஸ்கானுக்கு வந்து குவிந்த பெருவாரியான வெறுப்புணர்வுக் கடிதங்கள் அவர் அந்தக் கம்பனிக்குள் முஸ்லிம்களை ஊடுருவச் செய்கிறார் என்று குற்றஞ்சாட்டின என்ற விடயம் வெளியில் தெரியவர பல ஆண்டுகள் எடுக்கவில்லை. முஸ்லிம் ஊழியர்கள் பதவி நீக்கம் செய்யப்படாவிட்டால் ஸ்ரூடியோவுக்கு தீவைக்கப்படுமென்று மன்ரோவை வெறுத்தவர்கள் கடிதங்களில் எச்சரிக்கை செய்தார்கள்.

மிகவும் உணர்ச்சி பூர்வமான கவிஞரான மன்ரோ பெரிதும் மனம் புண்பட்டவராக நிம்மதிக்காக மதுவில் தஞ்சமடைந்தார். அவரது மனைவி ஒரு சுயசரிதை எழுத்தாளருக்கு 1968 ஆம் ஆண்டு பின்வருமாறு சொன்னார்; 'இந்தியாவை விட்டு வெளியேறும் உத்தேசம் அவருக்கு இருக்கவில்லை. ஆனால், பிலிமிஸ்தான் கம்பெனி அவருக்கு பணிநிறுத்தக் கடிதமொன்றை வழங்கியது. அதுதான் அவரை நிலை குலையச் செய்தது. உண்மை.... என்னை நம்புங்கள்'.

இந்தியாவை விட்டு வெளியேறியிருந்தும் கூட, அவரது மனப்புண் ஆறவில்லை. அவர் தொடர்ந்து எழுதிக் கொண்டேயிருந்தார். ஆனால், எதுவுமே பெரிய மகத்தான படைப்புகளாக மிளிரவில்லை. இறுதியில் மதுவுக்கு அடிமையாக 43 வயதை அடைவதற்கு முன்னதாக மரணமடைந்தார்.

அயன்ஸ்ரீனைப் போன்றவர்கள் ஒரு ஆய்வுகூடம் கிடைக்கும்வரை பணியாற்ற முடியும். மார்க்ஸ் பிரிட்டிஷ் நூலகத்திற்குள் இருந்து கொண்டுதான் தனது முதற் படைப்பை எழுதினார். ஆனால், கலைஞர்களும் திரைப்படத் தயாரிப்பாளர்களும் தனிமையில் இருந்து செயற்பட முடியாது. அவர்களுக்கு அவர்களது ரசிகர்களுடன் ஊடாட்டங்களைச் செய்வதற்கு வாய்ப்புகள் தேவை. ரசிகர்களிடமிருந்து விடுபட்டால் அவர்கள் தங்களது அகத் தூண்டுதலில் இருந்து விடுபட்டுவிட்டதாக உணருவார்கள். கோயம்புத்தூரிலோ அல்லது பெங்களூரிலோ இயல்பாகவே பெறக் கூடியதாக இருக்கின்ற ரசிகர் தொடர்பை, பிணைப்பை, அவரால் லொஸ் ஏஞ்சல்ஸிலோ அல்லது லண்டனிலோ பெற முடியாது. அவரது மக்கள் எங்கிருக்கிறார்களோ அங்கேதான் அவரது கலை, சகல படைப்பாளிகளையும் போன்று கமலஹாசனுக்கும் முன்னெடுப்பதற்கு போராட்டங்கள் இருக்கின்றன. ஆனால், அவர் அப்போராட்டங்களை உள்நாட்டிலேயே செய்யவேண்டும். எமது தாயை எவ்வாறு மாற்ற முடியாதோ எமது நாட்டையும் அவ்வாறே எம்மால் மாற்றமுடியாது.

***நியூ இன்டியன் எக்ஸ்பிரஸ்***




# சென்னையில் தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு தொடக்கவிழா

தமிழறிஞர் தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு தொடக்கவிழா சென்னையில் உள்ள லயோலா கல்லூரியில் பெப்ரவரி 16ஆம் திகதி நடைபெற்றது. தலைவராக தஞ்சை தமிழ் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் சுந்தரமூர்த்தியும், பொதுச் செயலாளராக அருள் தந்தை அமுதன் அடிகளும் இந்த விழாக் குழுவை சிறப்பிக்க, தமிழக காவல்துறை தலைவராக இருந்த ஐ.பி.எஸ். அதிகாரி ஏ.எக்ஸ்.அலெக்ஸாண்டர் இவ்விழாக்குழுவின் ஆலோசகர். மாலைப் பொழுதில் அரங்கேறிய அந்நிகழ்ச்சியில் "தமிழ் மழை" பெய்தது என்றே சொல்ல வேண்டும்.

தனிநாயகம் அடிகள் இலங்கை, யாழ்ப்பாண த்தை அடுத்த நெடுந் தீவில் பிறந்தவர். எட்டுக்கும் மேற்பட்ட பன்மொழி களில் பயிற்சி பெற்றவர். தமிழகத்தில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் கற்ற இவர்தான் முதன் முதலில் தமிழை உலக அரங்கிற்கு எடுத்துச் சென்றவர். மலேசியாவில் 1966இல் முதல் உலக தமிழ் மாநாட்டிற்கு வித்திட்டவர். இலங்கை பல்கலைக்கழகத்தில் கல்வித்துறை விரிவுரையாளராக பணியாற்றிய இவருக்கு சென்னையில் எடுக்கப்பட்ட விழா மிகவும் சிறப்பாக நடந்து முடிந்தது.

இவ்விழாவில் பேசிய தஞ்சை முன்னாள் துணை வேந்தர் சுந்தரமூர்த்தி, "தமிழ் உரையின் சின்னம் தனிநாயகம் அடிகள்" என்று ரா. சேதுப்பிள்ளையும், "அடிகளாரின் சிறப்பு உலகம் முழுவதும் தமிழைக் கொண்டு சென்றது" என்று டாக்டர் மு.வரதராஜனாரும் பேசியிருக்கிறார்கள். முதன் முதலில் தமிழின் தொன்மையை ஆங்கிலம் மற்றும் பிரஞ்சு மொழிகளில் பரப்பியவர். சுருக்கமாகச் சொல்லப் போனால் தனிநாயகம் அடிகள் ஒரு தமிழ்த் தூதர் என்று புகழாரம் சூட்டினார். "தமிழ் என்பது உணர்வுகளின் வடிவம் என்று எடுத்துரைத்து அந்த தமிழுக்கு உலகத்தமிழ் என்ற அந்தஸ்தை தேடித்தந்தவர் தனிநாயகம் அடிகள். தனிநாயகம் தமிழ் நாயகம்" என்றார் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை செயலாளராக இரு ந்த ஔவை நடராஜன்.

ஆங்கிலப் பேராசிரியர் செல்லப்பன், "மூலை முடு க்குகளில் ஓலைச்சுவடுகளில் இருந்த தமிழை வெளி ச்சத்திற்கு கொண்டு வந்தவர் உ.வே.சாமிநாத அய்யர். அந்த் தமிழை உலகமெங்கும் கொண்டு சென்றவர் தனிநாயகம். அதுமட்டுமன்றி 'கிரேக்க இலக்கியம் குடிமகனை உருவாக்குகிறது. ஆனால் திருக்குறளோ பொதுமனிதனை உருவாக்குகிறது. அதனால் திருக்குறள் மதச்சார்பற்ற இலக்கியம்' என்று புது விளக்கம் கொடுத்தவர் தனிநாயகம்" என்று மனமுவந்து பாராட்டினார்.

அடுத்துப் பேசிய கவிக்கோ அப்துல்ரகுமான், "இன்று தமிழ் உலக மொழியாக இருக்கிறது என்றால் அதற்கு நாம் ஈழத்தமிழர்களுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். உலகத்தின் பல பகுதிகளிலும் தமிழ் பேசப்படுகிறது என்ற பெருமையை தமிழுக்கு சேர்த்துக் கொடுத்திருப்பவர்கள் ஈழத்தமிழ் மக்களே. தனிநாயகம் அடிகளும் அதற்காகவே பாடுபட்டார்" என்று புகழ்ந்தார். இவ்விழாவில் தினமணி ஆசிரியர் வைத்தியநாதன் பங்கேற்று தனிநாயகம் அடிகள், இதழ்கள் எப்படி தமிழை வளர்க்க பாடுபட வேண்டும் என்று விரும்பினார் என்று கூறி, தமிழ் மொழி பற்றிய அடிகளின் "ஐந்து ஆசைகள்" என்ன என்பதை விளக்கிப் பேசினார். இந்த நிகழ்ச்சி முழுவதும் அமர்ந்து தமிழறிஞர் தனிநாயகத்தைப் பாராட்டியதை கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார் "உலக தமிழர் பேரமைப்புத் தலைவர்" பழ. நெடுமாறன் என்பது குறிப்பிடத்தக்கது.

- எம்.காசிநாதன்

# பிளேட் ரன்னர்



## காதலர் தினத்தில் காதலி கொலை

## குற்றவாளிக்கூண்டில் ஒரு உலக சாதனை வீரர்

ரி.எஸ்.கணேசன்

தனது இரு கைகளாலும் முகத்தை பொத்தியவாறு 'பிளேட் ரன்னர்' ஒஸ்கார் பிஸ்டோரியஸ் ஜொகனஸ்பேர்க் நீதிமன்றில் விம்மி விம்மி அழுத போது நெஞ்சு, பொறுக்கவில்லை. இயற்கையாகவே இரு கால்களையும் இழந்த தென் ஆபிரிக்காவின் மாற்றுத்திறனாளியான பிஸ்டோரியஸ் கடந்த வருடம் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில், சாதாரண வீரர்களுடன் இணைந்து பங்கேற்றுச் சாதித்த போதுதான் உலகம் இவரைக் கண்டு வியந்தது. முழங்கால்களுக்கு கீழே காபன் இழையிலான தகடுகளை பொருத்திக் கொண்டு இவர் ஒலிம்பிக்கில் ஓடிய போது இவரது வெற்றிக்காக முழு உலகுமே பிரார்த்தித்தது. ஊனம் என்பது உடலிலிருந்தாலும் அது உள்ளத்தில் இல்லை என்பதை இவர் நிரூபித்தபோது, இயற்கையால் வஞ்சிக்கப்பட்ட பல கோடிபேருக்கு வாழ்வின் மீதே ஒரு பிடிப்பு வந்தது. அப்படிப்பட்டதொரு வீரர் இன்று சிறைக்கம்பிகளுக்கு பின்னாலும் நீதிமன்றின் முன்னாலும் விம்மி வெடித்து அழும்போது அழுவதா, சிரிப்பதா எனத் தெரியாதுள்ளது.

உலகில் மிக அதிகமான வன்முறைகளும் குற்றச் செயல்களும் நடைபெறும் நாடுகளில் தென் ஆபிரிக்காவும் ஒன்று. இந்த நாட்டில் பெரும்பாலானோர் துப்பாக்கிகளைப் பெற்றுள்ளனர். இதன் மூலம் நடைபெறும் குற்றச் செயல்களும் இங்கு மிக அதிகம். இதன் பிந்திய பதிப்பாக உலகப்

புகழ்பெற்ற தடகள வீரரொருவர் இன்று குற்றவாளிக் கூண்டில் நிறுத் தப்பட்டுள்ளார். காதலர்கள் கொண் டாடும் காதலர் தினத்தில் இவர் தனது காதலியைச் சுட்டுக்கொன்ற குற்றத் திற்காக நீதிமன்றில் நிறுத்தப்பட் டுள்ளார். தன்னை உயிருக்கு உயிராக நேசித்தவரை இவர் திட்டமிட்டுக் கொன்றுவிட்டதாக இவர் மீது கடு மையான குற்றச்சாட்டு சுமத்தப்பட் டுள்ளது. ஆரம்பத்தில் இது, தவறுத லான புரிதலின் அடிப்படையில் தூக்கக் கலக்கத்தில் இடம்பெற்ற கொலையெனக் கருதப்பட்டபோதும் நாளுக்கு நாள் வரும் தகவல்கள் அவ்வாறில்லை. தனது காதலியை 'பிளேட் ரன்னர்' திட்டமிட்டே கொன்று விட்டாரென்று எண்ணத் தோன்றுகிறது.

இறந்தவர் ரீவா ஸ்ரீன் கெம்ப் என்ற மொடல் அழகி என்பதுடன், பத்தி ரிகை கவர்ச்சிப் பட நட்சத்திரமும் கூட. முன்னர் இன்னொருவர் காதலி யாக இருந்தபோதும் இறக்கும்போது அவர், தனது இறப்புக்கு காரணமான 'பிளேட் ரன்னர்'ரின் காதலியாக இருந்துள்ளார். மிகமோசமான துப் பாக்கிச் சூட்டின் மூலம் இவர் படு கொலை செய்யப்பட்டுள்ளதாக குற் றஞ்சாட்டப்பட்டுள்ளது. ஆனால், இவரைக் கொன்றதாக குற்றஞ்சாட் டப்படும் இவரது காதலனான பிளேட் ரன்னர் பிஸ்டோரியஸோ, அப்படி எதுவுமேயில்லை. தவறுத லாக சுட்டுவிட்டதாகக் கூறி வருவது டன், நீதிமன்றில் குமுறிக் குமுறி அழுகின்றார். இறந்த பெண்ணின் தலையிலும் மார்பிலும் இடுப்பிலும் ஐந்து குண்டுகள் பாய்ந்துள்ளன. துப் பாக்கிச் சூட்டை விட தலையில் பல த்த அடிகாயமும் காணப்படுகிறது. இரத்தம் தோய்ந்த நிலையில் கிரிக் கெட் துடுப்புமட்டையும் 9 மில்லி மீற்றர் கைத் துப்பாக்கியும் பிஸ்டோ ரியஸ் வீட்டிலிருந்து மீட்கப்பட்டுள் ளன. ஸ்ரீன் கெம்பின் உயிரைப் பறித் தது இந்தத் துப்பாக்கிதான். அவர் கொல்லப்பட முன் அவரது தலை மீது கடும் தாக்குதல் நடத்தப்பட்ட தற்கு, அங்கு இரத்தம் தோய்ந்த நிலையில் கண்டெடுக்கப்பட்ட கிரிக் கெட் துடுப்புமட்டைதான் காரணமெ னவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக் கப்படுகிறது.

இந்தச் சம்பவம் உலகெங்கும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது. தென்ஆபிரிக்காவிலும் உல கின் பல பாகங்களிலும் தினமும் ஆயிரக்கணக்கில் மோசமான குற்றச் செயல்கள் இடம்பெற்றாலும் இந்தச் சம்பவம் முழு உலகத்தினதும் கவ னத்தையும் பெரிதும் கவர்ந்துவிட் டது. இதற்குக் காரணம் கொலைக் குற்றஞ்சாட்டப்பட்டு இன்று நீதிமன் றில் நிறுத்தப்பட்டிருப்பவர் உலகம் வியந்த ஒரு விளையாட்டு வீரர். இவர் மீது முன்னர் ஏற்பட்ட அனு தாபமும் பிடிப்புமே இன்று இவர் மீதான கொலை வழக்கு விடயத்தி லும் மக்களின் கவனத்தை பெரிதும் ஈர்த்துள்ளது.

பிஸ்டோரியஸ் பிறக்கும் போது முழங்காலுக்கு கீழ் மூட்டுப் பகுதி யில் பாதிக்கப்பட்டது. இதனால் 11 மாதக் குழந்தையாக இருக்கும் போது, இரு கால்களும் முழங்கா லுக்கு கீழ் வெட்டியகற்றப்பட்டது. எனினும் பின்னர் காபன் நாரிழை களாலான செயற்கைக் கால்கள் பொருத்தப்பட்டன. இதன் மூலமே இவரது வாழ்க்கைக் காலம் ஆரம்ப மானது. இரு கால்களும் இழக்கப்பட் டாலும் செயற்கைக் கால்கள் பொருத் தப்பட்ட நிலையில், சிறு வயதிலேயே கடின பயிற்சிகளை மேற்கொண்டார். இவரது ஆற்றலைப் பார்த்தோர் அதி சயித்தனர். சிறுவனாக இருக்கும் போதே விளையாட்டில், குறிப்பாக தடகளத்தில் சாதனைகளைப் படை த்த போது அனைவரும் வியந்தனர்.



ஒருவாறு இவர் சிறந்த ஓட்டப் பந்தய வீரராக உருவெடுத்தார்.

செயற்கைக் கால்களுடன் விளை யாட்டுலகில் சாதனைகளைப் படைத்த போது இவருக்கு 'பிளேட் ரன்னர்' என்ற நாமம் சூட்டப்பட்டது. இவரது இயற்பெயரை விட 'பிளேட் ரன்னர்' என்ற செயற்கை பெயர் இவரை சிறுவயதிலேயே தென் ஆபி ரிக்கா எங்கும் பிரபல்யமாக்கியது. இதற்கேற்ப இவரும் பந்தயங்களில் சாதனை படைத்தார். பாடசாலைக் காலத்திலும் அதற்குப் பின்னரும் இவரது சாதனைகள் தென் ஆபிரிக் காவை வியக்க வைத்தது. மிகச் சிற ந்த ஓட்டப் பந்தய வீரர்களுக்கு இணையாகவும் அவர்களை விஞ்சும் வகையிலும் ஓடி அவர்களுக்கு கடும் சவால் கொடுத்தார். இது அவரை சர் வதேசப் போட்டிகளில் மட்டுமல் லாது, ஒலிம்பிக் போட்டியிலும் பங் கேற்பதற்கான வாய்ப்பை அளித்தது. முதன் முறையாக மாற்றுத் திறனாளி யொருவர் ஒலிம்பிக்கில் கலந்து கொண்டபோது உலகம் வியந்தது. சில தரப்பிலிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பிய போதும் பல நாடுகள் இவ ருக்கு ஆதரவளிக்க இவரை ஒலிம் பிக்கில் பங்கேற்க சர்வதேச ஒலிம் பிக் சபை அனுமதித்தது. கடந்த வருடம் (2012) சாதாரண வீரர்களு டன் சேர்ந்து ஒலிம்பிக்கில் பங்கேற்ற மாற்றுத் திறனாளி வீரர் என்ற மிகப் பெரும் பெருமையைப் பெற்றார்.

இதற்கு முன் 2008 இல் சீனத் தலை நகர் பீஜிங்கில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான பாராலிம்பிக் போட்டியில் 100 மீற்றர், 200 மீற்றர், 400 மீற்றர் ஓட்டப்பந்தயங்களில் தங்கப்பதக்கம் வென்று அசத்தினார். 2011 ஆம் ஆண்டு உலக சாம்பி யன்ஷிப் போட்டியின் அஞ்சல் ஓட் டத்தில் பிஸ்டோரியஸின் அணி வெள்ளிப்பதக்கம் வென்றது. லண்ட னில் கடந்த வருடம் நடைபெற்ற பாராலிம்பிக் போட்டியில் 400 மற் றும் 4 X 100 மீற்றர் அஞ்சல் ஓட்டத் தில் தங்கப் பதக்கம் வென்றதன் மூலம் இதுவரை ஆறு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார். இதைவிட 2004 இல் ஏதேன்ஸில் நடைபெற்ற மாற் றுத்திறனாளிக்காரகான பாராலிம்பிக் கில் முதன் முறையாக தங்கப்பதக்கம் பெற்றார். 'பிளேட் ரன்னர்' என்ற பெயருடன் தடகள அரங்கில் பிஸ் டோரியஸ் இவ்வாறு சாதித்து வந்த தால், 2012இல் அமெரிக்காவின் 'ரைம்' சஞ்சிகை பட்டியலிட்ட உல களாவிய ரீதியில் பிரபலமான 'முதல் -100' பேரில் இவரும் இடம்பெற் றார். கடந்த ஒலிம்பிக்கிலும் பாராலிம்பிக்கிலும் இவர் பங்கேற்ற போது திறமையான அணி அல்லது திறமையான வீரர் யார் என்று பாராது உலகில் பெருமளவானோர் இவரது வெற்றிக்காகப் பிரார்த்தித்ததை யாரும் மறந்துவிடமாட்டார்கள்.

தடகளத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தாலும் இவரொரு துப் பாக்கிப் பிரியர் என்பது எவருமே அறியாத உண்மை. எப்போதுமே துப்பாக்கியுடன்தானிருப்பார். மோட் டார் சைக்கிளை மிகவேகமாக ஓட்டு வதிலும் ஆர்வம் கொண்டவர். அழ கான பெண்கள், துப்பாக்கிகள், வேகமான கார்களில் மிகவும் விருப் பம் கொண்ட இவரை 'பிளே போய்' என்று அழைப்பார்கள். சில விளை யாட்டுகள் மீது மிகுந்த ஆர்வம் கொண்ட இவர் தனது படுக்கை அறையில் கிரிக்கெட் துடுப்புமட்டை, பேஸ்போல் மட்டை, துப்பாக்கி, இயந்திரத் துப்பாக்கிகளை வைத்தி ருப்பார். படகு ஓட்டுவதிலும் ஆர் வம்மிக்கவர். 2009ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தெற்கு ஜொகனஸ் பேர்க்கில் நதி ஒன்றில் அதிக போதை யுடன், அதிவேகப் படகொன்றில் சென்று மற்றொரு படகின் மீது மோதி யதில் படுகாயமடைந்தார். இவரது மூக்கு, தாடை எலும்பு, முகத்தில் கண் எலும்புகள் உடைந்தன. 180 தையல்கள் போடப்பட்ட நிலையில், ஒருவாறு மீண்டுதான் பின்னர் ஒலிம் பிக் போட்டிகளில் சாதித்தார். இதே ஆண்டு நவம்பர் மாதம் இளம் யுவதி ஒருவரை அடித்ததாக ஒரு நாள் முழுவதும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இவ் வாறு பிஸ்டோரியஸ் பற்றி பல்வேறு தகவல்கள் வெளியாகிக் கொண்டி ருக்கின்றன.

எனினும் தனது காதலியை, உயி ருக்குயிராக நேசித்தவரைக் கொலை செய்யுமளவிற்கு இவர் செல்வாரா என்ற கேள்வி எழுகிறது. காதலர் தினத்தன்று இவரது காதலி இவருக்கு வித்தியாசமாக வாழ்த்துத் தெரிவிப்ப தற்காக அதிகாலை வேளையில் இவ ரது வீட்டினுள் நுழைந்த போதே, ஆழ்ந்த உறக்கத்திலிருந்த இவர் திடீ ரென விழித்து, தனது வீட்டினுள் திரு டன் நுழைந்துவிட்டதாகக் கருதி தவ றுதலாக காதலியை சுட்டுக்கொன்று விட்டதாக ஆரம்பத்தில் கூறப்பட் டது. சம்பவம் நடைபெற்ற இடத்தில் இவரும் இறந்துபோன காதலியும் இருந்ததால் முதலில் இவர் கூறிய தகவல்களையே உலகமெங்கும் ஊட கங்கள் வெளியிட்டன. இதனால், காதலியின் குழந்தைத்தனமான செயல் அவரது உயிரைப் பறித்த தென்ற தலைப்புகளுடன் உலகெங் கும் இந்தச் செய்தி வெளியானது. பிஸ்டோரியஸ் வழங்கிய தகவலுக்க மையவே இந்தச் செய்தி முதலில் வெளியானது. எனினும் இவரது வீட் டினுள் கொலை நடந்ததைத் தொடர்ந்து உள்ளே நுழைந்த பொலி ஸாரும் புலன் விசாரணையாளர் களும் நடத்தி வரும் விசாரணைகள் நாளுக்கு நாள் மாறுபட்ட தகவல் களை வெளிப்படுத்துவதுடன், இது வொரு திட்டமிட்ட கொலையென்ற சந்தேகத்தையும் ஏற்படுத்துவதா யுள்ளது.

இந்நிலையில் இந்த வழக்கில் ஒவ் வொரு நாளும் புதுப் புதுச் செய்தி கள் வெளிவருகின்றன. திருடன் என நினைத்து தவறுதலாக காதலியை சுட் டதாக முதலில் செய்தி வெளியானது. இவர் திட்டமிட்டு கொலை செய்த தாக பொலிஸார் உறுதியாக இருக்க பிணை பெற முடியாமல் சிறையில் பரிதவிக்கிறார்.

புதிய திருப்பமாக பிஸ்டோரியஸ் வீட்டில் இரத்தக்கறை படிந்த கிரிக் கெட் துடுப்பு மட்டை கண்டெடுக்கப் பட்டது. தவிர, ஸ்ரீன்கெம்ப்,

மண்டை ஓடு பலமாக தாக்கப்பட்டிருந்தது. அவர் விழுந்து கிடந்த குளியலறைக்கதவு உடைக்கப்பட்டிருந்ததென்று பிஸ்டோரியஸுக்கெதிராக ஆதாரங்கள் வலுவாகி வருகின்றன. தற்போது, தடை செய்யப்பட்ட போதைப் பொருளான 'ஸ்ட்ராய்ட்' இவரது வீட்டிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இது தவிர, சம்பவத்திற்கு முன்பு அதாவது, அதிகாலை 3 மணி அளவில் பிஸ்டோரியஸ் அளவுக்கு அதிகமாக மது குடித்திருந்ததாக தெரியவந்துள்ளது. இதனால், போதையிலிருந்த பிஸ்டோரியஸ் ஆத்திரத்தில் கொலை செய்தாரா என்பது குறித்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர். இதனால், பிஸ்டோரியஸின் இரத்த மாதிரி சோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதனிடையே கொலை செய்த பின்பு தனது நெருங்கிய நண்பருக்கு போன் செய்த பிஸ்டோரியஸ், மோசமான சம்பவம் நடந்து விட்டது. எனது காதலியை கொன்றுவிட்டேன் என்று கூறிக் கதறி அழுததாகவும் கூறப்படுகிறது.

**நடந்தது என்ன;** தென் ஆபிரிக்க 'ரக்பி வீரர்' பிரான்கோயிஸ் ஹக்கார்டின் காதலிதான் ஸ்டீன்கெம்ப். கடந்த நவம்பரில் பிஸ்டோரியஸின் காதலியானார். தொடர்ந்து ஹக்கார்டுடன் தொடர்பு கொள்வதை இவர் விரும்பவில்லை. சம்பவத்தன்று மாலை 6 மணிக்கு பிஸ்டோரியஸ் வீட்டுக்கு வந்த ஸ்டீன்கெம்ப், இரவு அவருடன் தங்கினார். நள்ளிரவில் ஹக்கார்டிடம் இருந்து எஸ்.எம்.எஸ் வந்தது. இதைப்பார்த்து ஆத்திரமடைந்த பிஸ்டோரியஸ் காதலியுடன் சண்டையிட்டுள்ளார். ஒரு கட்டத்தில், துடுப்பு மட்டையை எடுத்து காதலியின் மண்டையில் அடிக்க அவர் குளியலறைக்குள் சென்று ஒளிந்துள்ளார். உடனே, தனது துப்பாக்கியால் குளியலறைக் கதவு வழியாக சுட்டுள்ளார். தலையில் குண்டு பாய்வதைத் தடுக்க இரு கைகளாலும் மறைத்துள்ளார். இதனால் தான், அவரது கைகளில் காயம் இருந்தது என்று தெரியவந்துள்ளது.

ஸ்டீன்கெம்ப் 6 மணிக்கு வந்தது, பிஸ்டோரியஸ் வீட்டிலிருந்த சி.சி.டி.வி.கமெராவில் பதிவாகியுள்ளது. தவிர, கொல்லப்பட்ட போது இரவு உடையிலிருந்தது, படுக்கை அறை கலைந்திருந்தது போன்றவை, அவர் இரவு தங்கியிருந்ததை உறுதி செய்தன. இதனால், இவ்வழக்கில் இருந்து பிஸ்டோரியஸ் தப்புவது கடினமென்று கூறப்படுகிறது. இருப்பினும் அவருக்கு ரசிகர்களின் ஆதரவு இருந்து வருகிறது.

---

*(21ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

உரிமைகளையும், தேவைகளையும் புறக்கணிப்பதன் மூலமோ இப்பணியினை மேற்கொள்ள முடியாது. போதிய மனிதவளம் இன்மையாலும், தொழிலாளர் நலன்கள் சரியாகப் பேணப்படாமையாலும், அவர்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட் டமையாலும் இன்று பல தோட்டங்களில் தொழிலாளர் தோட்டத் தொழிலைக் கைவிட்டு கிராமங்களுக்கும், தேயிலை சிறு உடைமையாளர்களிட மும், வேறு தொழில்களுக்கும் செல்லும் நிலை அதிகரித்து வருவதனை வெளிப்படையாகவே கண்டுகொள்ள முடிகின்றது. குறிப்பாக, சிறு உடைமையாளர்கள் கவர்ச்சிகரமான சம்பளத்தினை வழங்குவதால் அதிக எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் தோட்டத் தொழிலைக் கைவிட்டு சிறு உடைமையாளர்களிடம் தொழிலுக்குச் செல்கின்றார்கள்.



இன்று சிறு உடைமையாளர்கள் பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு மாபெரும் அச்சுறுத்தலாக மாறியிருப்பதுடன், நாட்டின் மொத்தத் தேயிலை உற்பத்தியில் 65 வீதத்தினை உற்பத்தி செய்கின்றார்கள். இதற்கு காரணம் சிறு உடைமை தோட்டங்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் அர்ப்பணிப்பு, கடின உழைப்பு, தொழில்பற்று மற்றும் முயற்சி ஆகியனவாகும். இத்தகைய அம்சங்களை நாம் பெருந்தோட்டங்களில் காண முடியாது. காரணம் இம் மக்களின் மிகக் குறைந்த சம்பளம், பொதுநல வசதிகளில் முன்னேற்றமின்மை, அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமை மற்றும் உரிமை மறுப்பு ஆகியனவாகும். இவ்வாறான காரணிகளால் போதிய தொழிலாளரின்றி தோட்டங்கள் பல மாத்தளை, கேகாலை, இரத்தினபுரி மற்றும் கண்டி மாவட்டங்களில் மூடப்பட்டு வருகின்றன. இது தொழிலாளர்களின் எதிர்காலத்தை பெரிதும் அச்சத்துக்குள் தள்ளியிருப்பதுடன், அத்தகைய கம்பனிகளும் பாரிய நஷ்டத்தினால் மூடப்பட்டுள்ளன. ஆகவே, இவ்யதார்த்தத்தினை மனங்கொண்டு பெருந்தோட்டக் கம்பனிகளும், தோட்ட நிர்வாகங்களும் செயற்பட வேண்டியது வரலாற்றுத் தேவையாகும். தேயிலைத் தொழில் துறையினையும் தொழிலாளர்களின் எதிர்காலத்தையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பினை உணர்ந்து தோட்ட கம்பனிகள் செயலாற்ற வேண்டும்.

**கட்டுரையாளர்: பேராதனைப் பல்கலைக்கழக அரசறிவியல் துறை விரிவுரையாளர்**

# பொய்யா? பின்வாங்கலா? சாத்தியமற்றதா?

திருச்சபை அதன் அடிப்படை வாதத்தின் முன்பாக விஞ்ஞானியை கைகட்டி வாய்பொத்தி அடங்கி நிற்க வைத்து விட்டதா?



குரோஸியாவின் கரபீனாவிலுள்ள நியன்டதால் அருங்காட்சியகத்தில் காட்சி படுத்தப்பட்டிருக்கும் ஒரு நியன்டதால் குடும்பத்தின் வாழ்க்கை

குந்திதேவியானவள் சூரியனுடன் கூடிக் கர்ணனைப் பெற்றெடுத்தாள் என்கிறது மகாபாரதம். குதிரைத் தலையுடைய அரசகுமாரி மாவிட்டபுரம் வந்தாள் என்கிறது ஐதீகக்கதை. குதிரையின் தலையுடன் மனித உடல் அவளுக்குக் கிடைத்த தாயின் அதற்கான மரபணு எங்கிருந்து வந்தது. அவளது தந்தை ஒரு குதிரையா?

இவை யாவும் ஐதீகங்களும் புராணக் கதைகளும் ஆகும். உண்மையில் ஒரு இன விலங்கு மற்றொரு இனத்தைச் சேர்ந்த விலங்குடன் புணர்வதும் அதன் பயனாக இரண்டும் கலந்ததான உருவத்துடன் ஒரு புதிய மிருகம் உருவாவதும் விஞ்ஞான ரீதியாகச் சாத்தியமில்லாத விடயங்களாகும். மரபணுக்களின் மாற்றங்களூடாக ஏற்படும் பரிணாம வளர்ச்சியின் விளைவாகவே புதிய உயிரினங்கள் தோன்றியிருக்கின்றன.

இலட்சக்கணக்கான வருடங்களில் சூழலின் தாக்கத்தால் படிப்படியாக ஏற்படும் பரிணாம மாற்றங்களை, ஒரு சில மாதங்களில் சோதனைக் குழாயில் ஏற்படுத்திவிட முடியும் என இன்றைய விஞ்ஞான அறிவும் நவீன தொழில் நுட்பங்களும் முயல்கின்றனவா? அல்லது அது வெறும் கனாக் காணல் மட்டும்தானா?

"உங்கள் கருவில் நியன்டதால் குழந்தை வளர உங்கள் கருப்பையை இரவல் தாருங்கள்" போன்ற பரபரப்பான தலையங்கங்கள் மேற்குலக ஊடகங்களில் அண்மையில் வெளியாகியிருந்தன.

இலட்சக்கணக்கான வருடப் பரிமாண மாற்றத்தில்தான் இன்றைய உடல் அமைப்பையும் மூளை வளர்ச்சியையும் தற்கால மனிதன் பெற்றிருக்கிறான்.

மனித இனத்தின் மூதாதையர்களுக்கு இப்பூமியில் குறைந்தது சுமார் 500,000 ஆண்டு சரித்திரம் உள்ளது. முன்பு இது 300,000 ஆண்டுகள் எனக் கருதப்பட்டது. ஆனால் சில காலத்திற்கு முன்பு ஜேர்மனியில் கண்டுபிடிக்கப்பட்ட சில கல்லாயுதங்கள் இதன் காலத்தை முன்நகர்த்தியுள்ளன. அவை கல்லால் செய்யப்பட்ட ஈட்டிகளாகும். மிருகங்களைத் தாக்கிக் கொல்லும் அளவிற்கு கல்லைக் கூராக்கி அதை வலுவான தடியில் பிணைத்து ஈட்டியாகத் தயாரிக்கக் கூடிய தொழில்நுட்பத்தை மனித இனத்தின் மூதாதை இனமான Homo heidelbergensis பல இலட்ச வருடங்களுக்கு முன்பே பெற்றிருந்தன. புராணக் கதைகளின் கற்பனைகளுக்குள்ளும் அகப்படாத பூமியின் யவ்வனக் காலம் அது.

அந்த இனத்திலிருந்து தோன்றி, தற்கால மனித இனத்திற்கு (Homo sapiens) சமாந்திரமாக வாழ்ந்த மற்







வைத்தியக் கலாநிதி
எம்.கே. முருகானந்தன்

றொரு இனம்தான் நியன்டதால் மனித (Homo neanderthalensis) இனமாகும். இந்த நியன்டதால் இனம் முற்றாக அழிந்து 33,000 வருடங்களாவது இருக்கும் என நம்பப்படுகிறது. இந்த நியன்டதால் மனிதக் குழந்தைதான் இப்பொழுது பேசு பொருளாகியுள்ளது.

அவற்றின் எலும்புகள், மண்டை ஓடுகள் போன்றவை பல காலத்திற்கு முன் கண்டறியப்பட்டாலும், சில வருட காலங்களுக்கு முன்னரே நியன்டதால் இனத்தின் மரபணுக் கூறுகளை (DNA) விஞ்ஞானிகளால் பிரித்தறிய முடிந்தது.


# நியன்டதால் குழந்தையை குளோனிங் முறையில் உருவாக்க அழைப்பு

இதைத் தொடர்ந்த ஆய்வுகளின் பயனாக, இன்றைய மனிதனின் மரபணுக்களில் 1 முதல் 4 சதவிகிதம் வரையானவை நியன்டதால் இனத்திலிருந்து வந்ததாக ஆய்வுகள் கூறுகின்றன. இது போன்ற ஆய்வுகளின் அடிப்படையிலேயே ஆதிமனிதனுக்கும் நியன்டதால் மனிதனுக்கும் இடையே புணர்ச்சியும் இனப் பெருக்கமும் நடந்திருக்கலாம் எனச் சில ஆய்வாளர்கள் கருதினார்கள்.

இந்த நிலையில் Harvard Medical School இன் பேராசிரியர் Prof George Church வெளியிட்டதாகச் சொல்லப்பட்ட கருத்துத்தான் ஊடகங்களில் மும்முரமாக அடிபட்டன. "நீங்கள் இளமையும் தைரியமும் துணிகரமுமான பெண் ஆயின் ஒரு நியன்டதால் கருவை உங்கள் கருப்பையில் சுமக்கலாம்" என அழைத்தார். எவரது தூண்டுதலின்றி, தன்னிச்சையான மனவிருப்புடன் தனது ஆய்விற்கு உதவ யாராவது ஒரு பெண்ணை முன்வருமாறு அழைத்ததாகச் செய்திகள் வெளிவந்தன.

மனிதனுக்கு இணையாக மற்றொரு புதிய உயிரினத்தை செயற்கை முறையில் உருவாக்குவதற்கான முன் முயற்சியாகக் கருதப்பட்ட அக்கூற்று பலவிதமான வாதப்பிரதிவாதங்களுக்கு உள்ளானது. தான் அவ்வாறு கூறவில்லை எனப் பின்னர் மறுதலித்திருக்கிறார்.

"குளோனிங் முறையில் ஒரு நியன்டதால் குழந்தை உருவாக்கப்பட்டால் மனித மனம் எவ்வாறு செயற்படுகிறது என்பது பற்றி மேலும் துல்லியமாக அறிய முடியும்" என்பதே அவர் கூற்று. அதாவது "கோட்பாட்டு ரீதியாக உருவாக்கப்பட்டால்" என்று கூறினாராம்.



பேராசிரியர் ஜோர்ஜ் சேர்ச்

உருவத்தில் குட்டையானதும், உடல் முழுவதும் உரோமம் செறிந்ததும், இன்றைய பார்வையில் அவலட்சணமானதும், தொடர்பாடல் திறனற்றதுமான ஒரு குழந்தையைப் பெற்றெடுக்க எந்தப் பெண் முன்வருவாள். எனவேதான் "அவர் முதலில் தன்னில் ஆராய்ச்சியைச் செய்யட்டும்" எனப்பலர் கிண்டலடித்தார்கள்.

தனது உடலைப் பலிக்கடாவாக்கி ஆய்வைச் செய்வதற்கான அர்ப்பணிப்புணர்வு அவருக்கு இருக்கிறதா என்பதைப் பற்றி நாம் அறியோம். ஆனால், அர்ப்பணிப்புள்ள பல விஞ்ஞானிகள் தங்கள் உடலைத் தாரை வார்த்திருப்பதை சரித்திர ஏடுகளிலிருந்து அறிகிறோம். விஞ்ஞான உண்மைகளைக் கண்டறிவதற்காக, அவற்றை உறுதிப்படுத்துவதற்காக அவ்வாறு செய்திருக்கிறார்கள். அறிவியலில் புதிய எல்லைகளை எட்ட வேண்டும் என்ற அவாவில் தம்மையே ஆராய்ச்சிப் பொருளாக்கி இருக்கிறார்கள். தமது காலத்தில் பைத்தியம் என மற்றவர்களால் பட்டம் சூட்டப்பட்டு ஏளனம் செய்யப்பட்ட அத்தகைய பல சுயபரிசோதனையாளர்கள் வரலாற்றில் இன்றும் போற்றப்படுகிறார்கள்.

இருதயத்திற்குள் குழாயைச் செலுத்தி (Cardiac Catheterization) பரிசோதனைகள் செய்வதும் சத்திர சிகிச்சைகள் மேற்கொள்வதும் இன்று சர்வசாதாரண விடயமாகிவிட்டது. ஆனால், 1929ஆம் ஆண்டு ஜேர்மனியரான Werner Forssmann இருதயத்திற்குள் குழாயைச் செலுத்த முதன் முதலில் முற்பட்டபோது சக மருத்துவர்கள் ஆபத்தானது எனக் கருதி ஒத்துழைக்க மறுத்தனர். எனவே இரகசியமாகத் தனக்குத் தானே செய்து கொண்டார். உதவிக்கு ஒரு தாதி மட்டுமே இருந்தார். அவ்வாறு செய்த பின்னரும் இவரது ஆய்வு ஏற்றுக் கொள்ளப்படாது எள்ளி நகையாடப்பட்டது. இதனால் இருதய சிகிச்சைப் பிரிவை விட்டு சிறுநீரகச் சிகிச்சைக்கு மாறவேண்டிய அவலம் நேர்ந்தது. ஆனால் 27 வருடங்களுக்குப் பிறகு 1956இல் தான் இவரது ஆற்றலை மருத்துவ உலகு புரிந்தது. நோபல் பரிசும் கிட்டியது.

மாறாக ரஷ்ய மருத்துவரான Alexander Bogdanov வின் பரிசோதனை முயற்சிகள் அவரது உயிரையே பறித்துவிட்டது. குருதிப் பகுப்பு இனங்கள் பற்றியும், குருதி மாற்றீட்டால் நோய்கள் தொற்றுவது பற்றியதுமான தெளிவான அறிவுகள் இல்லாத காலத்தில் குருதி மாற்றீடு (blood transfusion)பரிசோதனை ஆய்வுகளைச் செய்ய ஆரம்பித்தவர் இவராவார். லெனினின் சகோதரியும்

இவரது முயற்சிகளில் ஆர்வம் காட்டி ஒத்துழைத்துள்ளார். தனக்குத்தானே குருதி மாற்றீடு செய்தார். பரிதாபம். குருதியை இவருக்குத் தானம் செய்த மாணவனுக்கு இருந்த மலேரியாவும், சயரோகமும் குருதி ஊடாக இவருக் குத் தொற்றியதால் தனது உயிரையே பறிகொடுக்க வேண்டிய அவலம் நேர்ந்தது.

இத்தகையவர்கள் சரித்திர காலத் தில் மட்டும் வாழவில்லை. இன்றும் எம்மிடையே வாழ்கிறார்கள். இரை ப்பைப் புண்கள் ஏற்படுவதற்குக் காரணம் Helicobacter pylori என்ற பக்ரீறியா என்பதை இன்று நாம் அறி வோம். ஆனால், இதை நிரூபிப்பதற் காக தனக்குத்தானே அந்த பக்ரீறியா வைத் தொற்ற வைத்தவர் அவுஸ்திரே லியாவைச் சேர்ந்த மருத்துவரான Barry Marshall ஆவார். தனது கோட்பாட்டை சரியென நிரூபிக்க அவரால் முடிந்தது. 2005ஆம் ஆண் டில் அதற்காக நோபல் பரிசும் பெற் றார். ஆனால், சிலரது சுய ஆய்வுகள் முன்னரும் தவறான முடிவுகளையும் தந்துள்ளன.

மஞ்சள் காய்ச்சல் (Yellow fever) பற்றி அறிந்திருப்பீர்கள். இது எங் களது செங்கண்மாரி அல்ல. இது பொதுவாக ஆபிரிக்க மற்றும் தென்அ மெரிக்க நாடுகளில் காணப்படுகிறது. Stubbins Ffirth என்பவர் 1784 -1820 காலப்பகுதியில் வாழ்ந்த ஒரு அமெரிக்கராவார். மஞ்சள் காய்ச்சல் என்பது ஒரு தொற்று நோயல்ல என அவர் திடமாக நம்பினார். இதை நிரூ பிக்க தன்னிலேயே ஆய்வுகளைச் செய்தார். அவர் மருத்துவ மாணவ னாக இருக்கும்போதே ஆய்வுகளில் ஈடுபடுமளவிற்கு மன உறுதியும் அர்ப்பணிப்பும் உள்ளவராக இருந் தார். இந்த மஞ்சள் காய்ச்சலால் பீடிக் கப்பட்டிருந்த ஒரு நோயாளியின் வாந்தியை அவர் தனது உடற் காயங் களுக்குள் முதலில் ஊற்றினார். அவ ருக்கு நோய் தொற்றவில்லை.

இதனால் துணிவு பெற்ற அவர் நோயாளியின் வாந்தி, வியர்வை, குருதி மற்றும் சிறுநீரை தனது கண்க ளுக்குள் ஊற்றினார். உடலிலும் தட வினார். ஆயினும் அப்பொழுதும் அவருக்கு நோய் தொற்றவில்லை.

இறுதியாக நோயாளியின் வாந் தியை உட்கொண்டார். முதலில் மாத் திரை வடிவிலும், பின்னர் நேரடியாக தனது வாயினாலும் உட்கொண்டார். ஆனாலும் அவருக்கு நோய் தொற்ற வில்லை. எனவே மஞ்சள் காய்ச்சல் நோயானது தொற்று நோயல்ல என்ற முடிவிற்கு வந்தார். இதை மருத்துவ உலகமும் அந்நேரத்தில் ஏற்றுக் கொண்டதாகவே தெரிகிறது. ஏனெ னில் அவ் ஆராய்ச்சிகளின் பலனாக இவருக்கு மருத்துவப் பட்டம் கிடைத் தது. ஆனால், அவரது ஆராய்ச்சி முடிவு தவறானது. அது தவறு என்று தெரிய பல தசாப்தங்கள் சென்றன. உண்மையில் அது தொற்று நோய் தான். ஆனால், மனிதனிலிருந்து மனி தனுக்கு நேரடியாகத் தொற்றுவதில் லை. அந்த வைரஸ் கிருமியானது நேரடியாக குருதிக்குள் மட்டுமே தொற்றுகிறது. அதாவது நுளம்புக்கடி மூலம் தொற்றுகிறது என்பதை அமெ ரிக்க இராணுவ சத்திரசிகிச்சை மருத் துவரான Jesse Lazear கண்டறிந் தார்.

நியன்டதால் குழந்தை விடயத்தில் பேராசிரியர் George Church பின் வாங்கிவிட்டார் எனச் சிலர் சொல்கி றார்கள். மதரீதியான Church விஞ் ஞானியும் பேராசிரியருமான Churchயை தன் அடிப்படைவாதத் தின் முன் கைகட்டி வாய்பொத்தி அடங்கி நிற்க வைத்துவிட்டதா?

தனது கூற்று தவறாக விளங்கப்பட் டதாகவே பேராசிரியர் Church கூறு கிறார். அல்லது அவ்வாறு குளோனிங் முறையில் நியன்டதால் குழந்தையை உருவாக்குவதற்கான விஞ்ஞான அறி வும் தொழில்நுட்ப வசதிகளும் இன்ன மும் ஏற்படவில்லை என்றும் நாம் கரு தலாம்.

எவ்வாறாயினும் தூரநோக்கும், பின் விளைவுகள் பற்றிக் கவலைப்ப டாத ஆர்வமும், சற்று அசட்டுத் துணி வும், இருந்தால்தான் மனித குலம் சற் றேனும் எதிர்பாராத விஞ்ஞான கண்டுபிடிப்புகள் சாத்தியமாகும் போலத் தெரிகிறது. ●

*(64ஆம் பக்கத்தொடர்ச்சி)*

வசந்தி தயாபரன் வளர்ந்து வரும் அரிய படைப்பாளி. அவரது 'கால மாம் வனம்' தொகுதியில் உள்ள காலம் தொலைத்த கனவு மிக நல்ல கதை. வாழ்க்கையைச் சொல்ல வேண்டும். அதைப் பரவசத்துடன், சத்தியத் துடன் சொல்ல வேண்டும் என முனை ப்புக் கொள்ளும் இக்க தையில் இலங்கையின் இனங்களுக் கிடையிலான நேசமும் முரண்பாடு களும் பதிவாகின்றன. அத்துடன் மண்சார்ந்த உணர்வுகளும் நினைவுக ளும் (Nostalgia) ரசத்துளிகளாய் சுவையூட்டுகின்றன.


அடுத்துத் தேவமுகுந்தன். இவரது தொகுதி 'கண்ணீரினூடே தெரியும் வீதி.....' தொகுதிக்கதைகள் பல்வேறு பிரச்சினைகளை மையப்படுத்துகின் றன. தொகுதியில் எனக்கு மிகவும் பிடித்தமான கதை 'வழிகாட்டிகள்' இக்கதை கல்விசார் நிர்வாகக் கட்ட மைப்பையும் அதன் சீர்கேடுகளையும் ஒருவகை எள்ளலுடன் கூறுகிறது. கல்விப் புலத்திலுள்ள உயர் அதிகாரி களின் போலி முகங்களைத் தோலு ரித்துக் காட்டுவதுடன், அவர்களது பேச் சும் - செயற்பாடுகளும் இயல் பாய்க்கதையில் அழுத்தம் பெறுகி றது.

அடுத்து ஆர்.எம். நௌஸாத்தின் 'வெள்ளிவிரல்' தொகுதி. இத்தொகு தியில் உள்ள 'மீள்தகவு' கதையும் Establishment ருக்கு எதிரானது. சிவப்பு நாடாத் தொல்லைகள் தாளாது நசுங்கிப்போகும் முகமது யூசுப் அப்துல்லா என்ற ஏழை முஸ்லிமைப் பற்றியகதை. அவரது நிர்க்கதியான நிலை, வாசக மனதில் ஆசிரியரது வல்லபத்தால் அழுத்த மாக அப்பிக் கொள்கிறது.

இவர்களைத் தவிர இராகவனது விட்டில் - சமகால அரசியல் பகுப் பாய்வு, தாட்சாயணியின் அங்கயற் கண்ணியும் அவளது அழகிய உலக மும், மூத்த எழுத்தாளர் நந்தின சேவியரின் நெல்லிமரப் பள்ளிக்கூ டம் ஆகியன அண்மையில் வந்த நல்ல சிறுகதைத் தொகுதிகளாகும். இவை பற்றிப் பிறிதொரு சந்தர்ப்பத் தில் பார்த்துக் கொள்ளலாம். ●

## பனுவல் பார்வை


# கிழக்கிலங்கைச் சடங்குகள்



ஆதிசேனன்

ஈழத்து தமிழ்ச்சூழலில் சமீபத்தில் வெளிவந்துள்ள நூல்களுள் கிழக்கிலங்கைச் சடங்குகள் சமயம்-கலை-அழகியல் என்னும் நூல் சிறப்பானது. இந்நூலை கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் வடிவேல் இன் பமோகன் ஆக்கித்தந்துள்ளார். இதனை குமரன் பதிப் பகம் மிகவும் அழகாகவும் சிறப்பாகவும் வெளியிட் டுள்ளது. இந்நூல் ஆசிரியர் கிழக்குப் பிரதேசத்தைச் சேர்ந்தவர். இதனால் இவரது ஆய்வுக்களம் கிழக்கிலங் கையாக அமைந்திருப்பது மிகப்பொருத்தமானது. இந் நூல் கலை வரலாற்றியல் ஆய்விற்கு மேலும் சிறப்புச் செய்கிறது எனலாம்.

கிழக்கிலங்கையின் ஆரம்பக் கால கலைகளின் மூலங்களை அங்கு நிலவும் சடங்கு வழிபாட் டில் இருந்து இனங்காண ஆய்வு நெறிமுறைகளோடு செய்யப் பட்ட ஆய்வேடு தற்போது நூலுரு பெற்று வெளிவந்துள் ளது. கிழக்கிலங்கையை மைய மாகக் கொண்டு மேற்கொள்ளப் பட்ட இந்த ஆய்வு ஈழத்தமிழ ரின், ஆரம்ப காலத் தமிழரின் கலை தொடர்பான தேடலின் ஒரு பகுதியாக அமைகிறது. கிழக்கி லங்கை கலைகளின் மூலம் பெறப்படும் அழகியல் அனு பவம் பற்றி இதுவரை குறிப்பி டத்தக்க ஆய்வு முயற்சிகள் எது வும் நடைபெறவில்லை. அந்த வகையில் இந்த ஆய்வு முயற்சி கவனிக்கப்பட வேண்டியதாகின் றது.




கிழக்கிலங்கைச் சடங்குகள் பற்றி ஆய்வு பல நிலைகளில் இன்னும் பல தளங்களில் முன்னாய்வுக்குட்பட வேண்டிய பெரும் ஆய்வுப்பரப் பாகும். இருப்பினும் கிழக்கிலங்கை மக்களின் ஆரம்ப கால சமயம் - கலை- அழகியல் முதலான இணைவுக ளின் வெளிப்படுத்துகை தொடர்பான பதிவை இந்த ஆய்வு நுட்பமாகவும் ஆழமாகவும் எடுத்துரைக்கின் றது.

கிழக்கிலங்கை என்பதை பல்வேறு பிரதேசங்களில் கூட்டுக்களமாக விளங்கிக் கொள்ள வேண்டும். குறிப் பாக மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, மூதூர் முதலான நிலவியல் பரப்பைக் கொண்டது கிழ க்கு. ஆகவே மட்டக்களப்பு பிரதேசத்தின் தனித்துவங் கள், சிறப்புகள் யாவற்றையும் உட்கொண்ட ஒற்றைப் பரிமாணமாக மட்டும் கிழக்கை குறுக்கிப் பார்க்க முடியாது. இந்தப் பார்வையை கிழக்கு நிலவியல்வாழ் அனைத்து மக்கள் மீதும் திணிப் பது பொருத்தமானதல்ல. அம்பா றை, திருமலை முதலான நிலவி யல் பகுதிகளின் தனித்துவங்கள், வித்தியாசங்கள், அடையாளங் கள் யாவும் இன்னும் முன்னாய் வுப் பண்புகளைக் கொண்டவை. ஆகவே இந்த எச்சரிக்கை உண ர்வு சமகால ஆய்வாளர்களுக்கு முக்கியம்.

இன்று கிழக்கிலங்கைப் பண்பாடு, கிழக்கிலங்கை கலை வரலாறு முதலான கருத்தாக்கங் களை புரிந்துகொள்வதில் பல் வேறு சிக்கல்கள் உள்ளன. கிழக் குத் தமிழர் பண்பாடு என்பது ஒரு படித்தானது அல்ல. இதனை பன்முகத்தன்மைகளோடு விளங் கிக்கொள்ள வேண்டும். கிறிஸ்த வம், முஸ்லிம் மற்றும் சமஸ் கிருத மயமாக்கலுக்குட்படாத கிராமிய நாட்டார் வழக்காறுகள், சமஸ்கிருத மயமாக்கலுக்கு உட்பட்ட இந்து பண்பாடு களை உள்வாங்கிய சமய மரபுகள் முதலானவற்றின் பின்னணியிலும் கிழக்கிலங்கையை புரிந்துகொள்ள வேண்டும். இந்தத் தன்மைகள் கிழக்கிலங்கை சார்ந்து

மேற்கொள்ளப்படும் ஆய்வு முயற்சிகளில் பெரும் செல்வாக்குப் பெற வேண்டும்.

கிழக்கிலங்கைச் சடங்குகள் என்னும் நூலில் ஆறு அத்தியாயங்கள் உள்ளன. முதலாம் அத்தியாயத்தில் கிழக்கிலங்கைச் சடங்குகளை ஒரு கோட்பாட்டுப் பின்புலத்தினூடாகப் புரிந்துகொள்வதற்கான பரப்பை முன்வைக்கிறது. இயற்கை சமயத்தின் வழிபாட்டு முறையான சடங்குகள் புராதன மனிதனின் கலைச்செயற்பாடுகளுக்கு அடிப்படையாக அமைந்திருப்பதை இந்தப் பகுதி தெளிவுபடுத்துகிறது.

இரண்டாம் அத்தியாயத்தில் முதலாம் அத்தியாயத்தில் விளக்கிய இயற்கைச் சமய வழிபாட்டின் இயல்புகளைக் கொண்டதாக கிழக்கிலங்கைச் சடங்குகள் விளங்குவதன் தாற்பரியத்தை விளக்குகிறது. குறிப்பாக கிழக்கிலங்கை இந்து மக்களிடையே நிலவும் ஆகம வழிபாடு, சடங்கு வழிபாடு சார்ந்து மையம் கொள்ளும் கலை அழகியல் அனுபவங்களை புரிந்துகொள்வதற்கான அறிகைப் புலம் எடுத்துரைக்கப்படுகிறது. மூன்றாவது அத்தியாயத்தில் சடங்கில் பயன்படுத்தப்படும் பொருட்களினதும் வழிபாட்டினதும் கலைக்கூறுகள் பற்றிய தேடலும் ஆய்வுக்கான கூறுகளும் அடையாளம் காணப்படும் முறைமையும் தெளிவாக உணர்த்தப்படுகிறது. சடங்கு வழிபாட்டுடன் தொடர்புடைய பொருட்களை உருவாக்குபவர்களை சடங்குச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய சமூகத்தைச் சார்ந்தவர்கள், சடங்கு செயற்பாடுகளுடன் தொடர்பற்றவர்களென இருவகையாக கிளைவிடும் மரபு சுட்டிக்காட்டப்படுகிறது.

மேலும் சடங்குப் பொருட்கள் நுண்கலைகளான சிற்ப, படிம, ஓவிய அலங்கார கலைகளுக்குரிய கூறுகளைக் கொண்டமைந்துள்ளமையும் அவற்றை உருவாக்கும் திறனுடைய குழுவினரால் அவற்றின் உருவாக்கச் செயற்பாடு முன்னெடுக்கப்படுவதையும் கண்டுகொள்ள முடிகிறது. தொடர்ந்து இவை சடங்கில் பயன்படுத்தப்படும் பொருட்களினூடாக கலை மரபொன்று பேணப்படுவதையும் எடுத்துக்காட்டுகிறது. இந்த மரபு கலையாக அன்றி பக்திசார்ந்த செயற்பாடாக முன்னெடுக்கப்படுவதால் அவற்றை சடங்குப் பொருட்கள் என்கிறோம் என்பதற்கான விளக்கத்தையும் தெளிவாக முன்வைக்கிறது.

இதன் தொடர்ச்சியாகவே சடங்கு நிகழ்த்துகையில் கலைக்கூறுகள் என்பதாக நான்காம் அத்தியாயம் விரிந்து செல்கிறது. நிகழ்கலைக்குரிய அடிப்படைக்கூறுகள், நிகழ்த்துகையை மேற்கொள்வோர் யாவர்?, நிகழ்த்துகைக்கு தயார்படுத்தல் எவ்வாறு?, அலங்காரத்தின் முக்கியத்துவம்.... என பல்வேறு அம்சங்கள் மேலும் விளக்கப்படுகின்றன. கலைத்துவம் மெய்யியல் சார்ந்த அனுபவம் அழகியல் பண்புக்கூறுகளை அடையாளம் காட்டுகிறது.

சடங்குகளின் அழகியல் கூறுகளை நுட்பமாகவும் தெளிவாகவும் முன்னைய அத்தியாயங்களின் நீட்சியாக ஐந்தாம் அத்தியாயம் தொகுப்புரையாகவும் விளக்கவுரையாகவும் அமைந்துள்ளது. சடங்கை இரசிக்கும் சுவைஞனுக்குத் தேவையான அடிப்படைத் திறன்கள், அழகியல் அனுபவத்தை வழங்கும் காரணிகள் முதலானவை தெளிவுபடுத்தப்படுகின்றன. மேலும் சடங்கின் மூலம் பெறப்படும் அழகியல் அனுபவமாகிய கதாசிஸ் என்பது தெளிவுபடுத்தப்படுகிறது. சடங்குகளின் மூலம் நிகழ்த்துவோர், பார்ப்போர் ஆகிய இரு தரப்பினரும் பெற்று அனுபவிக்கும் உணர்வு நிலையை கதாசிஸ் என்பர். இது ஐரோப்பிய கலைப்பாரம்பரியத்தில் அழகியலாளர்களால் பேசப்படும் முக்கியமான தொரு அழகியல் கொள்கையாகும். இதுபற்றி விளக்கமும் இன்னும் விரிவாகத் தரப்படுகிறது.

அத்தியாயம் ஆறில் இலங்கைத் தமிழரின் ஆரம்பகால கலைகளின் கூறுகளைத் தாங்கிய சடங்குகளின் ஒரு பகுதியாக கிழக்கிலங்கைச் சடங்குகள் எவ்வாறு என்பதற்கான தொகுப்புரையாக விரிவாக்கம் பெற்றுள்ளது. கிழக்கிலங்கை சடங்கு நிகழ்துகை சடங்கு நிகழ்த்துகைக்குப் பயன்படும் பொருட்கள் ஆகியவை கட்டிட, சிற்ப, ஓவிய, அலங்கார, நடன, நாடக, இசைக்கலைக்குரிய கூறுகள் பலவற்றைக் கொண்டமைந்து விளங்குகின்றன. தொடர்ந்து சடங்குச் செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் மகிழ்வளிப்பு உளத்தூய்மையாக்கல் அனுபவமாகிய கதாசிஸ் ஆகிய அழகியல் அனுபவங்களை மக்கள் பெறுகின்றனர் என்பதனை ஆழமாகத் தெளிவுபடுத்துகிறது.

கலை வரலாற்றியல் தொடர்பான நூல்களுள் இந்நூலுக்கு தனியான சிறப்பான இடமுண்டு. குறிப்பாக கிழக்கிலங்கைச் சடங்குகள் சமயம் - கலை- அழகியல் சார்ந்து வெளிப்படுத்தும் செய்திகள், உணர்வுகள், அனுபவங்கள் யாவும் கிழக்குவாழ் மக்களின் பண்பாட்டுப் பன்மைத்துவத்தின் சிறப்பார்ந்த கலைக்கூறுகளின் அடையாள உருவாக்கமும் அடையாள வேறுபாடுகள் பற்றிய தேடுகைக்கான ஆய்வுக்கலங்களை இந்நூல் அறிமுகம் செய்கிறது. இந்த ரீதியில் சிந்திப்பதற்கும் மேலும் ஆய்வு செய்வதற்கும் புதிய களங்களை ஆய்வாளர் இன்பமோகன் நமக்குத் திறந்துவிட்டுள்ளார். கல்வி சார் சான்றிதழ் மரபுக்குட்பட்ட ஆய்வாளராக அன்றி சமூகம் சார் சிந்தனையாளராகவும் சமூக ஆய்வாளராகவும் ஒவ்வொரு கணமும் இயங்கும் ஆளுமையாக இன்பமோகன் மேலெழுச்சி பெறவேண்டும். அதற்கடையாளமாக புதிய புதிய நூல்களை, ஆக்கங்களை தமிழுக்குத் தரவேண்டும்.















பார்த்தாலே
புரிகிறதே...
படவிளக்கம்
என்ன வேண்டிக்
கிடக்கிறது?





## கடைசிப் பக்கம்

# புதியவர்களின் படைப்புவெளி

நல்ல எழுத்தை- படைப்பைப் படித்தவுடன் இது நல்லது என்பதைத் தேர்ந்த விமர்சகன் இனங்கண்டு கொள்கிறான். நல்ல வாசகனுக்கும் இந்த நுண்ணிய உணர்திறன் உண்டு. இதனை நாலுபேர் தெரிய எடுத்துரைப்பதும் விமர்சிப்பதும் விமர்சகனது கடமையாகும். இங்கு நமது இலக்கியச் சூழலில் மிக அருந்தலாகவே இது நடைபெறுகிறது. இது கவலைதரும் விடயமாகும்.

இங்கிருக்கும் ஒரு சில விமர்சகர்கள் சூழல் முழுவதையுமே குத்தகைக்கு எடுத்துக் கொண்டவர்கள் போல- வேறு வார்த்தைகளில் கூறுவதாயின் மொத்தச் சூழலையும் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருப்பதான உணர்வுடன்- ஒரு வகை மிதப்புடன் நடந்து கொள்கிறார்கள். தன்னை எப்பொழுதும் முதன்மைப்படுத்தி - முன்னிறுத்தி, அதே சமயத்தில் தம்முடைய போலியான கற்பிதங்களுடன், நல்ல படைப்பாளிகள் மீதும் நல்ல படைப்புகள் மீதும் - தப்பும் தவறுமான குற்றச்சாட்டுகளைக் கொட்டித்தீர்த்து விடுகிறார்கள். இந்தக் கருத்தியல் ரீதியான மோதல் (அவர்களிடம் அப்படியான கருத்தியல் ஏதாவது இருக்கிறதா என்ன?) அல்லது வன்முறை கண்டிக்கத்தக்கது.

இதில் வேடிக்கை என்னவென்றால் முன்னர் நல்ல எழுத்தாகவும் எழுத்தாளனாகவும் இனங்காணப்பட்டவர்கள் ஏதோ ஒரு காரணம் பற்றி, குறித்த அந்த விமர்சகருடன் முரண்பட்டு விட்டால், அல்லது முரண்பட்டு விட்டதாக அவர் நினைத்துக்கொண்டால், சடுதியாக அப்படைப்பாளிகள் ஓரங்கட்டப்படுவதுடன், விமர்சகனது சின்னத்தனமான தாக்குதலுக்கு இலக்காகிவிடுகிறார்கள். பல கோணங்களில் அவர்கள் குரூரமான முறையில் இம்சிக்கப்படுகிறார்கள். இது எத்தகைய நாகரிகத்தின் பாற்பட்டது? எனக்குத் தெரியவில்லை.

இந்தப் பின்னணியில் நல்லதை -நல்லது என்று கூறும் பண்பு, பக்குவம்- நபர்பேதமில்லாமல் - ஒரு சிலரிடம் இருக்கவே செய்கிறது. ஏ.ஜே.கனகரத்தினா மு.பொன்னம்பலம், அம்பை வேதசகாயகுமார், குப்பிழான் ஐ.சண்முகன், மதுசூதனன், ரஞ்சகுமார், சத்தியபாலன், செல்வமனோகரன் ஆகியோர் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவர்கள்.

தடாலடித்தனமான ஒரு விமர்சகனாக இல்லாமல், ஒரு வாசகனாக - என்னை முன்னிறுத்தி, அண்மையில் வெளிவந்த சில சிறுகதைத் தொகுதிகள் பற்றியும் அவற்றிலிருந்து பதச்சோறாய்த் தேர்ந்தெடுத்த சிறு கதைகள் பற்றியும் சிறிது கூறலாம் என நினைக்கிறேன். தொகுதிகளைத் தந்தவர்கள் இளைய தலைமுறையினர் என்பது குறிப்பிடத்தக்கது.



க.சட்டநாதன்

முதலில் யோ.கர்ணனுடைய, 'சேகுவேரா இருந்த வீடு' தொகுதியில் உள்ள திரும்பிவந்தவள் என்ற கதையைப் பார்ப்போம். தமிழில் அண்மையில் வந்த சிறுகதைகளில் இது சிறப்பான ஒன்றாகும்.

பவித்ரா என்ற பதுமையான பெண்ணின் - போராளியின் கதை இது. அவள் போராளி ஆவதற்கு முன்னரும் அதற்குப் பின்னருமான கதைப் பொருளைக் கொண்டது. கதையில் காதலும் உண்டு. மனதைத் தொட்டு ஆழ்ந்த துயரத்தைக் கிளர்த்தும் அனுபவச் செறிவு இக்கதைக்கு உண்டு என்பது மிகை மதிப்பீடல்ல.

புலோலியூர் ஆ.இரத்தினவேலோன் சில காலமாக எழுதி வருகிறார். அவருடைய 'காவியமாய்......ஓவியமாய்....' எனும் தொகுதியில் மெச்சத்தகுந்த கதைகள் இருந்தபோதும் 'தாச்சிச் சட்டி' மிகவும் நல்லகதை.

பெத்தாத்தை, அவளது மகள் சாரதா, வடலித்திடல் வீரன் என்பவர்களைச் சுற்றிச் சுழலும் இக்கதை கிராமத்து மக்களது மன உணர்வுகளையும் ஆதங்கங்களையும் ஆவலாதிகளையும் பட்டும் படாத அளவு சாதியுணர்வையும் அழகாகப் பதிவுசெய்கிறது. அதே சமயம் மண்ணோடும் மனதோடுமாகிவிட்ட இளமை நினைவுகளின் லயிப்பையும் லகரியையும் இக்கதை மிகுந்த சுவையுடன் தருகிறது.

பவானி சிவகுமாரனின் 'குடைபிடிக்கும் நினைவுகள்' கதை அவரது 'நிஜங்களின் தரிசனம்' தொகுதியில் இடம்பெற்றிருக்கிறது. வாழ்ந்து கெட்ட முதியவர் சிவலிங்கத்தைப் பற்றிய கதை இது. அவரது வேண்டாத பிள்ளையான- மூத்த மகனின் வாரிசு துஷி-அவரது பேரன். அவன் புயல் போல அயல் தேசத்திலிருந்து வந்து, சில நாட்கள் அவருடன் வாழ்ந்த உயிர்ப்பான பகுதியைச் சொல்லும் கதை. இக்கதை மனநெகிழ்ச்சியும் அரவணைப்பும் மிகுந்த ஒன்றாகும்.

(60ஆம் பக்கம் பார்க்க...)



EXPRESS NEWSPAPERS (CEY) (PVT) LIMITED
வீ
NEWS ALERTS
வீரகேசரியின் விறுவிறுப்பான செய்திகள்...
உடனுக்குடன் உங்கள் கையடக்கத்தொலைபேசியில் தெரிந்துகொள்ளுங்கள்
டயலொக் : reg (space) virakesari என type செய்து
77007 என்ற
இலக்கத்துக்கு sms அனுப்புங்கள்.
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது. மாதாந்த கட்டணமாக ரூபா. 30/- + வரி அறவிடப்படும்.




Printed and published by Express Newspapers (Ceylon)(Pvt)Ltd,at No.185,Grandpass road,Colombo -14, Sri Lanka.